# ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை




8 அ.

டி. எப். ஆர். ம ஆலி சாஹிப்
எழுதியது

சக்தி பிரசுராலயம், சென்னை

PRESENTED BY:
V. FR. FL. H.

லோகசக்தி மலர்—22

# ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை

(ஓர் அரசியல் ஆராய்ச்சி நூல்)

ஆசிரியர் :

டி. எப். ஆர். மஆலி சாஹிப், (பாகவி)

**லோகசக்தி பிரசுராலயம்,**

21-A, சௌத் கூவம் ரோட்,

மௌண்ட் ரோட் போஸ்டு, சென்னை.

பதிப்புரிமை] 1941 [அணா 8

லோகபானு பிரஸ்,
21-எ, சௌத் கூவம் ரோட்,
கோமளீஸ்வரன்பேட்டை, சென்னை

# காணிக்கை

"நாமிருக்கும் நாடு நமதென்ப
தறிந்தோம்
இது நமக்கே உரிமையா
மென்ப தறிந்தோம்
இந்தப் பூமியில் எவர்க்கு மினி
அடிமை செய்யோம்
பரிபூரணனுக்கே அடிமை
செய்து வாழ்வோம்"

என்ற லக்ஷியம் பூண்டு, அடிமை வாழ்வை வெறுத்துச் சுதந்திர ஆவேசங் கொண்டு, நாடும் நாட்டு மக்களும் க்ஷேமமுற ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக திரிகரண சுத்தியோடு அல்லும் பகலும் அனவரதமும் நற்றொண்டாற்றும் அன்பர் அனைவர் திருச் சமூகங்களுக்கும் இந்நூல் ஒரு காணிக்கை!

ஆசிரியன்

# பதிப்புரை

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு"

என்பது பாரதியாரின் சத்திய வாக்கு. நாட்டின் விடுதலைக்கும், மாந்தரின் முன்னேற்றத்திற்கும், சகல ஜாதி, மதத்தினரின் அன்யோன்யமான வாழ்க்கைக்கும் ஒற்றுமை அத்தியாவசியமாகும். அன்பிழந்த வாழ்க்கை அழிவுறுவது போல், ஒற்றுமையற்ற சமூக அமைப்பும் சின்னபின்ன மடையும்.

பாரத நாட்டின் சுதந்திரத்திற்கும், நன்மைக்கும் அரசியல் யந்திரம் இனிது செல்வதற்கும் இந்து-முஸ்லிம் ஒற்றுமை அத்தியாவசியமாகும். இத்தகைய ஒற்றுமை என்னும் உயரிய நோக்கத்திற்காக உடல், பொருள் ஆகியவற்றால் எண்ணரிய இந்து-முஸ்லிம் தேசபக்தர்கள் இடைவிடாது சேவையாற்றி வருகின்றனர் ஒரு புறம். வகுப்புவாதங் கொண்ட சுய நலவாதிகள் எதிர்ப் பிரசாரஞ் செய்து இடையூறுகள் விளைவித்து வருகின்றனர் மற்றொரு புறம். இந்தியாவின் எதிர்காலச் சுதந்திர அரசியலை நிர்ணயிக்க வேண்டிய இவ்வரிய சமயத்தில், இத்தகைய செய்கையால் பெரும் அரசியல் முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பது துரதிருஷ்டவசமாகும்.

"ஆயிரக்கணக்கான வருடங்களாக இந்நாட்டில் இந்து-முஸ்லிம் வகுப்பினர்கள் அன்புடன் வாழ்ந்து

வருகின்றனர். சமரசமாகவும் சந்தோஷமாகவும் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். மதத்திலும் கலாசாரத்திலும் இரு வகுப்பினர்களும் வேறு பட்டவர்களாய் இருப்பினும், பொது வாழ்வில் ஒன்றுபட்டு, ஒருமித்து வாழ்க்கையை நடத்திவரு கின்றனர். ஆனால், சமீப காலத்திலிருந்து சில வகுப்புவாதிகளின் சூழ்ச்சியால் இரு வகுப்புகளுக் கிடையே வேற்றுமை ஏற்பட்டிருப்பினும், இந்து—முஸ்லிம் ஒற்றுமை சாத்தியமே" என கூறுகின்ற னர் தேச விடுதலையில் ஆர்வங் கொண்ட இந்து—முஸ்லிம் தலைவர்கள்.

"முஸ்லிம்கள் மதத்திலும் கலாசாரத்திலும் மாறு பட்டவர்கள்; சிறுபான்மையினர். பெரும்பான்மை யினராகிய இந்துக்களால் நசுக்கப்படுகின்றனர். எனவே, முஸ்லிம்கள் இந்துக்களுடன் ஒன்றுபட்டு வாழ்வது அசாத்தியம். இந்தியாவை இரு கூறுக ளாக்கிப் பாகிஸ்தான் ஏற்படுத்த வேண்டும்" என ஆத்திரப்படுகின்றனர் வகுப்புவாதிகளாகிய சில முஸ்லிம் தலைவர்கள்.

"இந்தியாவின் சுதந்திரத்திற்குத் தடையாய் இருப்பவர்கள் நாங்கள் அல்ல; இந்தியாவிலுள்ள இரு பெருஞ் சமூகத்தினர்களாகிய இந்து—முஸ்லிம் கள் தான். இந்து—முஸ்லிம்களிடையே ஒற்றுமை யில்லாமையே இந்தியச் சுதந்திரப் பிரச்னை தீர்க்கப் படாமல் இருப்பதற்குரிய முக்கிய காரணம்" என்று வகுப்புவாதப் பல்லவி பாடுகின்றனர் கவர்னர்கள் முதல் இந்தியா மந்திரி வரையிலுள்ள ஏகாதிபத்திய வகுப்பினர்.

இன்று இந்தியாவின் விடுதலைக்குக் காரணமாயிருக்கும் இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு எதிரிடையாயிருப்பவர்கள் பாமரமக்க ளல்ல; இரு வகுப்புகளினிடையே யுள்ள வகுப்புவாதிகளும், அவர்களுக்குத் திரைமறைவிலிருந்து துணைபுரியும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வர்க்கமுமேயாகும். உண்மையாகவே இந்த வகுப்புவாதிகளுக்கும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் இந்து-முஸ்லிம் ஒற்றுமையில் அக்கரை இருக்குமேயாகில், ஒற்றுமை ஏற்படுவதற்காக கிடைத்த பல சந்தர்ப்பங்களை இவ்விரு கூட்டத்தினரும் அசட்டை செய்து வீணாக்கி யிருக்கமாட்டார்கள். இந்தியாவின் சுதந்திரப் பிரச்னையைத் தீர்க்க வேண்டிய இவ்வரிய சந்தர்ப்பத்தில், இந்தியாவில் அமைதியின்மையையும் அதிருப்தியையும் உண்டாக்கி இருக்கமாட்டார்கள்.

தேசம் அமைதியை வேண்டுகிறது. தேசமக்கள் சமாதானத்தையும், சுதந்திரத்தையும் கோருகின்றனர். இயற்கையான இச்சியதிகளுக்கு மாருகவே செயற்கையான வகுப்புவாதிகளின் செயல்களும் ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சியும் நடைபெறுகின்றன. எனினும், இயற்கையின் சக்தியைச் செயற்கையால் வெல்வதென்பது எல்லாக் காரியங்களிலும் சாத்தியமா?

இந்திய தேசம் சுதந்திரம் பெற்று நாடெங்கும் அமைதியும் இன்பமும் பெருக வேண்டுமென்பதும், மக்களிடையே சமரசமும் சகோதரபாவமும் ஏற்பட்டு இந்து-முஸ்லிம் இரு சாராரும் ஒருமித்து வாழ வேண்டுமென்பதுமே இந்நூல் ஆசிரியர் ஜனப் டி. எப். ஆர். மஆலி சாஹிப் அவர்களின் உட்கருத்து. இவ்வரிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே

இந்து—முஸ்லிம் ஒற்றுமைக்குச் சம்பந்தப்பட்ட பல அரிய விஷயங்களை ஆராய்ந்து தெளிவாக எழுதி யுள்ளார் ஆசிரியர். மற்றும் இந்து—முஸ்லிம் சகோத ரர்களின் பண்டைக்கால ஆசார அனுஷ்டானங்களை யும் மேன்மையையும் ஒற்றுமையையும் இந்நூலின் கண் விரிவாக ஆராய்ச்சி செய்துள்ளார். தற்காலம் வகுப்புவாதிகளால் கிளப்பப்பட்டுள்ள அர்த்தமற்ற வாதங்களையும், உபயோகமற்ற சச்சரவுகளையும் போக்கி, இந்து, முஸ்லிம் சமூகத்தினர் இந் நாட்டில் இங்கிதமாக வாழ்வதற்குரிய வழிகளையும் கூறியுள் ளார். சாத்தியமற்ற பாக்கிஸ்தான் பிரிவினைக் கிளர்ச் சிக்கும், அறியாமை நிறைந்த மதக் கலகங்களுக்கும் ஆசிரியர் ஆணித்தரமான பதில் கொடுத்திருப்பதுடன், இந்து—முஸ்லிம் சகோதரர்கள் எத்தகைய சந்தேகமும் பயமுமின்றி சமத்துவமாகவும் சந்தோஷகரமாகவும் வாழ முடியுமென்பதைத் தக்க ஆதாரங்களுடன் இந் நூலில் எடுத்துக் கூறியுள்ளார்.

"மதத்திற்கு ஆபத்து" என்று கூக்குரலிடும் சிலரின் மாய்மாலப் பேச்சுகள் மதியீனமானதென்ப தையும், இந்து—முஸ்லிம் ஒற்றுமையையே இஸ்லாமிய தர்மம் வற்புறுத்துகிறதென்பதையும் நிரூபிப்பதற்காக குர்ஆன், ஹதீஸ், சரித்திரம், லோகானுபவம் முதலிய அரிய ஆதாரங்களையும், நீதி போதனைகளையும் இப் புத்தகத்தினிடையே ஆசிரியர் ஆங்காங்கு எடுத்துக் காட்டி யிருக்கின்றார்.

லோக தயாளரான முஹம்மது நபி (ஸல்) அவர் களும், ஏனைய மதத் தலைவர்களும், சர்வமத சகோதரத் துவத்திற்காகவும், தேச முன்னேற்றத்திற்காகவும்

ஆற்றியுள்ள அருஞ் சேவைகளை இந் நூலில் விளக்க மாகக் கூறியுள்ளார். நவீன நாகரிகத்தைப் பின்பற்றி உலக முஸ்லிம் நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றத் தையும், சிறப்பையும், அதை இந்திய முஸ்லிம்கள் பின் பற்ற வேண்டிய முறையையும், தெளிவாகக் கூறி யுள்ளார்.

இந்நூலாசிரியர் தோழர் ஜனாப் மஆலி சாஹிப் அவர்களைத் தமிழுலகம் நன்கறியும். சென்ற 15 வருஷங்களாக பத்திரிகை யுலகில் ஈடுபட்டு தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக கதைகள், கட்டுரைகள் வரைந்து பத்திரிகையின் வாயிலாக சேவை யாற்றித் தமிழ் மக்களின் பாராட்டுக் குரியவராய் விளங்கும் இவர், தற்போது நாட்டின் விடுதலைக்கு அத்தியாவசிய மான இந்து-முஸ்லிம் ஒற்றுமையைக் குறித்துப் புத்தக வாயிலாகத் தேசத் தொண்டாற்றவும் முன் வந்துள் ளார். இவருடைய முயற்சிக்குத் தமிழ் மக்கள் தக்க ஆதரவு காட்டுவார்களென நம்புகின்றோம்.

லோகசக்தி பிரசுராலயத்தின் 22-வது மலராக இந்நூலை வெளியிடுகின்றோம். நடுநிலைமை நோக்கத் துடன் ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ள இந்நூலை, இந்து-முஸ்லிம் சகோதரர்கள் ஒவ்வொருவரும் படித்துப் பயனடைவார்களாக. தாய் நாட்டின் விடுதலையில் ஆர்வங் கொண்டுள்ள ஒவ்வொருவரும், இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக பாடுபடும் ஸ்தாபனங் களும் இந்நூலை ஆதரிப்பதோடு, பொது ஜனங்களி டையே பரவச் செய்து, எங்கள் முயற்சிக்கு ஊக்க மளிப்பார்களென நம்புகின்றோம்.

**லோகசக்தி பிரசுராலயத்தார்**

# பீடிகை

நம் இந்தியா தேசம் சுதந்திரம் பெற வேண்டும்; இந் நாட்டு மக்கள் எல்லோரும் க்ஷேமமுற வேண்டும். இந்த லக்ஷியம் வெற்றியுற ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை அவசியம். ஹிந்து—முஸ்லிம் சமரஸம் தற்காலம் நம் தேசத்தில் மிகவும் சிக்கலான ஒரு பெரும் பிரச்னையா யிருந்து வருகிறது. கால தேச நிலைமையைக் கவனிக்குமிடத்து, இது இந் நாட்டில் ராஜீய தேசீய பொருளாதார விவகாரங்களைப் பொறுத்த ஒரு பொது விஷயமாகவே இருந்து வருகின்றது. இதை யொட்டி இரு பெரும் சமூகங்களின் (ஹிந்து—முஸ்லிம்) தலைவர்கள் பற்பல துறைகளில் விவாதங்கள் புரிந்து வருகின்றனர். மற்றொரு பக்கம் ஹிந்து—முஸ்லிம் பிரச்னையின் பேரால் வகுப்புவாதம், கட்சிப் பிளவு, மதப் போராட்டம், வேற்றுமையுணர்ச்சி, துவேஷப் பிரசாரம், தேசத்தைக் கூறு போடும் பேச்சு ஆகிய நாசகாரியங்களும் நடைபெற்று வருகின்றன. இதற்கெல்லாம் மூலகாரண மென்ன?

முஸ்லிம்களுடைய கலாசாரமும், ஹிந்துக்களுடைய தர்மமும் ஒன்றுக்கொன்று முரண

யிருந்துவருவதே வேற்றுமைக்குக் காரணமென ஒரு சிலர் கூறுகின்றனர். ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவான ஒரு வாழ்க்கை முறையையும், வழக்காசாரத்தையும் ஏற்படுத்தி சமரஸ போதனை செய்தால், ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட்டுவிடும் என்று மற்றுஞ் சிலர் கூறுகின்றனர். ஆனால், மதப் பிரச்னைகள் தீராத வரையில் இந் நாட்டில் ஹிந்து, முஸ்லிம் களுக்கிடையில் அரசியல், சமுதாய, வாழ்க்கை ஒற்றுமை கூட ஏற்பட மாட்டாதென்று இன்னொரு சாரார் வாதிக்கின்றனர்.

ஹிந்து—முஸ்லிம் பிரச்னையைப் பற்றி வேறொரு கோஷ்டியாரும் ஒரு விசித்திரக் கொள்கை கொண்டுள்ளனர்: ''ஹிந்து—முஸ்லிம்களுக் கிடையில் அரசியல் துறையிலும், இதர தேசீய நிர்மாண விவகாரங்களிலும் ஐக்கியம் ஏற்படுவது சாத்தியம் தான். ஆனால், அனுஷ்டானம், கலாசாரம், பேசும் மொழி ஆகிய வழிகளில் மட்டும் முஸ்லிம்கள் வேருக வும், ஹிந்துக்கள் வேருகவுமே இருந்து தீர வேண்டி யிருக்கிறது இங்ஙனம் தத்தம் போக்கின்படி செல்வதில் தான் அந்தந்த சமூகத்தின் முன்னேற்றம் அமைந்திருக்கிறது'' என்பதே அவ்வபிப்பிராயம்.

அரசியல் துறையில் ஹிந்துக்களும் முஸ்

லிம்களும் கூட்டுறவு ஏற்படுத்திக்கொண்டு தேச விடுதலைக்காக பாடுபடும் பேச்சில், மதப்பிரச்னை களைக் கொண்டுவந்து புகுத்திச் சிக்கலை உண்டு பண்ணுவது கூடாது என்பது தேச பக்தர் களின் கோரிக்கை. "எங்கள் மதத்துக்கும், எங்கள் கலாசாரத்துக்கும், எங்கள் மொழிக் கும் பாதுகாப்பு அளித்தாலல்லாது நாங்கள் அரசியல் துறையில் ஒத்துழைக்க மாட்டோம்" என்பது வகுப்பு உணர்ச்சி மிக்கோரின் பிடி வாதம்.

இத்தகைய சமரஸ வாதங்கள் நடந்து கொண்டிருக்கையில், ஒரு சில அவசரவாதி கள் கிளம்பி, "தற்காலப் போக்கில் ஹிந்துக் களும், முஸ்லிம்களும் ஒருக்காலும் ஒன்று சேர்ந்து வாழ முடியாது; ஆகவே, இந்தியாவை இரு துண்டாகப் பிளந்து ஒன்றில் முஸ்லிம் களை ஒதுக்கிவிடவேண்டும்; மற்றொன்றில் ஹிந் துக்களே இருந்து வாழலாம்" என்று தேசத் தைப் பங்கு பிரிக்கப் பார்க்கின்றனர்.

எனவே, இத்தியாதி பிரச்னைகளையும் ஒரு வாறு சீர்தூக்கிப் பார்த்து, அதனதன் சாதக பாதகங்களை விளக்குவதோடு, பொதுப்படை யாய் எந்த முறை யனுஷ்டித்தால் நாட்டிற்கு அமைதியும், சமூகங்களுக்குச் சுபிக்ஷமும் ஏற் பட்டு தேசம் விடுதலை பெறும் என்பதைச் சுருக்

கமாய் 'எடுத்தோதி, ஹிந்து—முஸ்லிம் ஒற்று மைக்கு வழிகாட்டுவதே இச் சிறு நூலின் லட்சியம். ஆகையால், அன்பர்கள் சிரத்தையுடன் இதில் கூறப்படும் விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, சமரஸ வழியைக் கடைப்பிடிப்பார்களாக.

டி. எப். ஆர். மஆலி சாஹிப்

# ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை

## உலகமும் மாறுதலும்

நிற்கால உலக நிலையைச் சற்றே சீர்தூக்கிப் பார்ப்போமாயின், சகல துறைகளிலும் உலகப் போக்கு புதுப் புரட்சி மயமாய் மாறுதலடைந்து வருவதைக் காண்கின்றோம். உலகம் முன்னிருந்ததைப் போல் இப்போதில்லை. பழைய அபிப்பிராயங்களும் எண்ணங்களும் மாறுபட்டு, புதிய கொள்கைகளும் கருத்துக்களும் இடம் பெற்றுக்கொண்டன. பல நவீனக் கலைகளும், ஆராய்ச்சிப் பயன்களும் வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன. நவீன ஞானமும், பகுத்தறிவும் முதிர்ந்த இக்காலத்தில் எந்த விஷயமும் நன்காராய்ந்து முடிவு செய்யப்படுகின்றது. கல்வி, ஆசாரம் சம்பந்தமான ஒவ்வொரு விஷயமும் இப்படியே அநுஷ்டானத்துக்கு வந்துகொண்டிருக்கின்றது.

இத்தகைய புரட்சியும் மாறுதலும் இந் நவயுகத்தில் தான் ஏற்படுகின்றனவென்று எண்ணவேண்டாம். பண்டைப் புராதன காலத்திலும், உலக விவகாரங்கள் இதே தோரணையில் தான் மாறுபட்டு வந்திருக்கின்றன. கலாசாரம், வாழ்க்கை முறை, நாகரிகம் ஆகிய துறைகளில் பண்டைய மக்கள் கால தேச வர்த்தமானத்துக் கேற்பவே நடந்துகொண்டார்கள்.

கீழ்நாடுகளிலும், ஆப்ரிக்காவிலும் ஐரோப்பிய ஜாதியினர் ஆதிக்கங் கொண்டதும், அவர்கள் ஆங்காங்கு வசித்த சுதேசிகளைச் சிநேகம் செய்து கொண்டு அவர்களுடன் கூட்டுறவு பூண்டு இணங்கி யொழுகிக்கொண்டதோடு, தங்களுடைய கலை, ஆராய்ச்சி, ஒழுக்கம் நாகரிகம் ஆகியவைகளை அந்த சுதேசிகளிடம் பரப்பினார்கள். அங்ஙனம் செய்து சிறுகச் சிறுக அந்நாடுகளில் வாழ்வு முறை, நாகரிகம், பொருளாதாரம் ஆகிய பிரச்னைகளெல்லாம் ஒரே விதமாய் இருக்கவேண்டுமென்று பகீரதப் பிரயத்தனப்பட்டார்கள். இதன் காரணமாய் அந்நாட்டு மக்கள் ஐரோப்பியர்களின் ஒழுக்கம், நாகரிகம், ராஜரீகம், தொழில் முறை ஆகியவைகளை யெல்லாம் ஏற்றுக்கொண்டு, முன்னேற்றமும் சுபீக்ஷமும் அடைந்தார்கள்.

## நாகரிகச் சிறப்பு

இவ்வாறே இந்தியாவிலும் பிரிட்டிஷ் அரசாங்கம் நிலைகொண்ட பின், இந்திய சமூகங்களிடையே தங்களுடைய ஒரே விதமான அரசியலையும், ஒரே விதமான சட்டத்தையும், ஒரே விதமான கல்வியையும், ஒரே விதமான நடை யுடை பாவனைகளையும் ஏற்படுத்தி, மக்களுக்குள் ஐக்கியத்தையும் கூட்டுறவையும் உண்டாக்கினர். அதன் பயனாய் இக்காலை போக்குவரத்துச் சாதனங்கள், ஏற்றுமதி, இறக்குமதி, தந்தி, கம்பியில்லாத் தந்தி, ரயில், ஆகாய விமானம், ரேடியோ ஆகிய நவீன சாதனங்களெல்லாம் ஏற்பட்டு, மேனாடும் கீழ்நாடும் ஒன்றோடொன்று கலந்துறவு பூண்டிருப்பதைக் காண்கிறோம்.

"மேனாடு மேனாடு தான்; கீழ்நாடு கீழ்நாடு தான்;

இரண்டும் ஒன்றாகச் சேராது" என்று ஒரு காலத்தில் எண்ணப்பட்டது. உலக மாறுதலால் அந்த 'அசாத்திய'மும் இக்காலை சாத்தியமாகி வருகிறது. பொதுவாக ஒரு விஷயம் இங்கிலாந்தில் ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டால், அது இந்தியாவுக்கும் பொருந்தியதாயும் நேர்மையாயும் இருக்கிறது. அரசியல், சமூக வாழ்வு, நித்திய கருமம் முதலிய துறைகளில் எத்தனையோ விஷயங்களை நாம் மேனாட்டாரிட மிருந்து கிரகித்துக் கொண்டு, அத்துறையில் ஐக்கிய வாழ்வு நடத்தி வருகின்றோம். இஃதெல்லாம் விஞ்ஞான முதிர்ச்சி யென்னும் நாகரிகத்தின் சிறப்புக்களாகும்.

இத்தகைய மாறுதல்கள் பண்டை நாட்களை விட சென்ற இருபது, இருபத்தைந்து வருடங்களாகத் தான் நம் இந்தியாவில் அபரிமிதமாய் அபிவிருத்தி யடைந்து வருவதைக் காண்கிறோம்.

எகிப்து, துருக்கி, ஈரான் முதலிய முஸ்லிம் நாடுகள் நவீன நாகரிகத்தையும் புதுமைக் கலாசாரங்களையும் ஏற்றுக்கொண்டு துரிதமாய் மாறுதலடைந்ததால் நம் இந்தியாவை விட அவை பன்மடங்கு முன்னேறிச் சென்றிருக்கின்றன. எனவே, இன்று அந் நாட்டார் ஐரோப்பியர்களுக்கு ஈடாக மேன்மை யடைந்து வருகின்றனர்.

முரடர்களென்றும் மலைவாசிகளென்றுங் கருதப்பட்ட ஆப்கானியர்களுங் கூட காலப்போக்குக் கேற்ப மாறுதலடைந்து சிறுகச் சிறுக நாகரிக மக்களாய் பரிணமித்து வருகின்றனர்.

வாழ்வு முறை, ஒழுக்கம், நடை யுடை ஆகியவற்

றில் உலகத்து எல்லா தேச மக்களும் ஒரேவிதமாய் ஆகிவிடுவ தென்பது முடியாத காரியம். ஆனால், தொழில் முறை, கல்வி, ஆராய்ச்சி, நவீனக் கருவிகளி னால் பயனடைதல் முதலிய விஷயங்களில் மட்டும் வித்தியாசமின்றி உலகத்து நாடுகள் ஒன்றோடொன்று இணங்கி வாழ்வது இயலும். சகல மதங்களும் சகல ஆசாரங்களும் போதிக்கும் ஆத்மார்த்த, லோகார்த்தப் பாடங்களே இவை.

பிரிதொரு மதத்திற் குரிய அனுஷ்டான முறை வெவ்வேறாய் இருக்கலாம்; ஆனால், மானிட கோடி கள் லோகார்த்த சுபிக்ஷமும் ஆன்மார்த்த மோக்ஷமும் பெறவேண்டி போதிக்கப்பட்டுள்ள லக்ஷியங்களின் கருத்து ஒன்றேயாகும். இந்த லக்ஷியத்தின் மீது அமைக்கப்பட்டுள்ள மதம் என்னும் மாளிகையானது நவீனக் கலைகளினாலோ, நாகரிக சாதனங்களாலோ சீர்குலைய மாட்டாதென்பது திண்ணம்.

## தாராள இஸ்லாம்

"எல்லா காலத்துக்கும், எல்லா தேசத்துக்கும், எல்லா ஜனங்களுக்கும் ஏற்றது இஸ்லாம்; தற்கால நிலைமைக்கும், வருங்கால மாறுதலுக்கும் வளைந்து கொடுக்கும் நன்மை இஸ்லாத்தில் இயற்கையாய் அமைந்திருக்கிறது" என்பது ஒவ்வொரு முஸ்லி முடைய பிரதான கொள்கையாகும்.

இஸ்லாம் சிலந்திப் பூச்சியின் கூடல்ல. காலப் புரட்சியையும், தேச மாறுதலையும் தாங்கி நிலைத்திருக்க வல்ல கோட்டையே இஸ்லாம். புதிய கலையின் பிர வேசத்தாலோ, நாகரிகச் சேர்க்கையாலோ, விஞ்ஞா

னக் கலப்பாலோ இஸ்லாம் எனும் கோட்டையில் அதிர்ச்சி ஏற்படமாட்டாது. ஆகவே, இஸ்லாமிய மக்கள் தனித்து நின்று, உலக மக்களுடன் கூட்டுறவு கொள்ளாமல், ஏகாங்கியாய் வாழவேண்டுமென்ற குறுகிய நோக்கம் இஸ்லாத்தில் கிடையாது. விஞ்ஞானம் இஸ்லாத்தை உன்னதப்படுத்துகிறது; தேச மக்களின் கூட்டுறவு இஸ்லாத்தை முன்னேற்ற மடையச் செய்கிறது. இஸ்லாமிய ஆசாரத்தில் இந்த இணங்கும் தன்மை பரிபூர்ணமாய் அமைந்திருக்கிறது.

ஆனால், தற்கால முஸ்லிம்களில் பலரின் போக்கு, இஸ்லாம் மதம் நேர்மையாயும் எளிதாயும் காட்டிய உன்னதமான ராஜபாட்டையை விட்டு விலகியதாய் காணப்படுகிறது. அம் முஸ்லிம்களின் அனுஷ்டான முறை சீர்திருத்தப்படவேண்டிய ஸ்திதியிலிருக்கின்றது. இங்ஙனம் முஸ்லிம்கள் தங்கள் மத மூலாதாரக் கொள்கைகளின்படி நடந்துகொள்ளாததால், இஸ்லாத்துடைய சத்தியத்துக்கும் சிறப்புக்கும் எத்தகைய களங்கமும் ஏற்பட்டு விடவில்லை.

## இஸ்லாமும் முஸ்லிம்கள் நிலைமையும்

இஸ்லாம் மார்க்கம் அராபிய நாட்டில் இன்றைக்கு $13\frac{1}{2}$ நூற்றாண்டுகளுக்கு முன் உதயமான புராதன மதம். அன்றைய அராபிய நிலைமை வேறு; இன்றைய உலகநிலை வேறு. 1350 வருடங்கட்கு முன் அராபுகள் எப்படி வாழ்ந்தனரோ, அப்படியே இந் நவீன யுகத்தில் வாழவேண்டுமென்ற பிற்போக்குத் தன்மையை இஸ்லாம் போதிக்கவில்லை. வாழ்க்கை முறையும், நடை யுடை பாவனையும் இன்ன விதமாகத் தான்

சதா இருக்கவேண்டு மென்று இஸ்லாம் கட்டாயப் படுத்தவில்லை. ஆனால், மாந்தர் ஆத்மார்த்தத் துறையில் பரிபக்குவ மடைவதற்கும், பரலோக வாழ்க்கைக்குரிய முக்தி சானத்தை இகத்தில் தேடிக்கொள்வதற்கும் இஸ்லாம் போதித்துள்ள கொள்கைகளிலும் அனுஷ்டானங்களிலும் மாறுதல் ஏற்படவேண்டிய அவசியமில்லை. ஆகவே, முஸ்லிம்களுடைய வாழ்க்கை முறையும் நடையுடையும் உணவு முறையும், கால தேச வர்த்தமானத்துக் கேற்ப மாறுபடுமானால், அதனால் இஸ்லாத்தின் மூலாதாரக் கோட்பாடும் முக்திச் சாதனமும் தகர்ந்து உதிர்ந்து போகமாட்டா.

இஸ்லாத்தின் இந்த தத்துவாம்சங்கள் மிகவும் எளியவை; சாதாரண பகுத்தறிவுடைய பாமரனும் இதனை இலேசாய் உணர்ந்து கொள்ள முடியும். ஆகவே தான், இஸ்லாம் இயற்கைக்கு ஒத்த மத மென்று கூறப்படுகிறது.

## குர்ஆன் போதனை

குர்ஆன் வேத போதனையின் சாராம்சம்—மனிதன் தன் நடவடிக்கைகளைப் பரிசுத்தப்படுத்திக்கொண்டு ஆத்ம சித்தி யடையவேண்டும் என்பதே யாகும். இந்தப் போதனையைக் குர்ஆன் வாக்கியங்கள் பற்பல உபமான உபமேயங்களுடன் வலியுறுத்திக் கூறுகின்றன. ஆனால், உலக வாழ்க்கை முறையைப் பற்றியும், நாகரிக முற்போக்கைப் பற்றியும் ஒரு வரம்பு கட்டி குர்ஆன் வாக்கியங்கள் வியக்தமாய் விவரித்துக் கூறவில்லை.

“எதைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாது”

என்ற 'ஹலால்—ஹராம்' விவகாரங்களைப் பற்றி அநா வசியமாய் குதர்க்கங்கள் புரியக்கூடாதென்று நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) தம் தோழர்களுக்கு (ஸஹாபாக்களுக்கு) தாக்கீது செய்திருந்தார்கள். ஆகவே, நபிகள்பிரானின் காலத்திற்குப் பிறகுங்கூட வாழ்க்கை சம்பந்தமான விவகாரங்களைப் பற்றி ஸஹாபாக்கள் விவாதித்துக் கொண்டது கிடையாது. அங்ஙனம் விவாதிப்பதை ஒரு அருவருப்பான காரியமாய் கருதினர்.

இதற்கெல்லாம் மூலகாரணம் யாதெனின், இஸ்லாத்தின் தாராளக் கொள்கைக்கு முட்டுக்கட்டை ஏற்படக்கூடாதென்பதும், வருங்காலத் தேவைகளுக்கேற்ப லோக அனுபவங்களுக் கேற்ப இஸ்லாமிய மக்கள் நடந்துகொள்ளட்டும் என்பதுவுமேயாம்.

இஸ்லாம் போதகர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இன்னின்ன வஸ்துக்கள் ஹராம்—ஹலால் என பூர்த்தியான ஜாபிதா வொன்றும் தயாரித்து வைத்துச் செல்லவில்லை. அப்பெருமானார் திருவாய் மலர்ந்தருளியதைத் தவிர்த்து மற்றதையெல்லாம் மக்கள் தம் பகுத்தறிவால் உணர்ந்து, உலகானுபவத்துக் கேற்ப அனுஷ்டிக்கட்டும் என்றே சுதந்திரம் அளித்தார்கள். இஸ்லாம் தாராளத்தன்மை வாய்ந்ததென்பதற்கு இதுவு மோர் அத்தாக்ஷி.

உலக விவகாரங்களிலும் தம் மொழிகளையே கண்மூடித்தனமாய் மக்கள் பின்பற்றி நடந்துகொள்ள வேண்டிய அவசியமில்லையென்று நபிகள் நாயகம் (ஸல்) வியக்தமாய் கூறியுள்ளார்கள். உதாரணமாய் ஒரு சம்பவத்தைப் பற்றிக் கூறுகிறேன்:

## "நானும் ஒரு மனிதனே"

அரபு நாட்டில் ஈச்ச மரங்கள் அதிகம். அரபுகள் அதன் சாகுபடியைக் கொண்டு ஜீவிப்பவர்கள். மதீனு வாசிகள் ஈச்ச மரங்களை அதிகம் வளர்த்து வந்தார்கள். பருவ காலத்தில் ஆண் மரத்தின் குருத்துக்களைப் பறித்து வந்து பெண் மரங்களில் பொருத்திவிடுவர். இப்படிச் செய்வதால் சாகுபடி அதிகமாவது வழக்கம். இக்காரியத்துக்குப் பெயர் 'தாபீர்' என்பதாகும். அரபுகள் இப்படிச் செய்வதை ஒரு சமயம் நபிகள் நாதர் (ஸல்) கண்ணுற்றுர்கள். அம்மாதிரி செய்வது அவருக்கு அருவறுப்பாய் புலப்பட்டதுபோலும். எனவே, தம் தோழர்களை நோக்கி, "இப்படி 'தாபீர்' செய்வது எனக்குப் பிடிக்கவில்லை" என்று கூறினுர்கள். அப்படிச் செய்வதை அதுமுதல் அரபுகள் விட்டுவிட்டார்கள். இதன் காரணமாய் அந்த வருஷம் பேரீச்சம்பழம் மாசூல் மிகவும் குறைந்துவிட்டது. ஜனங்கள் நபியிடம் வந்து முறையிட்டனர். அதற்கு அப்போது நபிகள் நாதர் (ஸல்) கூறிய திருவாக்குகள் :—

"நானும் ஒரு மனிதன் தான். உங்கள் மத விஷயமாய் யான் ஏதேனும் கூறினுல் அதை ஏற்றுக்கொள்ளுங்கள். (லோக விஷயங்களில்) யான் என் சொந்த அபிப்பிராயத்தைக் கொண்டு உங்களுக்குக் கட்டளையிடுவேனுனுல், அப்போது நானும் ஒரு சாதாரண மனிதனே."

—ஹதீஸ்

"நிச்சயமாய் யான் ஓர் உத்தேசமாய் எண்ணினேன். எனவே, என் உத்தேசத்தை நீங்கள் பின்

பற்ற வேண்டாம். ஆனால், நான் அல்லாஹ்வின் சார்பாக உங்கட்குப் போதனை செய்வேனானால், அதை ஏற்றுக்கொள்ளுங்கள். ஏனெனின், அல்லாஹ்வின் பெயரால் அசத்தியத்தைக் கூறமாட்டேன்.''

—ஹதீஸ்

முஸ்லிம்கள் தம் சொந்த விவகாரங்களில் சுயேச்சையோடு நடந்துகொள்ள தீனுல் இஸ்லாத்தில் விலக்கொன்று மில்லை யென்பது, மேற்கூறிய ஈச்சமர 'தாபீர்' நிகழ்ச்சியை யொட்டி முஹம்மத் நபி (ஸல்) கூறிய வாக்கியங்களிலிருந்து நன்கு விளக்கமாகிறதல்லவா? முஸ்லிம்கள் கால தேச வர்த்தமானத்துக்கேற்ப பகுத்தறிவுடன் நடந்துகொள்ளப் பரிபூர்ண சுதந்திரம் அளிக்கப்பட்டவர்களா யிருக்கின்றனர்.

பண்டைக்காலத்தில் அரபுகள் போர் தொடுத்த காலை வில், அம்பு, கட்கம், கேடயம் முதலியனவையே உபயோகித்தனர். அதை யுத்தேசித்து இந் நவீன நாகரிக யுத்த அரணில், துப்பாக்கியையும், பீரங்கியையும், வீர முஸ்லிம்களாகிய துருக்கியர் பகிஷ்கரித்து விட்டார்களா?

## கலாசாரம் எது?

ராஜீய தேசீய சமுதாய விவகாரங்களிலும் நம் நாட்டு முஸ்லிம்கள், இஸ்லாம் அளித்துள்ள பகுத்தறிவு சுதந்திரப் பிரகாரம் ஏன் நடந்து கொள்ளக் கூடாது? இதனால் இஸ்லாமிய காலாசாரம் கெட்டுப் போகுமா?

கலாசாரத்தைப் பற்றி இக்காலை சர்ச்சிக்கப் பட்டு வருகிறது. காலாசாரம் தான் சமூகத்தின் ஜீவ தாது என்றும், அது பாதுகாக்கப்பட வேண்டுமென்

றும் விவாதிக்கப்பட்டு வருகிறது. ஆம், காலாசாரம் சமூகத்தின் உயிர் நாடி தான்; அது காப்பாற்றப்பட வேண்டியது தான்.

கலாசாரம் என்பதென்ன? இஸ்லாத்தில் கலாசாரம் என்று எதற்குக் கூறப்படுகிறது? இஃது ஈண்டு ஆராயத்தக்க விஷயம்.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினூர்கள்:—அல் இல்மு எனும் கலாசாரம் மூன்று வகைப்பட்டதாகும். அஃதல்லாதன வெல்லாம் மீசுரமானவைகளாகும். அவை: (1) கட்டளையிடப்பட்ட ஆயத்து; (2) நிலைபெற்றுள்ள ஸுன்னத்; (3) நியாயஞ் செலுத்தற் குரிய கடமை.

ஆயத்து என்பது குர்ஆன் வேத போதனை; ஸுன்னத் என்பது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒழுக்கம், வழக்கம், வணக்கம் முதலியவைகளைப் பற்றி அறிவிக்கப்பட்டவைகள். நியாயஞ் செலுத்தற் குரிய கடமை யென்பது அல்லாஹும், ரஸூலும் வியக்தமாய் அறிவுறுத்தாத விவகாரங்களில் நியாய ரீதியின்படி அறிஞர் தம் பகுத்தறிவை உபயோகித்து நடந்து கொள்வது. எனவே, உங்களில் ஒரு அறிஞர் ஒரு விஷயத்தைப் பற்றி ஆராய்ந்து முடிவு செய்தால், பிறகு நீங்கள் அதனை மறுத்துத் தள்ளாமல் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.”

—தப்ஹீமாத் பாகம், 1; பக்கம் 40.

## ஷரீஅத் என்ருல் என்ன?

இஸ்லாமிய ஆசாரம் என்ருல் ஆண்டவனின்

கட்டளை, நபியின் போதனை, பெரியோர்களின் தீர்மானம் என்று மேற்கண்ட நபிகள் நாயகத் திருவாக்கிலிருந்து தெளிவாகிறது. இது தான் 'ஷரீஅத்'. இது தான் இஸ்லாத்தின் கலாசாரம்.

எனவே, இஸ்லாத்தின் கலாசாரம் இன்னின்னதென்று வரையறுத்துக் கூறப்பட்டுவிட்டது. இஸ்லாத்தின் கலாசாரமாகிய ஷரீஅத் இத்தரணியில் நன்கு நிலைநிறுத்தப்பட்டு விட்டது. இப் பிரபஞ்சம் முடியும் வரை அதை எந்த சக்தியும் அழிக்க வியலாது. உலக மெங்கும் தீனுல் இஸ்லாம் என்னும் ஜோதி பரவி, முஸ்லிம்கள் எண்டிசையும் வியாபித்துக் காணப்படுவதே இதற்கோர் அத்தாக்ஷி. உலகில் முஸ்லிம்கள் இருக்கும் வரை இஸ்லாமும் அதன் கலாசாரமும் அழியப் போவதில்லை.

"அல்லாஹ் தன்னுடைய ஜோதியை (இஸ்லாத்தை) பரிபூர்ணமாக்கி வைக்கிறான்" என்பது ஆண்டவன் வாக்கு.

"இஸ்லாம் நசித்துப்போகும்; கலாசாரம் அழிந்து போகும்" என்று சில முஸ்லிம்கள் அதைரியங் கொள்வது ஆண்டவன் வாக்கில் அவர்களுக்குள்ள அவநம்பிக்கையை காட்டுவது போலாகும். கலாசாரம் என்ற பெயரால் இக்காலை புரியப்பட்டு வரும் கிளர்ச்சி, விதண்டாவாதத்தினால் எழும் புகைச்சலாகும். உண்மையான கலாசாரம் இன்னதென்பதை நபிகள் நாயகம் (ஸல்) அறிவித்து விட்டார்கள். அது எக்காலும் அழியாது. இக் காலை கலாசாரம் என்று சர்ச்சிக்கப்படுவது இஸ்லாமிய ஷரீஅத்துக்கு அப்

பாற்பட்ட (மீசுரமான) விஷயங்க ளென்பதில் ஐய மில்லை.

இக்காலே சர்ச்சிக்கப்படும் கலாசாரம் அப்போ தைக் கப்போது மாறுபடலாம். ஆனால், இஸ்லாமிய ஷரீஅத் மாறுபட மாட்டாது. கால தேச நிலைக்கேற்ப மாறுபடும் வழக்க ஒழுக்கத்திற்காக பிரயத்தனப் படுவது சமூகக் காரியங்களாகும். இதற்கும் சமூக வாழ்வுக்கும் சம்பந்த மிருக்கலாம். ஆனால், இதன் மீதே இஸ்லாம் என்னும் கோட்டை நிர்மாணிக்கப் பட்டிருக்கிற தென்று வாதிப்பது சரியன்று. எனவே, இக்காலே கலாசாரத்தின் பெயரால் புரியப்படும் சர்ச் சையில் குதர்க்கவாதமும் சிறிது கலந்திருக்கிறது.

## ஹிந்து தர்மம்

புராதன காலத்தில் வழங்கிய ஹிந்து தர்மத்துக் கும் தற்காலம் வழங்கும் ஹிந்து தர்மத்துக்கு மிடை யில் பலத்த வித்தியாசங்கள் இருக்கின்றன. காலப் போக்கிற்கும் நாகரிகத்துக்கும் தகுந்தபடி இந்து தர்மம் புனருத்தாரணம் அடைந்து வருகிறது. இந்தி யாவில் முஸ்லிம்களின் அரசாக்ஷி ஏற்பட்டு முஸ்லிம் களுடன் இந்துக்கள் அதிகம் நெருங்கிப் பழக நேரிட்ட தனாலும், ஒன்றரை நூற்றாண்டாக இவ் விந்துஸ்தா னத்தில் ஆங்கிலேயரின் ஆட்சி முறை நடைபெற்று வருவதனாலும் இந்து தர்ம ஆசார பழக்க வழக்கங் களில் பற்பல மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. "இந்தி யன் கேஸஸ்லா" என்ற விவகாரச் சட்டம் இந்து மத சாஸ்திரத்தின் போக்கையே மாற்றிவிட்ட தென்ன லாம்.

ஹிந்து மதத் தலைவர்கள் காலப் போக்கைக் கருதி தீர்க்கதரிஸனத்தோடு நடந்து கொண்டார்கள். லோகானுபவத்துக் கேற்ப பல சீர்திருத்தங்களைத் தங்கள் ஆசாரங்களில் புகுத்திக் கொண்டார்கள். ராஜா ராம் மோஹன் ராய், சுவாமி விவேகானந்தா, குரு சங்கராச்சாரியார் முதலியோரின் பெயர்கள் ஹிந்து சமூக சீர்திருத்தக்காரர்களின் ஜாபிதாவில் முதல் வரிசையில் குறிப்பிடப்படுகின்றன.

ஹிந்து தர்மம் எவ்வாறெல்லாம் வளர்ச்சி யடைந்து வந்துளது என்ற சரித்திரத்தைச் சிறிது ஆராய்ந்து நோக்குங்கால், புராதன ஹிந்து தர்மம் இக்காலை புதிய சகாப்தத்துக் கேற்ப புனர்ஜன்மம் எடுத்திருக்கிறதென்பதைக் காண்கின்றோம். ஹிந்து தர்மக் கொள்கைகளும், ஆசாரங்களும், பழக்கங்களும் பலவகைகளில் மாறுபட்டுப் போயிருப்பதைக் காண்கின்றோம். அது மட்டுமல்ல. புராதன ஹிந்து தர்மமே மாறி பற்பல புதுக் கோலத்துடன் துலங்குவதையும் அறிகின்றோம்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினனே"

என்ற கோட்பாட்டை ஹிந்து தர்மிகள் பண்டைக் காலந் தொட்டே கையாண்டு வருகின்றார்கள். காலமும் தேசமும் சமூகமும் நாகரிக மடைவதற் கேற்ப, ஹிந்து தர்மத்தில் புதுப்புது வழக்க ஒழுக்கங்களும் தோன்றிக்கொண்டிருக்கின்றன.

விவாக ரத்து, சொத்து பாத்தியதை, விதவா விவாகம், பால்ய விவாகத் தடை, தீண்டாமை ஒழிப்பு, ஜாதி உயர்வு தாழ்வு விலக்கு முதலிய விஷயங்கள் ஹிந்து

தர்மத்தில் சொற்ப காலமாக ஏற்பட்டுள்ள மாறுதல்கள். இந்தச் சிறப்புக்களெல்லாம் இஸ்லாத்தில் ஆதி காலந் தொட்டே யிருந்து வருவதால், இந்து தர்மம் தீனுல் இஸ்லாத்தின் பக்கம் நெருங்கி வந்துகொண்டிருக்கிற தென்று நம் முஸ்லிம்கள் பெருமை யடையலாம். அங்ஙனமாயின், இஸ்லாமிய கலாசாரமும், ஹிந்து தர்ம கலாசாரமும் ஐக்கியப்பட்டு விட்டன வென்று ஏன் கூறக் கூடாது?

## சீர்திருத்தம்

'சீர்திருத்தம்' என்ற அம்சத்தில் மட்டும் இந்து மதத்தையும் இஸ்லாம் தர்மத்தையும் இங்கு சீர்தூக்கிப் பார்ப்போம்.

இஸ்லாம் மார்க்கமும் முஸ்லிம் சமுதாயமும், சென்ற 1350 வருடங்களுக்கு முன் (முஹம்மத் நபி அவர்கள் காலத்தில்) இருந்தது போலவே இன்றிருக்கவில்லை. அவற்றில் எத்துணையோ சீர்திருத்தங்களும், எத்தனையோ மாறுதல்களும் ஏற்பட்டிருந்து வருகின்றன. அக்காலை குர்ஆன் வேதம் இக்காலை இருப்பதைப் போல் பாகங்களும் அத்தியாயங்களும் வகுக்கப்பட்டு, வாக்கியங்கள் கிரமப்படி ஒழுங்காய் கோர்க்கப்பட்டு, பரிபூர்ண கிரந்தமாய் இருக்கவில்லை. ஏனும் பிலும், தோலிலும், கல்லிலும் எழுதப்பட்டு சிதறுண்டு கிடந்த வாக்கியங்களை யெல்லாம் மூன்றாவது கலீபாவான உஸ்மான் (ரலி) அவர்கள் ஆட்சியின் போது திரட்டி, ஒழுங்குப்படுத்தி புத்தகமாக்கினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளான ஹதீதுகளும் அவ்வாறே தான் சிஷ்ய கோடிகளின்

உள்ளங்களிலும், ஏடுகளிலும் சிதறுண்டு போய் கிடந்தன. அதன் பின் தோன்றிய 'முஹத்திஸ்'கள் அவற்றைத் திரட்டி, ஆராய்ந்து கிரந்தங்களாக்கி வைத்தார்கள்.

இஸ்லாமிய ஷரீஅத்தின் அனுஷ்டானச் சட்ட திட்டங்களாய் இஞ்ஞான்று இருந்துவரும் பிக்ஹு மஸ்அலாக்கள், திருநபியின் நேர் தோழர்களுடைய காலத்திற்குப் பிறகு இமாம்களால் குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களைக் கொண்டு இயற்றிச் சிருஷ்டிக்கப்பட்டவைகளாகும்.

உலக முஸ்லிம்களெல்லோரும் குர்ஆன் வேத பாஷையாகிய அரபு ஒன்றைத் தான் தாய்மொழியாகக் கொள்ளவேண்டுமென்று பண்டைக் காலத்தில் முஸ்லிம்களிடையே ஒரு சம்பிரதாயம் இருந்து வந்தது. ஆனால், இன்று அந்தச் சம்பிரதாயம் தேய்ப்பிறை போல் குன்றிவிட்டது. உலகத்து முஸ்லிம்கள் எந்தெந்த நாடுகளில் வதிகின்றார்களோ, அந் நாடுகளில் வழங்கும் பாஷையையே தாய் பாஷையாய் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். சொற்ப காலத்துக்கு முன் ஆங்கிலம் "நரகலோகத்துப் பாஷை" என்றும், அதை முஸ்லிம்கள் மொழியவே கூடாதென்றும், அப்படி மொழிந்தால் சாகும்போது நாவில் அல்லாஹ்வின் திருநாமம் உதிக்காதென்றும் ஆலிம்களும் மௌலானாக்களும் வாதித்து வந்தார்கள்.

அலிகார் முஸ்லிம் சர்வகலாசாலை ஸ்தாபகரான சர் ஸையத் அஹ்மத் அவர்கள், அந்த மௌடீகக் கோட்டையை உடைத்தெறிந்து, முஸ்லிம்களை அவசி

யம் ஆங்கிலம் கற்றுக்கொள்ளும்படி செய்தார். அக் "குற்றத்திற்காக" வைதீக மௌல்விகள், 'அவர் காபிர்' என்று பத்வாவும் விடுத்தார்கள். ஆனால், இன்று ஆங்கிலத்தைத் தான் இக்காலம் பல முஸ்லிம் தலைவர்கள் உன்னத பாஷையாய், கௌரவ மொழியாய் கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம் பெற்றோர்கள் தம் பிள்ளைகட்கு ஆங்கிலம் கற்பித்துக் கொடுப்பதை மா பெரும் கௌரவமாகவும் கருதுகிறார்கள்.

## நவீனத் துருக்கி

துருக்கியில் அரபு மொழியே கலீபா காலங்களில் ராஜாங்க பாஷையாக யிருந்துவந்தது. ஆனால், ஆதாதுர்க் காலத்தில் அரபியுடைய ஸ்தானத்தை லத்தீன் எழுத்தும், துருக்கி பாஷையும் ஆக்கிரமித்துக் கொண்டன. இன்று துருக்கியில் மதப் போதனைகளெல்லாம் அரபு அல்லாத பிற பாஷையில் தான் புரியப்பட்டு வருகின்றன.

இஸ்லாமிய கலாசார ஒழுக்க வழக்கங்களில் ஏற்பட்ட இந்த மாறுதல்களை யெல்லாம் இன்று நாம் சீர்திருத்தங்கள் என்று கூறுகின்றோம். இஸ்லாமிய வாழ்க்கையில் இங்ஙனம் ஏற்பட்டுள்ள சீர்திருத்தங்கள் அளவிடற் கரியன. வருங்காலத்தில் இன்னும் என்னென்ன சீர்திருத்தங்களை (மாறுதல்களை) நம் தலைவர்கள் உண்டாக்குவார்களோ யாம் அறிகிலேம்.

ஆகவே, முஸ்லிம்களின் கலாசாரத்தில் சீர்திருத்தத்துக்கும் மாறுதல்களுக்கும் இடம்பாடே யில்லையென்று இக்காலை சில தலைவர்கள் வாதாடி வருகின்றனரே இதன் தாத்பரிய மென்ன? சென்ற 50 வரு

ஷங்களுக்கு முன் வாழ்ந்த முஸ்லிம்களுடைய நடை, உடை, பாவனை, பாஷை, பழக்க வழக்கம், மனப் பான்மைகளையும் இக்காலத்து நவயுக முஸ்லிம்களின் 'பாஷன்'களையும் சீர்தூக்கிப் பார்ப்போமானால், இதர ச கங்களின் கலாசாரத்தைப் போல் இஸ்லாமிய மக்களின் கலாசாரம் எத்துணை பேதகமடைந்து வருகிற தென்பதை ஐயமற உணரலாம்.

## சொல்லும் செயலும்

தற்கால முஸ்லிம்களின் போக்கு அவர்களின் இஸ்லாமிய ஆசாரங்களுக்கு எத்துணை தூரம் ஒத்தி ருக்கிறது என்பதைச் சிறிது கவனிப்போம்.

"இஸ்லாமிய கலாசாரத்துக்கு ஆபத்து நேரிட்டு விட்டது; ஆகையால், அதை முதலில் பாதுகாத்து விட்டுத்தான் ஓய்வு கொள்ளவேண்டு" மென்று இக் காலை ஒரு சாரார் ஓயாமல் கூறிவருகின்றனர். ஆனால், அவர்கள் எதை இஸ்லாமிய கலாசார மென்று எண் ணிக் கொண்டிருக்கிறார்க ளென்பது தான் வியக்த மாய் பாமர மக்களுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை. ஆகவே, பாமர மக்கள் இஸ்லாம் மதத்தின் வாழ் வுக்கே ஆபத்து வந்துவிட்டதாய் தவறாய் எண்ணிக் கொண்டு வீண் பீதி யடைய வேண்டியதா யிருக் கிறது.

பண்டை நாட்களில் இரண்டாவது கலீபா ஹஜ் ரத் உமர் (ரலி) அவர்கள், காதிஸியாவில் தமது தளகர்த் தருக்கு ஒரு 'தாக்கீது' விடுத்திருந்தார். அதில் "நமது சேனைகள் அரபுகளின் குண விசேஷங்களையும் பழக்க வழக்கங்களையும் கைவிடக்கூடாது. ஆங்கு அவர்கள்,

அஜமி (அரபு அல்லாதார்)களின் நடை யுடை பாவனை களையும், வாழ்க்கை முறையையும், பழக்கவழக்கங் களையும் ஏற்றுக்கொண்டு விடக்கூடாது'' என்று கட் டளை யிட்டிருந்தார்கள். இக்காலை முஸ்லிம்கள் பிரஸ் தாபக் கட்டளையை எத்துணை மட்டும் அனுஷ்டித்து வருகின்றார்களென்பதைச் சிறிதே சிந்தித்துப் பாருங் கள்.

காலச்சக்கரம் அதிவேகமாய் சுழன்று வரு கிறது. காலப் போக்கு தினை தினை மாறுதல் அடைந்து வருகிறது. அதற்கேற்ப உலக முஸ்லிம்கள் நடை யுடை பாவனையில் இயற்கையாய் மாறுத லடை ந்து வருகிறார்கள். இவ்வாறே நம் இந்திய முஸ்லிம் களும் மிகமிக மாறுதலடைந்து போய் தான் காணப் படுகின்றனர்.

இக்காலம் இந்திய முஸ்லிம்களின் ஒரு சாரார், தங்கள் ஒழுக்க வழக்கங்களிலோ, நடையுடை பாவனை களிலோ, இஸ்லாமிய ஷரீஅத்தின் கட்டளைகளின் பிரகாரம் நடந்து கொள்வதில்லை. தலைவர்களென்று சொல்லிக் கொள்வோரும், அவர்களைப் பின்பற்றும் முஸ்லிம் வாலிபர்களும் பெரும்பாலோர் இக்காலை இஸ் லாமிய ஷரீஅத்துக்கும், உமர் (ரலி)யின் பிரஸ்தாப தாக்கீதுக்கும் விரோதமாய் தங்கள் கோலங்களையே முற்று முற்ற மாற்றிக் கொண்டுளர். இத்தகையவர் கள் இஸ்லாமிய கலாசாரத்தைக் காப்பாற்றும் வீரர் தங்களைத் தவிர வேறு யாருமில்லை யென்று கூறிக் கொண்டு திரிகின்றனர். 'சொல்வ தொன்று, செய்வ தொன்று' என்ற இவர்களின் போக்கைக் கண்டு முஸ்லிமல்லாதார் பரிகாசம் செய்வார்களாயின்,

அதைக் கேட்டு நாம் மனம் வருந்துவதற்கு நியாய மில்லை.

## அரபுகளின் தேசபக்தி

இரண்டாம் கலீபா ஹஜ்ரத் உமர் (ரலி), தமது சேனைகளுக்குப் பிறப்பித்த அத் தாக்கீதில், எத்துணை தேசபக்தியும் சமூகாபிமானமும் நிறைந்திருக்கிற தென்பதைச் சிறிது ஊர்ந்து பாருங்கள். அரபுகள் தங்கள் தேச நடை யுடை பாவனைகளையும், வழக்க ஒழுக்கங்களையும் கைவிட வேண்டா மென்பதே அக் கட்டளை. அதாவது, அரபு தேசத்தவர் அராபிய உடையையே அணிய வேண்டும்; அராபிய வழக்கத் தையே மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். அரபு தேசத்தவர், அரபு அல்லாத பிற நாட்டவர் (அஜமி) களின் நடை யுடையை மேற்கொள்ளக் கூடாதென் பது பண்டை அரபுகளின் தேசபக்திக்கு ஓர் அத் தாக்ஷி யாகும்.

இக்காலை, ஒரு சில முஸ்லிம்கள், அரபுகளைப் போல் உடை யணிவதுமட்டும் தான் இஸ்லாமிய கலா சாரம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். உண் மையில் இப்படி கோலம் பூணுவது தான் இஸ்லாமிய கலாசாரம் என்றால், இந்தியாவி லிருக்கும் சில கோடி முஸ்லிம்கள் ஒரு பக்க மிருக்கட்டும். உலக மெங்கும் பரவி வாழும் சுமார் 40 கோடி முஸ்லிம்கள் எத்த கைய கலாசாரத்தை யனுஷ்டித்து வருகின்றனர் என் பதை ஒருசிறிது சிந்தித்துப் பார்ப்பீர்களாக.

பண்டை அரபுகள் மேற்கொண்டிருந்த நடை யுடை பாவனைகள் தான் இஸ்லாத்தின் கலாசாரம் என்றால், அந்தக் கலாசாரத்தை 1300 வருடங்களாக

உலக முஸ்லிம்கள் ஏன் அசிரத்தையாகக் கைவிட்டு விட்டனர்? 1300 வருடங்களாகத் தூங்கிக்கொண்டிருந்துவிட்டு இப்போது விழித்துக்கொண்டு இஸ்லாத்தின் பண்டை கலாசாரத்தைக் காப்பாற்றுவோம் என்பதில் சிறிதும் அர்த்தமில்லை. இது அசாத்தியமே.

இஸ்லாமிய கலாசாரம் என்பது வெறும் உடையலங்காரமும், பழக்க வழக்கங்களும் மட்டுமல்ல. இஸ்லாமிய ஷரீஅத்தின் போதனுசாரம்தான் கலாசாரம். இதைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டியது முஸ்லிம்களின் கடமை தான். கால தேச வர்த்தமானங்களுக்கேற்ப நடை யுடைகளும், பாஷையும், பழக்க வழக்கங்களும் மாறுபடுமானுல், அதனுல் இஸ்லாத்தின் கலாசாரம் கெட்டுப் போகவோ, முஸ்லிம் சமூகம் சீரழிந்து போகவோ மாட்டாதென்பது திண்ணம்.

## இஸ்லாமிய உடை எது?

முஸ்லிம்கள் இன்னவிதமான ஆடை யலங்காரம் தான் செய்துகொள்ள வேண்டுமென்று இஸ்லாத்தில் கட்டாயச் சட்ட மொன்றுங் கிடையாது. முஸ்லிம்கள் எந்தெந்த தேசத்தில் வசிக்கிறுர்களோ, அந்தந்த தேச ஒழுக்காசாரப்படி ஸ்வதேச உடை உடுத்தி, சுதேசிகளைப் போல் வாழ்வதுதான் பண்டைக்காலந் தொட்டு இதுகாறும் இஸ்லாமிய சமுதாயத்தின் வழக்கமா யிருந்து வருகிறது.

கலீபா ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு முறை ஜரூஸலேமுக்கு (பைத்துல் முகத்தஸுக்கு)ச் சென்றிருந்தார்கள். அங்குள்ள தம் இராணுவ அதிகாரிகளையும், குதிரைச் சிப்பாய்களையும் கண்ணுற்றுர்கள். அன்

னவர்கள் அராபிய உடையிலில்லாமல், ஷாம் (சிரியா) தேசத்தாரின் உடைகளைப் பூண்டு கம்பீரமாய் காணப் பட்டனர். இதைக் கண்டு உமர் (ரலி) சினந்து கொண் டார்கள். அதற்குச் சேனை வீரர்கள் கூறிய பதில்:— "தலைவரே! நாங்கள் இவ்விடத்து சீதோஷ்ணத்துக்குத் தக்கபடி இவ்வுடை பூண்டு கொண்டோம். ஆனால், எங்கள் வீரத்தையும் பராக்கிரமத்தையும் திரஸ்கரித்து விடவில்லை."

இதைக் கேட்டு கலீபா உமர் (ரலி) பேசாமல் இருந்துவிட்டார். முஸ்லிம்கள் அரபு தேச உடை யைத் தான் உடுத்தித் தீரவேண்டுமென்றிருப்பின், உமர் (ரலி) தம் சேனைகளை அப்போதே கட்டாயப் படுத்தியிருப்பாரன்றோ? ஆகவே, இஸ்லாத்தின் கலை, ஆசாரம் என்பது நடை யுடை பாவனைக ளல்லவென் பதை அறிந்து கொள்ளலாம்.

## ஐக்கிய வாழ்வு

'கலை—ஆசாரம்' என்பதைப் பொறுத்தவரை முஸ்லிம்களுக்கு இஸ்லாம் மதம் விதித்துள்ள கட் டளையும் நியதியும் மிக்க தாராள நோக்க முடைய வைகளாகும். இஸ்லாத்தின் போதனைகளும் அனுஷ் டானங்களும், இதர சமூகத்தினர்களுடைய கூட்டு றவு வாழ்வுக்குப் பாதக மில்லாத முறையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. ஆதலின், தேசீய ராஜீய விஷ யமாய் முஸ்லிம்கள் இதர சமூகத்தவர்களுடன் ஐக்கி யம் ஏற்படுத்திக் கொள்வதற்கு இஸ்லாமிய கலாசா ரம் எவ்வகையிலும் முட்டுக்கட்டை யாகமாட்டாது.

இந்தியாவில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பன்

ஹூறு வருடகாலமாக அன்வயித்துக் கூடி சமரஸமாய் வாழ்ந்து வருகின்றனர். அராபியாவி லிருந்தும், ஆப் கான், ஈரான், இராக் முதலிய இஸ்லாமிய நாடுகளி லிருந்தும் முஸ்லிம்கள் ஹிந்துஸ்தானத்தில் குடியேறி இங்கேயே தங்கி வாழ்ந்து வரத் தொடங்கிவிட்டார் கள். இங்ஙனம் இந்தியாவைத் தங்கள் தாயகமாய்க் கொண்ட முஸ்லிம்கள், இந்நாட்டு ஒழுக்க வழக்கங் களையும், நாகரிகத்தையும் பல துறைகளில் ஏற்றுக் கொண்டார்கள். இதனால் முஸ்லிம்களின் கலாசார மும், இந்துக்களின் கலாசாரமும் ஐக்கியமாய், ஊடு றக் கலந்து, இரு சாராருக்கும் பொதுப்படையான கலாசாரமாய் புதுக்கோலங் கொண்டு விளங்குகிறது.

இந்நாட்டு அரசியல் விவகாரம், சமூகச் சீர் திருத்தம், வாழ்க்கை முறை முதலிய பல விஷயங்கள் ஹிந்து—முஸ்லிம் இரு சாராருக்கும் பொதுப்படை யானவையாகவே இருந்து வருகின்றன. அரசியல் வாதிகள் தேசீயத் துறையில் சீர்திருத்தங்கள் புரியத் துணியுங் காலங்களில் ஹிந்துக்களுக் கென்று வேருக வும், முஸ்லிம்களுக் கென்று தனிப்படையாகவும் கரு தாமல், பொதுப்படையாய் சேவை செய்து வருவதின் காரணம் இதுவே யாகும். இப்படிச் செய்து வரு வதே ஹிந்து முஸ்லிம் ஐக்கியத்துக்கும் நேசத்துக்கும் மிகவும் அத்தியாவசியமான காரியமாகும்.

## பிரிவினைப் பேச்சு

தேசீயம், ராஜீயம், சமுதாயம் ஆகிய வழிகளில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து மேன்மையுறு வதற்குக் கூட்டுறவு சீர்திருத்த முறைகள்தான் சாலச்

சிறந்ததாகும். இதை யுத்தேசித்தே தேசத் தலைவர்கள் ஒன்று சேர்ந்து பல சீர்திருத்த அனுஷ்டானத் திட்டங்களை வகுத்து, கல்வி, ஒழுக்கம், பொருளாதாரம் முதலிய துறைகளில் சேவை செய்து வருகின்றார்கள். மத விஷயங்களைத் தவிர்த்து, லோகார்த்த வியவகாரங்களில் இந்தியாவிலுள்ள இரு பெரும் சமூகங்களாகிய இந்து—முஸ்லிம்களுக் கிடையே ஐக்கிய வாழ்வை ஏற்படுத்துவதற்காக தேசீயத் தலைவர்கள் புரிந்து வரும் நல்ல பிரயத்தனங்களை யெதிர்த்து, ஒரு சில வகுப்புவாதிகள் எதிர்ப் பிரசாரமும், வீண் கிளர்ச்சிகளும் புரிந்து வருகின்றனர். இவ் வெதிர்ப்புக் கிளர்ச்சி நாளுக்கு நாள் வளர்ந்து வந்து இப்போது விபரீதமான கோர ரூபங் கொண்டிருக்கிறது.

“இஸ்லாம் தனிப்பட்ட போக்குடைய மதம். அது பிற மதங்களுடன் ஐக்கியமாக மாட்டாது. ஆகவே, முஸ்லிம்கள் அரசியல், தேசீயம், சமுதாயம் ஆகிய துறைகளில் ஹிந்துக்களுடன் கூட்டுறவு பூண்டு ஒருமித்து வாழமுடியாது. ஆகையால், முஸ்லிம்கள் பெரும்பான்மையாய் வசிக்கும் பிரதேசங்களை “முஸ்லிம் இந்தியா”வாகத் தனியாக ஒதுக்கிக் கொடுத்துவிட வேண்டும். அப்போது தான் முஸ்லிம்கள் பெரும்பான்மை சமூகத்தின் பயமில்லாமல் நிம்மதியாய் வாழ முடியும்” என்று வகுப்பு ஆவேசம் மீறிய ஒரு சாரார் இக்காலை கூறி வருகின்றார்கள். இதுதான் வகுப்புவாதத்தின் பயங்கர சொரூபம்.

இத்தகைய விபரீதப் பிரிவினைப் பிரச்னையை இந்நாட்டில் ஆரம்பத்தில் கிளப்பியவர் யார் என்பதை நண்பர்கள் அறியவேண்டும். ஹிந்து—முஸ்லிம் பிரச்

ீனயை எப்படி தீர்க்கலாம் என்பதைப் பற்றி சில வருடங்களுக்கு முன் காலஞ்சென்ற உருது கவி டாக்டர் ஸர் இக்பால் ஒரு திட்டத்தை வெளியிட்டார். ஹிந்துஸ்தானத்தை இரு கூருகப் பிளந்து, வடக்கேயுள்ள பகுதியை முஸ்லிம்களுடைய தனிபாட்சியில் ஒப்படைத்து அப் பகுதியைப் "பாக்கிஸ்தான்" (பரிசுத்த நாடு) என்றழைக்க வேண்டுமென்பதும், மற்ருெரு பகுதியாகிய தக்ஷிண பாகத்தை ஹிந்துக்கள் 'ஹிந்துஸ்தானு'கக் கருதிக்கொள்ள வேண்டுமென்பதும் அந்த விசித்திர திட்டத்தின் உட்கருத்து.

## பாக்கிஸ்தான் சாத்தியமா?

சொற்ப காலமாக காங்கிரஸ் மகாசபைக்கும், முஸ்லிம் லீக் ஸ்தாபனத்துக்கும் விவாதம் அதிகரித்து, ஹிந்து—முஸ்லிம் பிரச்னை சிக்கலாகி வருகிறதைச் சந்தர்ப்பமாக வைத்துக்கொண்டு அவசர வாதிகள் சிலர், மாண்டுபோன 'பாக்கிஸ்தான்" பிரச்னையை மீண்டு உயிர்ப்பித்து வைக்க பிரயத்தனப்பட்டு வருகின்றனர். இவர்களின் இந்தப் பிரிவினைத்திட்டம் வெறும் பகற் கன வென்பதில் சந்தேகமில்லை. ஆயினும், இங்ஙனம் பாரத நாட்டை இரு துண்டாக்கி, முஸ்லிம்களை யெல்லாம் இந்துக்களிடையே யிருந்து பொறுக்கி வடக்கே அனுப்பி விடுவதானல், அதனல் ஹிந்து சமூகத்துக் கொன்றும் நஷ்டமில்லை. ஆனல், முஸ்லிம்களுக்குத் தான் இதனல் அபரிமிதமான நஷ்டங்களும், துன்பங் களு முண்டாகும். இஃதெப்படி யென்பதைச் சிறிது கவனிப்போம்.

பழைய 'பாக்கிஸ்தான்' பேச்சு உருப்படுவதா

ஞல், இரண்டு காரியங்கள் முதலில் நடைபெறவேண்டும்: (1) கட்டாயப்படுத்தி தென் இந்தியாவிலிருந்தும், ஹிந்துக்கள் பெரும்பான்மையாகவுள்ள மாகாணங்களினின்றும் முஸ்லிம்களை வெளியேற்றி, வடக்கே அனுப்பிவிட வேண்டியதாகும். (2) தற்போதும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள வட தேச மாகாணங்களுடன் இன்னுஞ் சில பிரதேசங்களையும் சேர்த்துத் தனியாக ஒதுக்கிவிட வேண்டியதாகும்.

முதலில் தென் இந்திய முஸ்லிம்களைக் கட்டாயப்படுத்தி, பிறந்த ஊரையும் வளர்ந்த தாயகத்தையும் ஒரே அடியாய் துறந்துவிட்டு, மூட்டை முடிச்சு கட்டிக்கொண்டு பாஷைப் பரிச்சியமும் ஜன அறிமுகமுமில்லாத ஒரு புது தேசத்துக்குப் போய்விட ஸ்தல சர்க்கார் நிர்ப்பந்தப்படுத்திஞல், அதற்கு நம் முஸ்லிம்கள் சம்மதப்படுவார்களா? கட்டி வாழ்ந்த வீட்டையும், ஊட்டி வளர்த்த பயிர்களையும், பாடுபட்டு விருத்தி செய்த வியாபார ஸ்தலங்களையும் திடுகூராய் விட்டுச் செல்வதென்ருல் யார் தான் சம்மதப்படுவர்? இந்த மாறுதல் கொஞ்சங் கூட சாத்தியமாக மாட்டாது.

## முஸ்லிம்கள் கதி யென்ன?

அங்ஙனம் இல்லத்தையும், நிலத்தையும், வர்த்தகத்தையும் விட்டுச் செல்வதாகவே பாவித்துக் கொள்வோம். பல்லாண்டுகளாக முஸ்லிம்கள் இந் நாட்டில் தம் உயிரினும் உயரியதாய் பாதுகாத்து வரும் மஸ்ஜித்களையும், மஹான்கள் அடங்கியுள்ள தர்க்காக்களையும், பெரும் பெரும் மதரஸா (மத வித்யாபீடம்)களையும் அயல் மதஸ்தர்களிடம் விட்டுச் சென்றுவிட சம்

மதிப்பார்களா? இங்ஙனம் முஸ்லிம்கள் விட்டுச் செல்லும் மஸ்ஜித்களும், மத்ரஸாக்களும் பிறகு என்னவாகுமென்பதை யோசித்துப் பார்ப்பார்களாக. மஸ்ஜித்கள் கோயிலாகவும், மத்ரஸாக்கள் மடங்களாகவும், தர்க்காக்கள் சத்திரங்களாகவும் போய் விடுவதை ஈமானுள்ள எந்த முஸ்லிமாவது சம்மதிப்பானா?

1300 வருடங்களாய் வளர்ந்துள்ள இஸ்லாம் என்னும் விருக்ஷத்தை அங்ஙனம் சிதைப்பதாயின், அதை ஆண்டவன் தான் சம்மதிப்பானா? பல நூற்றாண்டுகளாக "அல்லாஹு அக்பர்" என்று ஏக தெய்வத்துக் குரல் (பாங்கு) ஒலித்துக்கொண்டிருந்த இடத்தில் 'சங்கநாதம்' ஒலிப்பதை உண்மை முஸ்லிம்கள் தான் விரும்புவார்களோ?

> கொஞ்ச காலத்துக்குப் பின் இப்போது, பாக்கிஸ்தான் வேண்டுமென்பவர்கள், "பாக்கிஸ்தான் இந்துக்கள் அங்கேயே இருக்கட்டும்; இங்குள்ள முஸ்லிம்கள் இங்கேயே இருக்கட்டும்." முஸ்லிம் ராஜ்யம் ஏற்பட்டால் போதுமென்கின்றனர்.

பல நூற்றாண்டுகளாக இந் நாட்டில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அண்ணன்—தம்பி போல் இனிது உறவு பூண்டு வாழ்ந்து வருகின்றார்கள். முஸ்லிம்களுடைய அன்யோன்யத்தாலும், ஹிந்துக்களுடைய தாராளத் தன்மையாலும், இத் தேயத்தில் இஸ்லாத்தின் நாகரிகமும், வழக்க ஒழுக்கங்களும் செழித் தோங்கி எங்கும் வியாபித்திருக்கின்றன. ஹிந்து சகோதரர்களில் பலர், முஸ்லிம்களுடைய கலாசாரங்களைப் பின்பற்றி சிறுகச் சிறுக முஸ்லிம்களாகவே மாறி வந்துள்ளனர்.

இன்னுங்கூட லக்ஷக்கணக்கான முஸ்லிம் வர்த்தகர்களும், ஹிந்து வர்த்தகர்களும் அன்யோன்யமாய் பரஸ்பரம் கூட்டு வர்த்தகம் செய்து வருகின்றனர். கோடிக்கணக்கான முஸ்லிம்கள் ஹிந்துக்களுடன் நேசம் பூண்டு 'லேவா—தேவி' புரிந்து வாழ்ந்து வருகின்றனர். அந்தோ! 'பாக்கிஸ்தான்' என்ற பிரிவினைப் பூதத்துக்குக் கோடிக்கணக்கான முஸ்லிம்களின் கூட்டுறவு, வர்த்தகம், நேசம், லேவாதேவி யாவும் பலியிடப்படுவதென்றால், இதைப் புத்திசாலித்தனமென்று யாரேனும் கூறுவாரோ?

## இதுவா நாகரிகம்?

இங்ஙனம் பாரத தேசத்தை இரு பிளவாக்கி, இந்துக்கள் ஆளும் பிரதேசம் வேறு, முஸ்லிம்கள் ஆளும் பிரதேசம் வேறு என்றாக்கிவிட்டாலுங் கூட, அப்போதும் முஸ்லிம் பகுதியினர் நிம்மதியாய் பொருளாதார வாழ்வை நடத்த முடியாது. ஏனெனின், இரு சாராரும் ஒருவரை யொருவர் அணுகாமலும், வர்த்தகப் பொருளாதார சம்பந்தங்கள் இல்லாமலும் உயிர் வாழ்வ தென்பது சாத்தியமாகுமா? வர்த்தகத் துறையில் கொடுக்கல், வாங்கல் (லேவா—தேவி) காரியார்த்தமாய் ஒரு பகுதியினர் மற்றவர் பகுதிக்குள் போய் வர தாராள அனுமதியும் சௌகரியமும் கிடைக்குமா? அடுத்த பகுதியில் போய் ஜீவனம்சம் தேட இடம்பாடு அளிக்கப்படுமா? இதெல்லாம் முடியாதெனின், அடுத்த நாட்டின் தொடர்பின்றி மக்கள் உயிர் வாழ்வது எப்படி?

இது நவீன நாகரிகங்கள் மலிந்த காலம்; அறி

வும் ஆராய்ச்சியும் மல்கிய காலம். உலகத் தேசங்களெல்லாம் ஒன்றோடொன்று நெருங்கிய உறவு கொண்டாடும் காலம். இத்தகைய நவயுகத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பண்டை மக்கள் வாழ்ந்தது போன்ற குறுகிய வாழ்க்கை நடத்துவதென்பது அவிவேகத்தனமாகும். உலகெலாம் ஒன்றெனக் கருதப்படும் இந்த இருபதாம் நூற்றாண்டில் பகிஷ்கார வாழ்க்கை நடத்துவதென்பது அசாத்தியம்.

ஒருக்கால் முஸ்லிம்கள் இந்துஸ்தானியர்களாய் இருக்க விரும்பாமல் பாக்கிஸ்தானியர்களாய் மாறிவிட்ட பிறகு, தனித்து நின்று சுயசக்தியுடன் வாழ முடியுமா? வர்த்தகம், பொருளாதாரம், ஏற்றுமதி, இறக்குமதி விவகாரங்களில் இந்துக்களுடன் தொடர்பும் சம்பந்தமும் கொண்டு தான் தீரவேண்டுமென்ற நிர்ப்பந்தத்தின் பேரில் சமரசம் கோருவார்களென்பது திண்ணம். அந்த சமரச வாழ்வை இப்போதே உறுதிப்படுத்திக்கொண்டா லென்ன? வேறுபட்டுச் சீரழிந்து பிறகு சேருவதை விட, வேறுபடாமலே ஒற்றுமையாய் இருந்துகொள்வது சிரேஷ்ட மல்லவா?

இப்புனித பூமியை ஹிந்துப் பகுதி யென்றும், முஸ்லிம் பகுதி யென்றும் பிரித்துவிடுவதில் மற்றொரு பெரிய இடையூறும் ஏற்படுகிறது. தென் நாட்டு முஸ்லிம்கள் இங்கிருக்க மனம் பிடிக்காமல் வடக்கே போய்விட முற்படலாம். அக்காலே அவர்களுடைய கதி யென்ன? வடக்கே குளிர் அதிகம்; தெற்கே வெய்யில் அதிகம். வெய்யிலில் வசித்துப் பழகியவர்கள் குளிரில போய் உறைவதும், குளிரில் குளிர்ந்து வாழ்ந்த வடநாட்டார் தென் திசையில் வந்து வெய்யி

வில் காய்வதென்பதும் இயற்கைக்கு முரணாகும். இத னால் உயிர் வாழ்க்கையே துன்பமாய் முடியும்.

இத்துடன் பாஷைச் சங்கடம் வேறு. தென் தேசத்திலுள்ள தமிழ் முஸ்லிம்கள் வட நாட்டிற்குப் போய்விட வேண்டுமென்றும், வட நாட்டிலுள்ள ஹிந்தி பேசும் இந்துக்கள் தென்னாட்டுக்கு வந்துவிட வேண்டுமென்னும் கட்டாயம் ஏற்படலாம். அக்காலை இவர்கள் புதுநாட்டில் வழக்கப் பாஷை தெரியாமல் அவதிப்பட வேண்டி ஏற்படுமல்லவா? இதற்கென்ன செய்வது?

நாட்டையும் மக்களையும் பிரித்துப் பிளவுபடுத்து வதால் பாதிக்கப்படுவோர் அற்ப சொற்ப தொகை யினரல்ல; கோடிக்கணக்கான பேர்களாவர். அத்த கைய பிரிவினை ஏற்பட்டு 20, 25 வருடங்கள் கழிந்தா லுங்கூட, மக்களின் வாழ்க்கை அமைதி யடையா தென்பது திண்ணம். இத்தகைய பிரிவினையால் பொரு ளாதாரம், குடிவாழ்க்கை, பாஷை ஆகியவைகளெல் லாம் பாதிக்கப்படுவதோடு, அரசியல் துறையில் மக் கள் மிக மிகப் பிற்போக்கடைந்து அநாகரிகப் படுகுழி யில் விழவேண்டியதாய் விடும். மேற்கொண்டு ராஜீய அபிவிருத்தி யடைவதென்பது அசாத்தியமாகிவிடும்.

## மீளாப் படுகுழி

நம்முடைய பலவீனத்தைக் கண்டு அயல் நாட் டுப் பகைவர்கள் அக்காலை நம்மை மேன்மேலும் நசுக் கிப் பிழிந்து அடிமை கொள்ளப் பார்ப்பார்கள். இத னால் நாம் "உள்ளதும் போச்சே நொள்ளைக்கண்ணு" என்பதைப்போல், கிடைத்த சுதந்திரத்தையும் இழந்து,

சாஸ்வதமாய் அடிமைப் பாதாளத்தில் ஆழவேண்டிய தாகும். இத்தகைய அபாரமான பிரிவினைத் திட்டத்தை வேண்டுவோர் எத்தகைய விபரீதப் படுகுழியில் வீழ்கின்றனர் என்பதை மேற்கண்ட விஷயங்கள் 'அங்கை நெல்லி' என எடுத்துக் காட்டுகின்றன. உணர்மின்!

எனவே, பாக்கிஸ்தான் பிரச்னை நாட்டைப் பிளவுபடுத்தி, மக்கள் வாழ்வை நாசப்படுத்துவதைத் தவிர வேறொன்றுமில்லை. இப் பிரச்னையைப் பற்றி இக்காலை விவாதம் புரிவது சீரழிவுக்கு வழி கோலுவதும், தற்போது நாட்டில் அரைகுறையாய் இருக்கும் சமரச மனப்பான்மையைக் குழி தோண்டிப் புதைப்பதுமேயாகும்.

# வேற்றுமை வேண்டாம்

நாட்டில் ஹிந்து-முஸ்லிம் வகுப்புச் சண்டைத் தீ, சமயா சமயத்தில் ஆங்காங்கு புகைந்துகொண்டிருப்பதற்கு மூலகாரணம் என்ன வென்பதை நாம் ஒவ்வொருவரும் உற்றுணர்ந்து பார்க்கவேண்டும். ஊர்வலத்தில் கல் எறியப்பட்டதென்ற பெயராலும், மஸ்ஜித் முன் மேளம் வாசிக்கப்பட்டது என்பதைக் கொண்டும், பசுவை வதைத்துவிட்டனர் என்பதனுலும் ஏற்படும் சச்சரவுகளெல்லாம், ஏற்கனவே துவேஷத்தினுல் புகைந்துகொண்டிருக்கும் குப்பைக் கூளங்களிலிருந்து எழும் தீயேயாகும். மஸ்ஜித் முன் மேளம், ஊர்வலத்தில் கல், பசு வதை என்பதெல்லாம் வெறும் மேற்பூச்சான காரணங்களாகும். இத்தகைய சில்லைற பூசல்களை யாதாரமாகக் கொண்டு இனி ஒருக்காலும் இந்நாட்டில் அரசியல் துறையில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையே ஏற்பட மாட்டாதென்று கூறுவது அபத்தப் பேச்சாகும்.

மத உணர்ச்சியின் மேலீட்டால் பாமர மக்களுக் கிடையில் எழும் ஆவேசங்களுக்கும், இந்திய மகா சமுதாயங்களின் பொது விஷயமான அரசியல் திட்டங்களுக்கும் எத்தகைய பிராப்தமும் கிடையாது. அதையும் இதையும் பொருத்தி வைப்பது அறியாத்தனமே யாகும். மதப் பிரச்னைக்காக அரசியல் துறையில் படுகுழி தோண்டுவது மதங்களின் ஆத்மார்த்த போதனைக்கே நேர்விரோதமான செயலாகும். இக்காலை சின்னஞ்சிறு விஷயத்துக்கெல்லாம் ஒருசில பேர்வழிகள் அரசியல் ரதத்தையே கவிழ்த்துவிடத்

துணிந்து விடுகின்றனர். இத்தகைய 'சின்ன புத்தி' இஸ்லாத்தின் பரந்த நோக்கத்திற்கே பேரிழிவை உண்டாக்குவதாகும். இது நாகரிக மக்களின் பெருந்தன்மைக்கும் இழுக்காகும்.

வகுப்புப் பிரச்னையைச் சமரஸமாய் தீர்த்துவிடலாமென்று இந்நாட்டுப் பெரும்பான்மை சமூகத்தினர் கூறுகிறார்கள். சிறுபான்மையினரான முஸ்லிம்களோ, "அது முடியாது; இந்தியாவை இரண்டாகப் பிளந்து ஒன்றை எங்களுக்குக் கொடுத்துவிடுங்கள். முஸ்லிம்கள் அதிகமாய் வாழும் பிரதேசங்களில் வதியும் ஹிந்துக்களெல்லாம் அவர்கள் வகுப்பார் அதிகமாய் வதியும் மாகாணங்களுக்கு ஓடிப் போய் விடுங்கள்" என கூறுகின்றார்கள். இதற்குப் பெரும்பான்மை சமூகத்தினர் சம்மதிக்கின்றனரா? இல்லவே யில்லை. முஸ்லிம்கள் தான் இந்தப் பிரிவினைக்கு ஹிந்து சகோதரர்களை நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். இதற்கு ஹிந்துக்கள் சம்மதிப்பார்களானாலும், அதனால் அதிகம் நஷ்டமடைபவர்கள் முஸ்லிம்கள் தான்.

## யார் பலவான்?

இந்நாட்டில் ஹிந்து சோதரர்கள் 22 கோடி பேர்கள் இருக்கிறார்கள். முஸ்லிம்கள் 8 கோடி பேர்கள் தான் இருக்கின்றனர். 22 பேர்கள் ஒரு கட்சியாகவும், 8 பேர்கள் ஒரு கட்சியாகவும் பிரிந்து நின்றால், எந்தக் கட்சி வலுவுடையதாக யிருக்குமென்பது தெரிந்த விஷயம்.

மேலும் முதலாளிகளும், வியாபாரிகளும், செல்வந்தர்களும் முஸ்லிம்களை விட ஹிந்துக்களில் தான்

அதிகமாய் இருக்கின்றனர். பணக்காரர்களாகிய ஹிந்துக்க ளெல்லாம் ஒரு பக்கமும், ஏழைகளாகிய முஸ்லிம்க ளெல்லாம் ஒரு பக்கமு மாகிவிட்டால், பொருளாதார பலமின்றி, எந்தச் சமூகம் முதலில் க்ஷீணித்துப் போகுமென்பதை விளக்கவும் வேண்டுமோ? ஹிந்து சகோதரர்களுடைய கூட்டுறவை விட்டுப் பிரிந்து விட்டால், முஸ்லிம்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற முடியாதென்பது திண்ணம்.

தேசத்தை இரு கூருகப் பிரித்துவிடும் பாக்கிஸ்தான் திட்டத்தின் மற்றொரு பெரிய தீங்கு சின்னஞ் சிறு சமஸ்தானங்களுக்கு இழைக்கப்படுகிறது. போப்பால், டோன்க், ஜோனுகட், அஜ்மீர் முதலிய பிரதேசங்கள் அத்திட்டத்தில் தனித்தனி முஸ்லிம் சமஸ்தானங்களாக ஆக்கப்படலாம். அமிர்தஸர், பனூரிஸ் (காசி), ஹரித்வாரம், அலஹாபாத் முதலிய பிரதேசங்கள் ஹிந்து சமஸ்தானங்க ளாக்கப்படலாம். இப்படி ஏற்படுமானுல், சின்ன சமஸ்தானங்கள் அக்கம் பக்கங்களிலுள்ள பெரிய சமஸ்தானங்களுக்குச் சதா பயப்பட்டுக்கொண்டு தான் இருக்கவேண்டும்.

பெரிய மீன் சின்ன மீனை விழுங்குவதும், பெரிய அரசாங்கம் சின்ன அரசாங்கங்களை அடக்கி ஆக்கிரமித்துக் கொள்வதும் தொன்றுதொட்டு நடந்துவரும் உலக வழக்கமா யிருந்துவருகிறது. ஐரோப்பாவில் சின்னச் சின்ன பிரதேசங்களாகிய அல்பேனியா, போலந்து, செக்கோஸ்லோவேகியா, பிரான்ஸ், நார்வே, ருமேனியா, முதலியவற்றின் கதி யாதாயிற்றென்பது உலகம் நன்கறிந்த விஷயம். அவை மண்

ணுசைப் பிடித்த வல்லரசுகளுக்கு இரையாகு முன் தம்மைத் பாதுகாத்துக்கொள்ள பகீரதப் பிரயத்தன மெல்லாம் செய்து பார்த்துவிட்டன. இறுதியில் நேர்ந் ததென்ன? பெரிய திமிங்கிலங்கள் சின்னஞ்சிறு கெண்டைக் குஞ்சுகளை விழுங்கிவிட்டன.

பாக்கிஸ்தான் திட்டத்திற்குப் பிறகு, சிறுசிறு சமஸ்தானங்களுக்கு இத்தகைய விபத்து நேரிட்டால் காப்பாற்ற யார் முன் வருவர்? பக்கத்து நாட்டுடன் சேர்ந்து வாழாமல் அன்னியரிடம் சரணுகதி யடைவ தின் பயன் யாதாகு மென்பதை ஐரோப்பியச் சம்ப வங்கள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

## ஐரோப்பாவைப் பார்!

பொதுவாக எல்லாச் சிறு சமஸ்தானங்களும் அன்னியப் படையெடுப்பின் பயமின்றியும், ஆக்கிர மிப்பின் அச்சமின்றியும் நிம்மதியாய் வாழுவதற்கு ஒரு சிறந்த வழி புதிய சீர்திருத்தப்படி கிடைக்கும் 'பெடரேஷன்' ஐக்கிய முறை தான் என்று கூறலாம். ஆனல், சமஸ்தானங்களைப் பெடரேஷனில் இணைத்து விடுவதனல் மட்டும் எப்படி அவை பயம் நீங்கியதாய் வாழ முடியும்? ஜெர்மனி, இத்தாலி, ரஷ்யா, ஜப்பான் முதலிய நாடுகளுக்குப் பலியான பல தேசங்கள் சர்வ தேச சங்கத்தில் இணைக்கப்பட்டுத் தான் இருந்தன. அப்படியிருந்தும் சர்வதேச அரசுகளின் சக்தி வாய்ந்த அந்த ஸ்தாபனத்தால் அச்சிறு நாடுகளைக் காப்பாற்ற முடிந்ததா? இல்லை. ஐரோப்பிய உலகின் சம்பவங் களே—பெடரேஷன் பெயரால் சமஸ்தானங்கள் மட் டும் ஒன்றுபடுவதால், எதிரியை யெதிர்த்து எதையும்

சாதிக்க முடியா தென்பதற்குப் போதிய அத்தாக்ஷி யாகும்.

பெடரேஷனுக் குட்பட்ட சமஸ்தானங்களைக் காப்பாற்ற பிரிட்டிஷ் வல்லரசு இருக்கிற தென்று கூறப்படுமானல், இதைவிட வெட்கக்கேடு வேறு என்ன வேண்டும்? மழை விட்டும் துவானம் நீங்க வில்லையே! சுதந்திரம் கிடைப்பினும் மீண்டும் அந்த பிரிட்டனிடம் உதவியை வேண்டி சரணாகதி யடைவது இந்தியருக்குப் பேரவமான மல்லவா? சுதந்திரம், சுயேச்சை யென்பதற்குப் பிறகு அர்த்தம் தான் என்ன ?

இந்திய அரசியலுக்கு இணங்கி ஹிந்து சகோத ரர்களுடன் கூடி வாழ சாத்தியமே யில்லையென முஸ் லிம் சகோதரர்கள் ஹடம் பிடிப்பது அழகல்ல. இறுதியாய் ஹிந்துக்களுடைய ஒத்துழைப்பை விட்டு ஒரே யடியாய் விமோசனம் பெற அவர்களுக்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறது. அதுதான் ஹிஜ்ரத். முஸ் லிம்கள் ஹிந்துஸ்தானத்தை விட்டு ஆப்கானுக்கோ, அரேபியாவுக்கோ, மற்றும் இஸ்லாமிய நாடுகளுக்கோ போய் விடுவதற்கு ஒருக்காலும் நிர்ப்பந்தம் ஏற்பட மாட்டாது. சிறுபான்மை மக்களை அத்தகைய சங்க டத்தில் சிக்கவைக்க ஹிந்து சோதரர்கள் மனமார ஒருக்காலும் மனம் துணிய மாட்டார்கள். அத்தகைய பீதி கொள்வது வீர தீர பராக்கிரம சுபாவிகளான முஸ்லிம்களுக் கழகு மில்லை.

அரசியல் பிரச்னைகளில் நேரிடும் சிறுசிறு சிக்கல் களுக்காக வருந்தி, எந்த முஸ்லிமாவது தான் பிறந்து

வளர்ந்த தாயகத்தை விட்டுப் போய்விடத் துணிவாரு யின், அவனை ஒரு வீரன் என்று சொல்லமுடியுமா? மோட்டுப் பூச்சிக்குப் பயந்து வீட்டை விட்டோடும் புத்திசாலிக்கே அவனும் ஒப்பாவான்.

எனவே, இதர சமூகத்தினர்களால் இஸ்லாத்துக்கும் கலாசாரத்துக்கும் ஆபத்து நேரிடுகிறதென்று முஸ்லிம்கள் வீண் பீதியடைவது, தங்களுக்குப் பயங்கொள்ளித்தனம் ஏற்பட்டு விட்டதென்பதைக் காட்டிக்கொள்வதே யாகும். இந்திய சமூகங்களுடைய சகவாசத்தை விட்டுத் தூர ஒதுங்கிவிடுகிறோம் என்ற கருத்துடைய பாக்கிஸ்தான் திட்டம், பல நூறு வருடங்களாகப் பாடுபட்டுப் பல தியாகங்கள் புரிந்து இந்தியா வெங்கும் நிலைநிறுத்திய இஸ்லாமிய வளர்ச்சியைப் படுகுழியில் தள்ளி மூடிவிட்டுப் போவதற்கே ஒப்பாகும். இத்தகைய அறிவீனச் செயலைத் தான் சென்ற காலங்களில் ஸ்பெயின், மால்டா, தென் பிரான்ஸ், ஸிஸ்லி, கோயத் முதலிய நாடுகளின் முஸ்லிம்கள் செய்து சீரழிந்தார்கள். அத்தகைய தவறான இழிவான செயலை இந்திய முஸ்லிம்கள் செய்ய வேண்டாம்.

## ஐக்கிய வாழ்வின் அனுகூலம்

ஒரு தேசத்தின் தனித்தனி மதங்களைச் சேர்ந்த பல சமூகங்களா யிருந்தபோதிலும், தேசோத்தாரணம், அரசியல் முன்னேற்றம், நடை யுடை பாவனை முதலிய கலாசாரங்களில் ஐக்கிய வாழ்வு முறை அவசியம் இருந்தே தீரவேண்டும். எல்லா மதங்களிலும் சில குறிப்பிட்ட கலாசாரங்கள் பொதுப்

படையானவையாகவே இருப்பதுண்டு. அத்தகைய பொது விஷயங்களில் தேச முன்னேற்றத்தையும், அரசியல் வெற்றியையும் கருதி ஓர் ஐக்கிய வாழ்வு முறை வகுக்கப்படுமாயின், அதைத் தேசமக்கள் அனை வரும் ஆக்ஷேபனையின்றி ஒருமுகமாய் ஏற்றுக்கொண் டொழுக வேண்டும். பொதுப்படையான வழக்க ஒழுக்கங்களில் நம் தேசத்துப் பலதிறப்பட்ட மக்கள் ஒன்றுபட்ட வாழ்வு வாழ மாட்டார்களாயின், அவர் களின் மதமும் தேசீயமும் ராஜீயமும் மேலோங்க மார்க்கமின்றி தடைப்பட்டு கிடக்கவேண்டியதாகும். இந்தப் பொதுவிதி தற்காலம் நம் இந்திய தேச மக்க ளுக்குப் பெரிதும் பொருந்தியிருக்கிறது.

இந்தியாவில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தான் இரு பெருஞ் சமூகத்தினர். இரு சமூகத்தவர்களின் மதானுஷ்டானங்கள் வெவ்வேறாயினும், கல்வி, நடை யுடை, ஒழுக்கம், பொருளாதாரம், சமூகச் சீர்திருத் தம் முதலிய பொது விஷயங்களில் இரு வகுப்பார் களும் கலந்துறவு பூண்டு, ஐக்கியமாய் வாழ்வதில் இரு சமூகங்களுக்கும் அனுகூலங்கள் உண்டு.

## திரு நபி காட்டிய பாதை

பொது விஷயங்களில் இதர சமூகத்தார்களுடன் ஐக்கியம் ஏற்படுத்திக்கொண்டு வாழ்ந்து நலனடைய வேண்டுமென்று இஸ்லாம் மதமே முஸ்லிம்களுக்குப் போதித்துக் கொண்டிருக்கிறது. பொது விஷயங் களில் பிற மதத்தார் இடும் கட்டளைக்கு முஸ்லிம்கள் இணங்கி நடக்கக்கூடாதென்று இஸ்லாத்தில் விலக் கொன்றுமில்லை. அயல் மதத்தாருடன் இணங்கி ஒற்

றுமை பூண்டு வாழவேண்டு மென்பதற்கு நபிகள் நாய கம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தாமே ஓர் இணையற்ற வழிகாட்டியாய் வாழ்ந்து வந்தார்கள். ஓர் உதாரணம்:—

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு மதீனா வந்து சேர்ந்திருந்த காலம். மதீனாவாசி கள் அக்காலை ஏக மதஸ்தினராய் இருக்கவில்லை. கிறிஸ் துவர்களு மிருந்தார்கள்; விக்ரஹ ஆராதனைக்காரர்களு மிருந்தார்கள்; யூதர்களு மிருந்தார்கள். கிறிஸ்துவர் கட்கும் விக்ரஹ ஆராதனைக்காரர்கட்கும் பன்னெடுங் காலமாக மனஸ்தாபம். ஓய்வு கிடைக்கும் போதெல் லாம் அவர்கள் வகுப்புச் சச்சரவைத் தூண்டி, ஒரு வரையொருவர் அடித்துக் கொள்வார்கள். எனவே, எஞ்ஞான்றும் அவர்களுக்கிடையே பூசல் தீ புகைந்து கொண்டே தான் இருக்கும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்து சேர்ந்ததும் முதன்முதல் எடுத்துக்கொண்ட பிரதான சேவை பலதரப்பட்ட அவ்வகுப்பினரை சமரஸப்படுத்தி ஓர் ஒப்பந்தத்தின் மூலம் அவர்களை ஐக்கியப்படுத்தி வைத்தது தான். நபிகள் நாதர் வகுத்த ஒப்பந்தம் எந்த மதத்தினருக்கும், எந்த ஜாதி யினருக்கும் ஒரு சிறிதும் பாதகமில்லாத முறையில் மிகத் தாராள நோக்கங் கொண்டதாய் இருந்தது. கிறிஸ்துவர்கள் தங்கள் திரியேகத்துவக் கோட்பாட் டைக் கடைப்பிடிக்கவும், விக்ரஹ ஆராதனைக்காரர்கள் தங்கள் ஆராதனைகளைத் தாராளமாய் செய்யவும் பரி பூர்ண சுதந்திரம் இருந்துவந்தது. ஆனால், மத வழி பாடுகளைத் தவிர்த்து, மற்ற துறைகளில் அவ்வெல்லா

வர்க்கத்தாரும் ஒரே சமூகத்தைப் போலவே வாழ்க்கையை நடத்திவந்தார்கள். நடை. யுடை பாவனைகளெல்லாம் ஒரே விதமாகத்தான் இருந்துவந்தது.

## மக்கா வெற்றி

மதீனா வாசிகள் அங்ஙனம் தத்தம் மத விவகாரங்களைப் பிரத்தியேகமாய் வைத்துக்கொண்டு பொது விவகாரங்களில் அரசியல், தேசீய வாழ்க்கைத் துறைகளில் ஒரே சமுதாயம் போல் இருந்து வந்ததனால் தான் எல்லோரும் சேர்ந்து (முஹம்மத் நபியின் தலைமையின் கீழ்) மக்காவை ஜெயித்து வெற்றிக்கொடி நாட்ட சாத்தியமாய் இருந்தது.

முஸ்லிம்கள் மத விஷயத்திலும், தேச, அரசியல் சமுதாய விஷயங்களிலும் இதர சமூகத்தாருடன் எங்ஙனம் நடந்துகொள்ள வேண்டுமென்பதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மதீனா வாழ்க்கை மூலம் பிரத்தியக்ஷப் பிரமாணமாய் அனுஷ்டித்துக் காட்டியுள்ளார்கள்.

இக்கால முஸ்லிம்கள் நபியின் இந்த ஸுன்னத்தை (அடிச்சுவட்டை) ஏன் பின்பற்றி நடக்கக்கூடாது? இந்திய முஸ்லிம்கள் ஹிந்துக்களுடனும் இதர சமூகத்தார்களுடனும் ஐக்கிய வாழ்வு ஏன் வாழக்கூடாது? அக்கால மதீனா வாசிகளுக்கு வாழ்க்கை முறை, அரசியல் பிரச்னை இவற்றின் லக்ஷியம் ஒன்றாய் இருந்ததைப் போல் தான் இன்றும் இந்திய மகாஜனங்களின் அரசியல், சமுதாய லக்ஷியம் ஒரே விதமானதாய் இருக்கிறது.

இவ்விந்திய நாட்டில் முஸ்லிம்கள், கிறிஸ்துவர்

கள், ஹிந்துக்கள் முதலான அனைவரும் ஒரே பூமித் தாயின் மக்களா யிருந்து வருகின்றோம்; நாமெல்லோரும் சுவாசிக்கும் காற்று ஒன்றே; பருகும் நீர் ஒன்றே; அனுபவிக்கும் சீதோஷ்ணம் ஒன்றே; குடி வாழ்க்கை முறை ஒன்றே. நாமெல்லோரும் பிறந்தது இம்மண் மீது; இறக்கப்போவதும் இம்மண் மீதே. அங்ஙன மிருக்க, தேசீய அரசியல் சமுதாயத் துறைகளில் மட்டும் நமக்குள் வேற்றுமையும் பூசலும் எதற்கு?

## பிற மதஸ்தருடன் நேசம்

பிற மதஸ்தருடன் முஸ்லிம்கள் எத்துணை பரஸ்பரமாய் நேசம் பூண்டு வாழவேண்டுமென்பதற்கு நபிகள் பெருமானாரின் மதீனா வாழ்க்கையே சிறந்த அத்தாக்ஷி. ஸஹ சமூகத்தாரின் மதாசாரம் வேறாய் இருப்பதற்காக தேச அரசியல் விஷயங்களிலும் அவர்களுடன் நாம் எதிரிடையா யிருக்கவேண்டுமென்பது நியாய மல்ல.

“உங்களுடைய மதம் உங்களுக் குரியதாகும்; என் மதம் எனக் குரியதாகும்” என்பது குர்ஆன் வாக்கியம். நபிகள் நாதர் (ஸல்) இந்த வாக்கியத்தை அடிக்கடி கூறி, அயல் மதஸ்தர்களுடன் இணங்கி வாழ வேண்டுமென்று தம் சஹாக்களுக்குப் போதித்து வருவார்கள்.

குர்ஆன் வேதத்தில் மற்றோரிடத்தில், “முஸ்லிம்கள் முஸ்லிமல்லாதார்களுடன் பரஸ்பரம் நேசமாய் நடந்துகொள்ள வேண்டும்; அவர்கள்பால் நியாயத்தையே வழங்கவேண்டும்; அவர்களுக்கு அநீதி புரியக்

கூடாது" என்று போதிக்கப்பட்டுளது. இதைப் போன்ற நற்போதங்கள் திருக் குர்ஆனிலும், நபித் திருவாக்கியங்களிலும் ஏராளமாய் மலிந்து காணப்படு கின்றன.

இஃதிங்ஙன மிருக்க, "காபிர்கள் மீது நம்பிக்கை வைக்கக்கூடாது; அவர்களுடன் முஸ்லிம்கள் நெருங்கி வாழக்கூடாது" என்று கொஞ்ச காலத்திற்கு முன் வைதிக மௌல்விகள் பாமரமக்களுக்குத் துர்போதனை புரிந்துவந்தார்கள்.

## காபிர்களின் உறவு

ஆயினும், காபிர்கள் எனப்படும் ஹிந்துக்களும் மூமின்களாகிய முஸ்லிம்களும் கூடி வாழவேண்டு மென்று மார்க்க ஆதாரங்களுடன் வற்புறுத்தி வந்த நல்ல மௌல்விகளும் அக்காலத்தில் இருந்து வந்தார் கள். முல்லா அப்துல் கய்யூம் (மர்ஹூம்) அவர் கள் இன்றைக்கு 35 வருடங்களுக்கு முன்னரே "காங்கிரஸும் இஸ்லாமியரும்" என்றொரு உர்தூ புத்தகம் வெளியிட்டிருந்தார். அக்காலை நடைபெற்று வந்த உர்தூ முஅல்லா, ஜமானு முதலிய பத்திரிகை களில் அவ்விஷயங்கள் பிரசுரிக்கப்பட்டு வந்தன. அந் நூல் மௌலானு ஹஸ்ரத் மோஹானி யவர்களின் வேண்டுகோள் மீது அக்காலை இயற்றப்பட்டது. "மத வித்தியாசத்தை ஆசார அனுஷ்டான (ஷரீஅத்) விஷ யத்தில் மட்டும் வைத்துக்கொண்டு, லோகார்த்தமான பொது விஷயங்களில் முஸ்லிம்கள் ஹிந்துக்களுடன் பரஸ்பரமாய் வாழவேண்டும்; இதனை இஸ்லாமும் கட்டாயப்படுத்துகிறது" என்பதே அந்நூற் போதனை

யின் சாராம்சம். அக்காலை சில மௌல்விகள் அப் பிரசுரத்தை எதிர்த்துக் கண்டனமும் வெளியிட்டனர்.

பிறகு கிலாபத் இயக்கத்தின்போது அந் நூலின் விஷயம் பெரிதும் அங்கீகரிக்கப்பட்டது. நூலாசிரியர்களான முல்லா அப்துல் கய்யூம் (மர் ஹூம்), மௌலானா ஹஸ்ரத் மோஹானி ஆகியோர் மிகவும் பாராட்டப்பட்டனர். அத்தகைய அரிய நூலிலிருந்து இரண்டொரு வாசகங்களை மட்டும் ஈண்டு குறிப்பிடுவோம்:—

"தீனுல் இஸ்லாத்தையும், முஸ்லிம் சமுதாயத் தையும் முன்னேற்றமுறச் செய்யவேண்டுமென்ப தற்காக அகிம்சையையும் அட்டூழியத்தையும் முஸ்லிம்கள் அனுஷ்டிக்கக் கூடாது என்பது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளை. இதர வர்க்கத்தினர் நம்மவர்க் குத் தீங் கொன்றும் செய்யாதவரை அவர்களை நாம் எதிரியாகப் பாவிக்கக் கூடாது.........

"ஷரீஅத்துடைய ஆசார நியமங்களைத் தவிர்த்து மற்ற விஷயங்களில் கால தேச வர்த்தமானங்களுக் கேற்ப நாம் நடந்து கொள்ள நபிகளுநாதர் (ஸல்) அனு மதித்துள்ளார்கள். முஸ்லிம்க ளெல்லோரும் ஒன்று பட்டு வாழ்வதோடு, நாகரிகம், ராஜீயம் முதலிய விஷயங்களில் இதர சமூகங்களுடன் கூட்டுறவு பூண்டு வாழவும் இஸ்லாம் அனுமதிக்கிறது. பிற ருக்கு நன்மையைக் கொண்டு ஏவுங்கள்; தீமையை விட்டும் விலகுங்கள்" என்ற வேதக் கட்டளையிலும் ஜனசமுதாய க்ஷேமமே மூலக் கருத்தாகக் கொள்ளப் பட்டிருக்கிறது.........

## நாகரிக போதனை

"இந்தியாவில் முஸ்லிம்கள் பிற சமூகங்களுடன் பொது விஷயங்களில் எங்ஙனம் கலந்துறவு கொள்ள வேண்டுமென்பதற்கு உலக அனுபவங்களே நமக்குப் பாடம் கற்பிக்கின்றன. அறிவு, நாகரிகம் லோகத்தில் முதிர முதிர, அவிவேகமும் அனுசாரமும் மறைந்து வருவதைக் காண்கிறோம். ராஜீய தேசிய விஷயங் களில் பல வர்க்கமும் ஒன்றுபட்டு சேவை செய்வ தில் பாஷையோ, வகுப்போ, மதமோ, நிறமோ முட்டுக் கட்டையாய் இருப்பதில்லை. இங்கிலாந்தின் சரிதையை நோக்குவோம். நாகரிகமும், ராஜதந்திர மும் அங்கு ஓங்கியதும் வர்ண பேதங்கள் மறைந்து விட்டன. கல்டக், சேக்கன், நாரன் முதலிய வம்ச வித்தியாசங்கள் இப்போது கிடையாது. இங்கிலாந்து வாசிகளும், ஸ்காட்லாந்து வாசிகளும் ஒருவரை யொருவர் சத்துருக்களாய் மதித்திருந்த போதிலும், அரசியல் விஷயத்தில் ஒன்றுபட்டு விட்டார்கள். கானடாவும் இவ்வாறே மாறுபட்டு விட்டது. பிரஞ் சுக்காரர், ஆங்கிலேயர் என்ற வித்தியாசம் கிடை யாது. ஆஸ்திரியாவிலும் நிலைமை இப்படித் தான். ஆஸ்திரியன், பொஹிமியன், ஹங்கேரியன் என்ற வேறுபாடுகள் அந் நாட்டில் இப்போது கிடையாது. 'நேஷன்' என்ற பிரச்னை வந்ததும் எல்லோரும் ஒரே தேசத்தினராக மாறி விட்டனர்.........

"அமெரிக்க மக்களும், இங்கிலாந்து வாசிகளும் ஒரே பாஷை பேசுவர்கள் தான். ஆயினும், அவர் கள் அரசியல் விவகாரங்களில் தத்தம் தேச லக்ஷியத்

தைத் தான் பெரிதென மதிக்கிறார்கள். இவ்வாறே பாஷையும், மதமும் ஆசாரமும் வெவ்வேறா யிருந்த போதிலும், தேசம், விடுதலை, குடி நலம் என்ற பிரச்னைகள் எழும்போது இந்தியர்களாகிய எல்லோரும் ஒன்றுபட்டு ஐக்கியபாவ மேற்படுத்திக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறோம். இந்த ஒற்றுமைக்கு எந்த மதமும் எதிரிடையாய் இராது. * "ஜிம்மி" களுடைய உரிமைகள் கூட முஸ்லிம்களுடைய உரிமைகளைப் போல் அங்கீகரிக்கப்பட வேண்டு மென்றும் அவர்கள், வேறு மதத்தை யனுஷ்டிப்பவர்களாயினும், அக்குடிகளுக்கும் முஸ்லிம் குடிகளுக்கு மிடையில் எவ்வித பாரபக்ஷமும் காட்டக் கூடாது என்பது இஸ்லாமிய ராஜ நீதி.

---

* ஜிம்மி எனப்படுவோர். இஸ்லாமிய மன்னரின் ஆட்சியின் கீழ்குடிகளாயுள்ள முஸ்லிமல்லாதார் (காபிர்).

# இஸ்லாமும் தேசியமும்

மனிதர்களுக்குள் வேற்றுமை என்பது மதம், நிறம், குலம் ஆகிய விஷயங்களை யொட்டித்தான் ஏற்படும். தேசம் என்ற பொதுப்படை ஏற்படும் போது எல்லோரும் சமம் தான். ஒரு தேசத்தினர் என்று கணிக்கப்படும்போது ஜாதி, மதப் பேச்சுகள் குறுக்கே நிற்பதில்லை. ஹிந்து, முஸ்லிம் என்ற பெயர் வித்தியாசமும் அர்த்த மற்றதாகும். இந்தியாவில் வாழும் முஸல்மான்களை அரபியர் "ஹிந்து" என்று தான் அழைக்கிறார்கள். ஹிந்து என்றால் "இந்திய வாசி" என்று அரபுகள் அர்த்தம் கொள்ளுகிறார்கள்.

நாம் அரபி என்று சொல்லும்போது பொது வாய் 'அராபியன்' என்று தான் அர்த்தம் கொள் கிறோம். அரபுகளுக்குள் முஸ்லிம்கள், யூதர், கிறிஸ் துவர் முதலியோர் அடக்கம். இவ்வாறே தான் துருக்கியர், எப்தியர், ஈரானியர், ஆப்கானியர் என்று சொல்லும்போ தெல்லாம், பொதுவாய் அந்தந்த நாட்டு மக்களைக் குறிப்பிடுகிறோம். இந்து தேசத்தில் வாழும் ஒரு சாரார் மட்டும் தம்மை இந்து (இந்தியன்) என்று கூறிக் கொள்ள ஏன் லஜ்ஜை யடைகின்ற னரோ? இதுவும் காலப் போக்கின் விபரீதமே!

"ஒரு தேசத்தில் ஒரே வர்க்கத்தினர் தான் இருக்க வேண்டும்" என்று கூறுவது அர்த்தமற்ற— அனுபவ சாத்தியமற்ற வாதமாகும். ஓர் உத்தியான வனத்தில் பல ஜாதி விருக்ஷங்கள் இருப்பது அதற்கு அழகைத் தருவதாகும். பூங்காவுக் குள்ளிருப்பவை பலவகை மரங்களாயினும், யாவும் ஒரே தோட்டத்

துத் தாவரங்களாகவே பாவிக்கப்படும். அவ்வாறே ஒரு தேசத்தில் பல்வகை ஜாதியினரும், பல்வகை நிறத்தவரும், பல்வகை மதத்தினரும் கலந்துறைந்த போதிலும், எல்லோரும் அந்த தேசத்துக் குடிகளே யாவர். ஒவ்வொருவரும் சுதேசி என்று பெருமை யடைய வேண்டும்.

## ஒரே மதம் சாத்திய மன்று

இந்தியா தேசத்தின்கண் வதியு 35 கோடி மக்களும் தங்களைப் போல் இஸ்லாமியர்களாகி விட வேண்டுமென்று முஸல்மான்கள் ஆசை கொள்வதும், முஸ்லிம்க ளெல்லோரும் ஹிந்துக்களாகி விட வேண்டு மென்று ஹிந்து மகா சபைக்காரர்கள் விரும்புவதும் வீண் பகற்கனவே யாகும். இந்நாட்டில் ஹிந்துக்கள் ஹிந்துக்களாகவே தானிருக்க வேண்டும்; முஸ்லிம் கள் முஸ்லிம்களாகவே தானிருக்க வேண்டும். ஆனால், தேசீய லக்ஷியம் முன்னிற்கும்போது ஹிந்து, முஸ்லிம் எல்லோரும் தம்மை இந்ியன் என்றே பாவித்துக் கொண்டு தேசத்துக் குழைக்க வேண்டும்.

ஒரு காலத்தில் ஒரு சில முஸ்லிம் மன்னர்கள் அன்னிய மதத்தினரைக் கட்டாயப்படுத்தி இஸ்லாத் தில் சேர்த்தனர் என்றும், ஆகையால் தான் இந்தியா வில் முஸ்லிம்கள் அதிக்கம் நிலைத்த தென்றும் சரித் திரக்காரர் சிலர் எழுதி வைத்துள்ளனர். இது எம் மட்டும் வாஸ்தவ மென்பதை நாம் ஆராயப் போவ தில்லை. ஆனால், அங்ஙனம் கட்டாயப்படுத்தி யாரை யும் இஸ்லாத்தில் சேர்க்கக்கூடா தென்பதே இஸ்லாத் தின் கட்டளை. இதை யொட்டி திருக் குர்ஆனில் காணப்படும் ஒரு சில வாக்கியங்களாவன:—

(1) "மத விஷயத்தில் பலாத்காரமே கிடையாது. துன்மார்க்கத்தை விட்டும் சன்மார்க்கம் இன்னதென்பது திண்ணமாய் எடுத்துக் காட்டப்பட்டு விட்டது."

(2) "எனவே, இஷ்டப்பட்டவன் (சன்மார்க்கத்தை ஏற்று) ஈமான் கொள்ளட்டும்; இஷ்டப்பட்டவன் (துன்மார்க்கத்தில் கிடந்து) காபிராய் போகட்டும்."

(3) "உமது இறைவன் விரும்பி யிருப்பானுனால், இப் பூவுலகிலுள்ளோர் அனைவரும் ஈமான் கொண்டு (முஸ்லிமாகித்) தானிருப்பர். (ஆனால், ஆண்டவன் அப்படி விரும்பவில்லை.) அங்ஙனமிருக்க, ஜனசமூகமெல்லாம் ஈமான் கொண்டவர்களாகி விடவேண்டுமென்று நீவிர் எதற்காக விழைகின்றீர்?"

(4) "ஆண்டவன் விரும்பி யிருப்பானுனால், மனித வர்க்கமெல்லாம் ஒரே சமூகமாகித் தானிருக்கும்...."

அந்தப் பரந்தாமனுகிய அல்லாஹ் ஜீவாத்மாக்களாகிய மாந்தர் பற்பல பாஷைகளில், பல துறைகளில், பல புகழ்களில் தன்னைத் துதித்து வணங்கி இறைஞ்சி தூய்மையை யடையவேண்டுமென்றே விரும்புகின்றான். ஆகவே தான், நல்லார்—பொல்லார், ஆஸ்திகன்—நாஸ்திகன், ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்துவன், யூதன், புத்தன், சமணன் என்ற பாகுபாடின்றி சமத்துவமாய் எல்லோருக்கும் இறைவன் உணவளித்துப் பாதுகாத்துச் சம்ரக்ஷிக்கின்றான்.

## இஸ்லாத்திற்குக் 'காபிர்'கள் உதவி

முஸ்லிம்கள் எந்த வகையிலும் ஹிந்துத் தலைவர்

களுக்கு இணங்கி நடந்து கொள்ளக் கூடாதென்று ஒரு சில முஸ்லிம் தலைவர்க ளெனப்படுவோர் கூறி வருகின்றனர். இது, அவர்கள் இஸ்லாமிய ஷரீஅத் தின் தாராளத் தன்மை எத்தகைய தென்பதைச் சரிவர உணர்ந்து கொள்ளாததின் விளைவென்றே கருதவேண்டி யிருக்கிறது. இஸ்லாம் சிறு விருக்ஷ மாய் வளர்ந்து கொண்டிருந்த காலத்தில், அயல் மதத் தலைவர்களாகிய "காபிர்கள்" சிலர் ஆதர வென்னும் நீரூற்றி வளர்ந்து வந்துள்ளார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக சமய சந்தர்ப்பானுசாரம் குறைஷ் குல குப்பார்களிடம் சகா யம் பெற்றிருக்கிறார்கள்.

லோக வியவகாரார்த்தமாய் நபிகள் பெருமானார் (ஸல்) காபிர்களிடம் பெற்ற உதவிகள் அபரிமிதம். மத வளர்ச்சியைக் கருதி பெற்ற உதவிகள் தான் ஈண்டு குறிப்பிடத் தக்கவை. ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஹுனைன் யுத்தத்தின்போது ஸப்வான் பின் உமய்யாவிடம் உதவி பெற்றார்கள். ஸப்வான் இஸ் லாத்தை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று நிரா கரித்துவிட்ட 'முஷ்ரிக்' என்பது வெளிப்படை.

"நிச்சயமாக அல்லாஹு தஆலா இந்த (இஸ் லாம்) மதத்திற்குக் காபிர்களைக் கொண்டும் பாபிகளைக் கொண்டும் சகாயம் செய்விப்பான்" என்பது நபிகள் (ஸல்) திருவாய் மலர்ந்தருளிய வாக்கு.

"சத்தியம் காத்தலும், ஜன சமூக சேவையும், அரசியல் காரியமும் சுயமே சாதிக்க இயலாத காலத் தில், முஸ்லிம்கள் அத்துறைகளில் காபிர்களிடம்

(அயல் மதஸ்தர்களிடம்) சகாயம் பெறுவதும், விண்ணப்பித்துக் கொள்வதும் பாதகமில்லை'' என்று காஜீ பைஜாவி தமது தப்ஸீரில் ஓர் ஆயத்துக்கு வியாக்கியானஞ் செய்கையில் கூறியுள்ளார்.

அங்ஙனம் காபிர்களிட மிருந்து பெற்ற உதவிக்காக முஸ்லிம்கள் தம் பொதுச் சொத்திலிருந்து ஒரு பகுதியைப் பிரதிகூலமாய் சன்மானிக்கலா மென்றும் இஸ்லாத்தில் அனுமதி யுண்டு. அவசியத்தின் பேரில் முஷ்ரிக்கை (முஸ்லிமல்லாதவரை) கூட 'காஜி'யாக நியமிக்கலாமென்று குராஸானின் ஷெய்குல் இஸ்லாம் அவர்கள் தமது "ஸலூகுல் முலூக்'' என்ற நூலில் கூறியிருக்கிறார்.

இத்துணை ஆதாரங்களை இஸ்லாமிய கிரந்தங்களிலிருந்து இங்கு எடுத் தெழுதவேண்டிய அவசியம் யாதெனின், தேசீய, அரசியல், சமுதாய விஷயங்களில் கூட முஸ்லிம்கள் ஹிந்து தலைவர்களுடைய கூட்டுறவையும் யோசனையையும் பெற்றுக்கொள்ளக் கூடாதென்று சிலர் பிடிவாதம் புரிந்துவருகிறார்களே, இது இஸ்லாம் மத போதனையின் தாராளத் தன்மைக்கு எத்துணை முரணாயிருக்கிற தென்பதைச் சுட்டிக் காட்டுவதற்கேயாம்.

## ஹிந்துக்கள் நீதிபதி

சொற்ப நாட்களுக்கு முன் இந்தியா சட்டசபையில் "குலா'' (முஸ்லிம் பெண் விவாக ரத்து) பாத்தியதை மசோதா ஒன்று பிரேரேபிக்கப்பட்ட போது, முஸ்லிம்களுடைய விவகாரம் சம்பந்தப்பட்ட பிரேரணைக ளெல்லாம் முஸ்லிம்களாலேயே சமர்ப்பிக்கப்

பட வேண்டுமென குறுக்குப் பிரச்னை யொன்று கிளப்பப்பட்டது. நல்ல விஷயம் யார் சொன்னு லென்ன? நல்லுபதேசம் சுவற்றில் வரையப்பட்டிருந் தால் தானென்ன? அதை யேற்றுக் கொள்வதில் என்ன பாதகம்?

முஸ்லிமல்லாதார் கூறும் பொது நீதிகளை முஸ் லிம்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாதென்றால், முஸ் லிம்களுடைய விவகாரங்களை வாதித்துத் தீர்ப்பளிக்க வேண்டி கோர்ட்டுகளில் வக்கீல், ஜட்ஜ், ஜூரி முத லிய எல்லோரும் முஸ்லிம்களாகவே தான் நியமிக் கப்பட வேண்டி வரும். இஃதெல்லாம் இந்நாட்டில் சாத்திய மாகுமா?

நிஜாம் சர்க்கார் ஆட்சியில் ஹிந்து, முஸ்லிம் இரு வகை நீதிபதிகளும் இஸ்லாமிய ஷரீஅத்தை யனு சரித்து, முஸ்லிம்களுக்குத் தீர்ப்பளித்து வருகிறார்கள். ஆங்கு இது விஷயத்தில் நிஜாம் ராஜ்ய முஸ்லிம் குடி கள் ஆக்ஷேபனை யொன்றும் கிளப்புவதில்லை.

மத விஷயங்களில் கூட அயல் மதஸ்தனின் உதவியும் ஆலோசனையும் பெற்று நடக்கலா மென்று இஸ்லாமிய சம்பிரதாயம் தாராளத் தன்மை காண்பித் திருக்க, இக் கால முஸ்லிம்கள் சிலர் அயல் மதஸ்தர் களின் (ஹிந்து சோதரர்களின்) 'சங்காத்தியமே' எந்தத் துறையிலும் கூடாதென்று பகிஷ்கார புத்தி காட்டுவது எத்துணை விபரீதம்!

## சமுதாய உற்பத்தி

ஹிந்து ஸ்தானத்திலுள்ள தற்கால 8 கோடி முஸ் லிம்களும் அரபியாவி லிருந்தோ, துருக்கியி லிருந்தோ

நேரே இங்கு குடியேறியவர்க ளல்லர். இந் நாட்டி லுள்ள முஸ்லிம் மகா ஜனங்களில் பெரும்பாலோர், பாரத தேசத்துப் பூர்வ மக்களாகிய ஹிந்து மூதாதை களின் வம்சத்தில் தோன்றியவர்கள் தான். தற்கால இந்தியாவில் 22 கோடி ஹிந்துக்களும் அவ்வாறே பூர்வ ஹிந்து மூதாதைகள் வழி பிறந்த மக்கள் தான்.

எனவே, பூர்வ பாரம்பரியத்தைக் கவனிக்கையில், 8 கோடி முஸ்லிம்களும் 22 கோடி ஹிந்துக்களும் ஒரே குடும்பத்துப் பிள்ளைகள் போலாகின்றனர். இத் தகைய ரத்த பாசமும், வம்சத் தொடர்பும் கொண்ட இரு சமூகத்தினர், ஒருவரை யொருவர் வெறுப்பதும், விரோதம் பாராட்டுவதும், சச்சரவிட்டுக் கொள்வதும் எத்துணை மதியீனம்? ஹிந்துக்கள் 22 கோடிபேர் இருப் பதால் அவர்கள் மூத்த சகோதரர்களாகவும், முஸ்லிம் கள் 8 கோடி இருப்பதால் அவர்கள் இளைய சகோ தரர்களாகவும் பாவிக்கப்படுகின்றனர். அண்ணன் போதிப்பதைத் தம்பி கேட்டு நடப்பது தான் உலக ஒழுக்க சம்பிரதாயமா யிருந்து வருகின்றது.

நியதி இவ்வண்ண மிருக்க, “நாங்கள் காபிர் களுக்குக் கட்டுப்பட்டவர்களா? ஒருக்காலும் முஸ் லிம்கள் ஹிந்துக்களுடைய பேச்சைக் கேட்டு நடக்க முடியா”தென்று விதண்டாவாதம் புரிகின்றனர் நம் முஸ்லிம்கள் சிலர்.

ஆதி பரம்பரை பாத்தியதைப்படி ஹிந்துக்கள் நம்முடைய உற்ற உறவினர்க ளாகின்றனர். மதம் வேறுபட்டிருப்பதனுல் உறவின் முறைப் பாத்திய தையே அற்றுப் போய்விட மாட்டாதென்பது இஸ்

லாத்தின் கோட்பாடு. இஸ்லாமிய ஆரம்பகாலத்தில் முஸ்லிம் ஜனத்தொகை மிகச் சொற்பமாய் தானிருந்தது. ஆதலால், முஸ்லிமல்லாத குறைஷ் குலத்தினர் (அரபுக் காபிர்கள்) முஸ்லிம்கள் தங்கள் இன பந்துக்களாயிருந்தும் இவர்களைப் பகிஷ்கரிக்கத் தலைப்பட்டார்கள். எளிய முஸ்லிம்கள் தங்கள் நபியை யணுகி, இதற்கென்ன பரிகாரம் என்று வினவினர். அதற்கு நபிஞதர் (ஸல்), "அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளவில்லை யாயினும், நம்முடைய இன பந்துக்களே. இஸ்லாத்தில் சேரவில்லையென்பதற்காக அவர்களை நாம் பகைத்துக்கொள்ளக் கூடாது" என்று சமரஸ போதனை புரிந்தார்கள்.

## சத்துரு யார்?

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் இந்தப் போதனையை நம் இந்திய முஸ்லிம்கள் ஏன் பின்பற்றத் தயங்குகின்றனரோ? முஹம்மத் நபியின் இன்னுயிருக்கும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கும் சொல்லொணுத் துன்பங்கள் இழைத்த குறைஷிக் காபிர்களுடன் பந்துத்வத்தோடு அன்வயித்து நேசமாய் வாழ வேண்டுமென்று இஸ்லாத்தின் கர்த்தர் திரு நபி (ஸல்) நமக்குப் போதித்திருக்க, இந் நாட்டில் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கும், முஸ்லிம்களின் முன்னேற்றத்துக்கும் அளப்பரிய உதவிகள் புரிந்து வரும் இந்து சோதரர்களுடன், சத்துருத் தன்மை பூண்டு மித்திர பேதமாய் வாழ்வது எத்துணை மதியீனம்! சத்துருவை மித்துருவாக பாவிக்க வேண்டுமென்பது இஸ்லாத்தின் போதனையாயிருக்க, மித்துருவைச் சத்துருவாகக் கருதுவது எத்துணை பேதமை!

"மத விஷயமாய் உங்களுடன் யுத்தம் தொடுக்காத (நல்ல) ஜனங்களுடன் நீங்கள் உறவு கொள்வதை விட்டும் அல்லாஹு தஆலா உங்களை விலக்கவில்லை. உங்களை இல்லங்களை விட்டும் விரட்டாத அன்னவர்களுக்கு நீங்கள் நன்றி புரியுங்கள். அவர்கள் விஷயத்தில் நீங்கள் நீதி தர்மத்தோடு நடந்து கொள்ளுங்கள். நீதிவான்களைத் தான் அல்லாஹு தஆலா மிகவும் நேசிக்கின்றான்."
—குர்ஆன் வாக்கு

மேற்கண்ட குர்ஆன் மொழியின் கருத்து மிகத் தெளிவாய் இருப்பதால், அதை யொட்டி அறிவுடையோர்க்கு அதிகம் விளக்க வேண்டியதில்லை.

"முஸ்லிம்கள் பிற மதஸ்தர்களாகிய காபிர்களுடன் எத்தலைகய உறவும் வைத்துக்கொள்ளக் கூடாது; அவர்களை விட்டுத் தூர விலகி தனி வாழ்க்கை வாழ வேண்டும்; அவர்கள் கரங்களால் செய்த பக்ஷணங்கள் எதையும் வாங்கிப் புசிக்கக்கூடாது" என்பதற்கு வைதீக மௌல்விகள் தம் மார்க்கச் சட்டப் புத்தகங்களிலிருந்து ஏதேனும் 'மஸ்அலா'க்களை ஆதாரமாய் எடுத்துக் காட்டலாம். அந்த பகிஷ்கார 'மஸ்அலா' இக்கால நவீன நாகரிக உலகத்தில் 40 கோடி மக்களால் எம்மட்டும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதென்பதை அவர்கள் தங்களுக்குத் தெரியாவிட்டாலும், லோக விஷயந் தெரிந்த அறிஞர்களையாவது கேட்டுத் தெரிந்து கொள்வார்களாக.

இத்தகைய உலகமறியா வைதீகப் பெரியார்கள்தான் ஒரு காலத்தில் முஸ்லிம்கள் முஸ்லிமல்லாதவர்களிடம் (காபிர்களிடம்) உத்தியோகமும் புரியக்

கூடாதென்று 'மஸ்அலா' வெளிப் படுத்தியவர்கள். இன்று எத்தனை கோடி முஸ்லிம்கள், முஸ்லி மல்லாத வர்களிடம் அண்டிப் பிழைக்கின்றனர் என்பதை ஆராய்ச்சிக் கண் கொண்டு நோக்குவார்களாக.

"முஸ்லி மல்லாதாருக்குக் கீழ்ப்பட்டு நடக்கக் கூடாது" என்று இஸ்லாமியச் சம்பிரதாயத்திலுள்ள கட்டுப்பாடு எதற்கெனில், அல்லாஹ்வும் ரஸூலும் கட்டளை யிட்டுள்ள மதானுஷ்டானக் கடமைகளை அன்னிய மதஸ்தர்களின் தாக்ஷிண்யத்திற்காக திரஸ் காரம் செய்து விடக் கூடாது என்பதற்குத் தான். லோகார்த்தத் துறையில் கால தேச வர்த்தமானத்துக் கேற்ப நடந்து கொள்வதில் அயல் மதஸ்தர்களின் கூட்டாலோசனைப்படி நடந்து கொள்வதற்கு இஸ்லா மிய நீதி முட்டுக்கட்டையா யில்லை. குரோதத்தையும், விரோதத்தையும் விட்டு பரிசுத்த உள்ளத்தோடு நிலை மையை நோக்குவோமாயின், அயல் மதஸ்தர்களுடன் லோக வியவகாரங்களில் கலந்துறவு பூண்டு வாழ்வதில் எத்துணை அபரிமிதமான அனுகூலங்கள் இருக்கின் றனவென்பதை ஸ்பஷ்டமாய் தெரிந்து கொள்வோம்.

## சமாதான வாழ்வே இஸ்லாமிய வாழ்வு

'இஸ்லாம்' என்ற பதத்திற்குச் சாந்தி, சமாதா னம் என்பதே பொருள். இஸ்லாம் மதம் சாந்தி நிலையையும் சமாதான வாழ்வையும் கற்பிக்கும் சன் மார்க்கமாகும். இஸ்லாத்தின் மற்றொரு சிறப்பு, மனித வர்க்கத்தினர் விரோதங்களையும் வித்தியாசங்களையும் விட்டு, சகோதரத்வமாயும் சமத்துவமாயும் வாழ வேண்டு மென்பதாகும். எனவே, இஸ்லாத்தின் ஒவ்

வொரு கிரியையிலும் சத்தியம், சமத்துவம், சகோதரத்வம், ஐக்கியம் ஆகிய தத்துவங்கள் உறைந்திருப்பதைக் காணலாம். இஸ்லாத்தின் போதனை இத்துணை சிரேஷ்டமாய் இருப்பதால் தான் இதன் சுடரொளி சொற்ப காலத்தில் உலக மெங்கணும் பரவி வியாபித்து விட்டது. இத்தகைய உன்னத சிறப்புக்களைக் கருதித் தான் அயல் சமுதாயத்தினர் அதி ஆர்வத்துடன் தீனுல் இஸ்லாத்தை அங்கீகரித்துக் கொண்டு பயனடைந்தார்கள்.

## இணங்கி வாழுங்கள்

"இஸ்லாம் இதர சமூகத்தினர்களுடன் சுமுகமாய் இணங்கிவாழ விரும்புகிறது; சமாதானத்தின்கீழ் கூட்டுறவை விரும்புகிறது" என்பதற்கு இஸ்லாமிய சரித்திரமே போதிய சான்றாகும். எக்காரணத்தை முன்னிட்டும் பிற சமூகத்துடன் பிணங்கிக்கொள்ளக் கூடாது; சண்டை யிடலாகாது; சதி செய்யலாகாது என்ற லக்ஷியமே இஸ்லாத்தின் ஜீவநாடியாய் இருந்து வந்துள்ளது. நடைபெறும் யுத்தத்தைக் கூட நிறுத்தி விட்டு, எதிரிகளுடன் இணங்கி நேசமாகி விடவேண்டு மென்று பண்டை முஸ்லிம்கள் நமக்குப் பாடம் படித்துக் கொடுத்துச் சென்றுள்ளனர். இதற்கொரு சரித்திரச் சம்பவம் உதாரணம்:—

ஹுதைபியா யுத்தம் நிறுத்தப்பட்டு எதிரிகளுடன் இஸ்லாமிய வீரர்கள் இணங்கி சமாதான உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டார்கள். இரண்டாவது கலீபா ஹஜ்ரத் உமர் (ரலி) இயற்கையாகவே பராக்கிரமும், துணிச்சல் சுபாவமும், ரோஷத்தன்மையும்

உடையவர். இவர் அந்த சமாதானத் தன்மையைக் கண்டு மனம் கசிந்தார். "முஸ்லிம்களாகிய நாங்கள் இதரர்களுக்கு இணங்கி கேவலப்பட்டு வாழ்வதா? கூடாது!" என்று எண்ணினூர். இச் சம்பவத்தை யொட்டி ஆண்டவனால் அருளப்பட்ட வேத வாக்கி யத்தில் இந்த சமாதானம் "பத்ஹே முபீன்" (விகசித மான வெற்றி) யென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வாஸ்தவமாகவே இச் சமாதான உடன்படிக்கை யின் சில ஷாத்துக்கள் முஸ்லிம்கள் பக்கம் பலஹீனத் தையும், பணியும் தன்மையையும் வெளிப்படுத்தக் கூடி யதாகவே இருந்தன. இருந்தபோதிலும், அந்த சமா தானம் 'பகிரங்க ஜெயம்' என்று பாராட்டப்பட்டது. உண்மையில் எதிரியுடன் போரிட்டுக் கெடுவதைவிட சமாதானம் செய்து கொள்வது தான் அமர கீர்த்தி யளிக்கும் வெற்றி யல்லவா?

நபிகள் பெருமானூர் (ஸல்) அவர்கள் மதீனுவுக் குக் குடியேறியதும், முதன்முதலாக அவர்கள் புரிந்த தொண்டு, பல் வகைக் கூட்டத்தினரையும் ஒன்று கூட்டி, இனி எல்லோரும் மனஸ்தாபம் நீங்கி சமத் துவமாயும் சமாதானமாயும் இனிது வாழலாம் என்று ஏற்படுத்திக் கொண்ட சமாதானக் கூட்டுறவு தான். இதை மேலேயும் கூறியிருக்கிறேன்.

அதே தோரணையில் இந்தியாவின் கால வர்த்த மானத்துக் கேற்ப முஸ்லிம்களே முன்வந்து, இணக்க மான தன்மையில் ஒரு சமரச உடன்படிக்கை ஏற் படுத்தினூலென்ன? நபிகள் நாயகம் (ஸல்) செய்தது போன்ற நற்காரியத்தைச் செய்வது நம் முஸ்லிம்கள் மதக் கடமை யல்லவா?

அங்ஙன மிருக்க, தற்காலம் இந்திய முஸ்லிம் தலைவர்கள் நடந்து கொள்ளும் தன்மை மகா விபரீத மானதாய் இருப்பதைக் காண்கின்றோம். ஹிந்து, முஸ்லிம்களுக் கிடையில் பரஸ்பர நேசத்தையும் ஒத்து ழைப்பையும் ஏற்படுத்துவதற்குப் பதிலாக, பகைமை யையும் பிளவையும் ஏற்படுத்தக் கூடியனவா யிருக் கின்றன அவர்கள் நடத்தைகள். எரிகிற கொள்ளி யில் எண்ணெயை ஊற்றுவது போலிருக்கின்றன தலைவர்களில் சிலர் வெளியிடும் அபிப்பிராயங்கள். இதனால் யாது பயன்? இந்திய ஸஹ சமூகத்தாருடன் பகைமைக் கனலை வளர்த்துக் கொள்வதால் முஸ்லிம் சமுதாயமும் இஸ்லாமும் பாதுகாக்கப்பட்டனவாய் விடுமா? ஸஹ சமூகத்தை விரோதித்து வாழ்வதால், இஸ்லாத்தின் வளர்ச்சிக்கோ, முஸ்லிம்கள் முன்னேற் றத்துக்கோ ஏதேனும் பிரயோஜன முண்டாகுமா?

## பகைமை வேண்டாம்

நெருப்பு நெருப்பை அதிகரிக்கச் செய்வதைப் போல், வெறுப்பு வெறுப்பை அதிகரிக்கச் செய்யும். பகைமை பகையையே விருத்தி செய்யும். இரு சமூ கங்களுக் கிடையில் நாளுக்கு நாள் வெறுப்பும் பகை மையும் அதிகரித்துக்கொண்டே போனால் அதன் முடிவு என்னகு மென்பது ஓர்ந்து பார்க்கத் தக்கது. அன் பும் அன்யோன்யமும் என்ன பலனைத் தருமென்பதை யாவரும் நன்கறிவர். அன்பு அபிப்பிராய பேதத்தைப் போக்கும்; பகைமையின் வேரைக் கெல்லி எறிந்து ஒருவரை யொருவர் நெருங்கிப் பழக சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும்; நல்ல காரியங்களுக்குக் குறுக்கே

நிற்கும் முட்டுக்கட்டைகளை விலக்கும். துவேஷத்தால் நன்மை அணுவத்துணையும் உண்டாக மாட்டாது. முஸ்லிம்கள் இந் நியதியை உணர்ந்து நடப்பார்களாக.

பொதுவாக ஹிந்து சமூகமாயினும், முஸ்லிம் சமூகமாயினும், அல்லது வேறெந்த சமூகமாயினும் சரியே, சுதேசத்தில் வாழும் ஸஹ சமூகத்துடன் இணங்கி ஒருமனப்பட்டு வாழ்வதே அச் சமூகத்துக்கும் தேசத்துக்கும் நன்மை பயப்பதாகும். அதை விட்டுத் தம் நடைமுறையினாலும், மொழியினாலும் ஸஹ சமூகத்தின் மனம் புண்படும்படியாய் நடந்து கொள்வோமாயின், அந்த மனத் தாங்கல் நாளுக்கு நாள் வளர்ந்து, கண்டனங்களிலும், துவேஷப் புத்தியிலும், அடிதடி சண்டைகளிலும், தீராப் பகையிலும் தான் போய் முடியும். இந்தத் தீராப் பகைமை இறுதியில் இரு சமூகங்களின் கட்டுப்பாட்டையும் க்ஷேமத்தையுங் குலைத்துப் போடும். அக்கேடு அச் சமூகங்களைப் படுகுழியில் தள்ளி விடுவதோடு தேசத்தின் க்ஷேமத்திற்கே பெரும் பாதகமாயும் முடியும்.

ஒரு சமூகமோ, ஒரு தேசமோ உயரிய லக்ஷியங்களோடு ஆரம்பிக்கும் இயக்கம் வளர்ச்சி பெற்று வெற்றி யடையவேண்டுமாயின், அதன் அபிப்பிராயங்களுக்கும் வேலைத் திட்டங்களுக்கும் தேசத்துப் பிற சமூகத்தாரின் ஆதரவைப் பரிபூர்ணமாய் பெற வேண்டும். அந்த இயக்கம் சொந்த மத விஷயமாயினும், பொதுவான தேச விஷயமாயினும், பிற சமூகத்தின் ஆதரவு பெறுதவரை வெற்றி பெறமாட்டாது. அங்ஙன மிருக்க, பிற சமூகத்தின் விரோதத்தையும் எதிர்ப்பையும் வீணே சம்பாதித்துக் கொள்வதாயின்,

அந்த இயக்கம் தனக்குத் தானே தற்கொலைக்கு வழி தேடிக்கொண்டது போல் தானுகும்.

## சிறந்த சமூகம் எது?

> "முஸ்லிம்களே! நீங்கள் மானிட வர்க்கத்திற்கே ஒரு சிறந்த சமூகமா யிருக்கிறீர்கள். ஏனெனின், நீங்கள் பிறருக்கு நன்மைகளைப் போதிக்கிறீர்கள்; தீங்குகளை விட்டும் அவர்களை விலக்குகிறீர்கள்."

இது குர்ஆன் வாக்கியம். முஸ்லிம்கள் சிறந்த சமூகம் (கைர உம்மத்) என்று கணிக்கப்படுவதற்குக் காரணம், அவர்களுடைய இஸ்லாம் மத போதனை பொதுவாக லோக மானிட வர்க்க மனைத்திற்கும் பயன் அளிப்பதா யிருப்பதும், அதை உலகத்தாருக் கெல்லாம் சாத்வீகமாக போதித்து லோக மக்களுக் குத் தொண்டுபுரிய வேண்டிய பொறுப்பை ஆண்டவன் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் விதித்திருப்பதும் தான். மேலும், முஸ்லிம்களின் முதற் கடமை இஸ்லாமிய போதனையின்படி தாமும் நடந்து கொண்டு பிறருக்கும் அதைப் போதித்து நல்வழிக்கு அழைப்பதாகும்.

மேலும் இஸ்லாம் மதம் ஏக தெய்வத்துவத்தைப் போதிக்கிறது. "தெய்வம் ஒன்றே; வேதமும் ஒன்றே; இறுதி நபித்வமும் ஒன்றே; மோக்ஷ மார்க்கமும் ஒன்றே" என எல்லா விஷயங்களிலும் இஸ்லாம் ஒற்றுமையைப் போதிக்கிறது. ஒருமைத் தன்மை யென்பது எண்ணமெல்லாம் ஒன்ருகி உறைந்து லயிப்பதாகும். ஒற்றுமை என்பதும் இது தான். ஆண்டவனை நம்புவதில் மக்கள் ஒற்றுமையாய் இருக்கவேண்

டும் என்று இஸ்லாம் போதிக்கிறது. இதைப் போல் லோக வியவகாரங்களிலும் மக்கள் ஒரே வழியைப் பின்பற்றி, ஒற்றுமையாய் இருக்கவேண்டு மென்பதே ஏகத்துவத்தின் கருத்து.

'ஷிர்க்' வைப்பது இஸ்லாத்தில் கொடிய பாவம். 'ஷிர்க்' என்பது ஆண்டவன் தன்மைக்கு மற்றொரு சிருஷ்டிப்பை ஒப்பாக்குவதாகும். தெய்வம் ஒன்று என்று முடிவாய்விட்ட பிறகு, "அதுவும் தெய்வம், இதுவும் தெய்வம், எல்லாம் தெய்வத்தின் அம்சம்" என்று கூறிக் கொண்டிருப்பதால், மனித சமுதாயம் ஏக அபிப்பிராயத்தில் நிலைத்திருக்க மாட்டாது. தெய்வத்தைத் தொழும் விஷயத்தில் கூட மக்கள் ஒரே கருத்து கொள்ளவில்லை யாயின், அப்புறம் இதர விஷயங்களில் ஒற்றுமை கொள்வது துர்லபமே யாகும். லோக வாழ்க்கை சம்பந்தப்பட்ட எல்லாத் துறைகளிலும் மனித சமூகம் ஒன்றுபட்டு கூட்டுறவு கொள்ள வேண்டுமென்ற சிறந்த லக்ஷியத்தைக் குறிக் கோளாகக் கொண்டு இஸ்லாத்தின் ஏக தெய்வத்வம் (தவ்ஹீத்) வற்புறுத்தப் பட்டுள்ளது.

## சமரஸ அழைப்பு

இத்தகைய சிறந்த லக்ஷியங்கள் கமழும் இஸ்லாத்தைப் பின்பற்றும் சிறந்த சமூகமாகிய முஸ்லிம்கள், தங்களுக்குள் ஒற்றுமை யில்லாமலும், பொது விஷயங்களில் தேச மக்களுடன் ஒத்துழைக்காமலும் பின் தங்கி நிற்பது இஸ்லாத்தின் பெருமைக்கே களங்க மாகும்.

முஸ்லிம்கள் உலக மக்களோடு சேர்ந்து, ஒற்று

*மையாய் வாழ்ந்து, லோகத்துக்குச் சகல விஷயங்களி லும் வழிகாட்டிகளா யிருக்கவேண்டு மென்பது பொது விஷயம். விசேஷமாய் மத விஷயங்களில் கூட பிற மதஸ்தர்களுடன் கூட்டுறவையும், நேச பாவத்தையும் ஏற்படுத்திக்கொண்டு கலந்து வாழவேண்டு மென்று இஸ்லாத்தின் வேதம் கட்டளையிடுகிறது.*

"ஏ வேதத்தை யுடையவர்களே! நாம் அல்லாஹ் என்ற ஒரே இறைவனை வணங்குவ தென்றும், அவனுக் கோப்பாய் வேறெதையும் (தெய்வமாக) ஆக்கிக் கோள்வதில்லை யென்று முள்ள விஷயங்களில் எங்களுக்கும் உங்களுக்கும் பொதுவாக உள்ள வார்த்தையில் இணங்கி வாருங்கள்."

—*குர்ஆன்*

"உமது ஆண்டவனின் பாதையில் அவர்களைச் சிரேஷ்டமான உபதேசங்களைக் கூறியும், நல்லுபாயத்தைக் காட்டியும் அழையபீராக. அவர்களுடன் விவாதித்தால், (அவர்கள் ஒப்புக்கோள்ளத் தக்க) உன்னத முறையில் விவாதிப்பீராக."

—*குர்ஆன்*

"எல்லா நபிமார்களுக்கும் அவர்களுடைய இறைவனிடமிருந்து வந்த கட்டளைகளில், அவர்களின் இனத்தார் தங்களுக்குள் பிளவு ஏற்படுத்திக் கோள்ளக் கூடாதேன்றே அருளப்பட்டுள்ளது. நாங்களும் அதை ஏற்றுச் சிரஞ் சாய்ப்பவர்களா யிருக்கிறோம்."

—*குர்ஆன்*

*இப்பிரபஞ்சம் தோன்றிய காலந் தொட்டு இறுதித் தீர்க்கதரிசியாகிய முஹம்மத் நபி வரைக்கும் அவ்வப்போது பிரிதொரு நாட்டுக்கும் பிரிதொரு சமூகத்துக்குமாக லட்சத்து எண்பதினாயிரம் நபிமார்கள்*

இறைவனால் அனுப்பப்பட் டிருக்கிறார்க ளென்பது இஸ்லாமிய மக்களின் வைதிக சித்தாந்தம். 1,80,000 என்பது மிகைப்பட கூறப்படும் எண்ணிக்கை. பைபிள் ஆகமங்களிலும், குர்ஆன் வேதத்திலும் அந் நபிகளில் ஒரு சிலர்களின் நாமதேயங்கள் தான் பிரஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன. அங்ஙனம் பிரஸ் தாபிக்கப்படாத நபிகளின் தொகை தான் அதிகம். பிரஸ்தாபிக்கப்படாத நபிகளில் ஸ்ரீ கிருஷ்ண பகவான், ஸ்ரீ ராமச்சந்திரன், கௌதம புத்தர், ஜைனர் முதலிய வர்க ளெல்லோரும் கணிக்கப்பட வேண்டுமென்று பரந்த நோக்கமும், சர்வ மத ஆராய்ச்சியு மிக்க அறி வாளிகள் பலர் இன்றும் கூறுகின்றனர். இதற்கு அவர்கள் குர்ஆனி லிருந்தே ஓர் ஆதாரத்தை மேற் கோள் காட்டுகின்றனர். "எச்சரிப்பவர் (நபி) அனுப்பப்படாத ஊர் (இப் பிரபஞ்சத்தில்) ஒன்றும் பாக்கியில்லை" என்பதே அந்த ஆதாரம்.

ஸ்ரீராமனும் கிருஷ்ணனும் புத்தரும் காபிர்களு டைய தெய்வங்களா யிருப்பதால், அவர்கள் நபிக ளல்ல என்று வாதாடும் வைதிகப் பேர்வழிகளும் பலர் முஸ்லிம்களில் இருக்கிறார்கள். அப்படியாயின், இமய மலைக்கும் கன்யாகுமரிக்கும் இடையிலுள்ள இப் பரந்த இந்து தேசத்திற்கு ஆண்டவன் நபிகளை அனுப் பினானா, இல்லையா? அனுப்பினா னென்றால் அவர்கள் பெயர்கள் என்ன? இந்நாட்டுக்கு நபியே வரவில்லை யெனின், மேற்கண்ட திருவாக்கின் கருத்தென்ன? இதெல்லாம் சிந்திக்கத்தக்க விஷயங்களாகும்.

## முஸ்லிமின் கடமை

இஸ்லாத்தின் சிறப்புக்கு மற்றொரு காரணம்

அதில் பொதுஜன சேவை பிரதான லக்ஷியமா யிருப்ப தாகும். தன் சுய நலத்தைப் பெரிதெனப் பாராது, சகல துறைகளிலும் பரோபகாரம் புரிவது முஸ்லிமின் அவசியக் கடமை. முஸ்லிம், முஸ்லிம்களுக்கு மட்டும் தான் உபகாரம் புரியவேண்டுமென்ற குறுகிய நோக் கம் இஸ்லாத்தில் இல்லை. பிற மதஸ்தருக்கும் தூய உள்ளத்தோடு உபகாரம் செய்யவேண்டும். இத்த கைய தயாளத் தன்மையோடு பண்டைய முஸ்லிம்கள் நடந்து கொண்டதனுல் தான் இஸ்லாத்தின் கலாசார மும், போதனையும் உலக மெங்கும் பல தேச மக்களி டையேயும் தீவிரமாய்ப் பரவின. இஸ்லாமிய 'தப்லீக்' வெற்றி பெற்றதற்கு இதுதான் மூல மந்திரம். இன்று உலகப் பரப்பில் நான்கி லொரு பாகம் இஸ் லாமிய மயமாய் விளங்குவதற்குரிய மாய சக்தி அது தான்.

# பொதுஜன சேவை

நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் தமக்கு ஆண்டவனிடமிருந்து 'வஹி' (ஞானோதயம்) அறிவிக்கப்படுவதற்கு முற்காலத்திலேயே பொதுஜன சேவையே தமது ஜீவிய லக்ஷியமாய் கொண்டிருந்தார்கள். ஜாதி, மத வித்தியாசம் பாராமல், யாத்ரீகர்களுக்கு உபகாரங்கள் புரிவர்; அதிதிகளுக்கு விருந் தோம்புவர்; விதவைகளுக்குச் சகாயஞ் செய்வர்; அனாதைகளை ஆதரிப்பர்; ஏழைகளுக்கு இரங்குவர்; எளியோர்களுக்குத் துணை புரிவர்; வாக்குறுதிகளை நிறைவேற்றுவர்; பிறர் பொருள்களைப் பாதுகாத்துக் கொடுப்பர். இத்தியாதி காரணத்தால் சொற்ப காலத்தில் நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் அநாகரிக அரபுகளின் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டார்கள். அவிவேகிகளான அந்த அரபுகள் கூட நபியின் கல்யாண குணங்களுக்குக் கட்டுமைப்பட்டு "அமீன்" (நம்பத் தக்கவர்) என்ற சிறப்புப் பெயரிட்டு அழைக்கலாயினர்.

இங்ஙனம் பொதுஜன சேவை செய்துவந்த நபிகள் பெருமானாருக்கு நாற்பதாண்டு கடந்து, ஆண்டவன் புறத்தினின்று ஞானோதயம் (வஹி) அருளப்பட்ட பின், தாம் புரிந்து வந்த பொதுஜன சேவையை அதிகமாக புரியத் தலைப்பட்டதோடு, பிறரும் தம்மைப் பின்பற்றி பொதுஜனத் தொண்டாற்றும்படி வற்புறுத்தினார்கள். பொதுஜன சேவையினால் தான் ஆண்டவ னருளைப் பெறமுடியு மென்று எடுத்தோதினார்கள். அன்பாலும் பரோபகாரத்தாலும் தான் பிற ஜனங்களின் விசுவாசத்தைப் பெற முடியும் என்பது ஆண்டவன் கட்டளை.

"நீவிர் தாராள குணத்தினராய் இருப்பது ஆண்டவனின் கருணையாகும். நீவிர் கடுங் குணமும் கல் மனமு முடையவரா யிருப்பின், மக்கள் இங்ஙனம் உம்மைச் சூழ்ந்திருக்க மாட்டார்கள்."

இத் திருவாக்கியம் ஆண்டவன், முஹம்மத் நபி (ஸல்) அவர்களைப் புகழ்ந்து கூறிய வேத வாக்காகும். இஸ்லாமியச் சரிதையில் பிறகு தோன்றிய ஸூபிகளும், தத்துவ ஞானிகளும், மகான்களும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கல்யாண குணங்களைப் பின்பற்றி நடந்ததினால் தான் அயல் மத மக்களுங் கூட அவர்களைச் சூழ்ந்து, அணுகி சிஷ்யர்களா யிருந்து ஞானோபதேசம் பெற்றார்கள். இதன் மூலமாய் இஸ்லாம் மதமும் பரவியது.

## மதங்களின் பொதுவிதி

சர்ச்சிக்கத் தக்க ஒரு சில கொள்கைகளைத் தவிர்த்து மற்றெல்லா விஷயங்களில் எல்லா மதங்களுடைய போதனைகள் ஒரே ரீதியின்படியே தான் இருந்து வருகின்றன. பண்டை இஸ்லாமியப் பெரியார்கள் பலர் எல்லா மதங்களுடைய பொதுக் கருத்துகளும் ஒன்று தான் என்பதை வலியுறுத்தி யுள்ளார்கள். ஸூபிகளும், பிலாஸிபர்களும், அவ்லியாக்களும், பகீர்களும் இப் பொதுக் கொள்கையை முக்கியமாகக் கொண்டு தான் இந்துஸ்தானத்தில் சஞ்சரித்து, ஹிந்து சோதரர்களின் அபிமானத்தையும் ஆதரவையும் பெற்றார்கள். எனவே இவர்களை முஸ்லிம்கள் அவுலியாக்கள் என்றும், ஹிந்துக்கள் மஹான்கள் என்றும் இன்றும் கொண்டாடுகிறார்கள்.

சுருங்கக் கூறுமிடத்து, இஸ்லாத்தின் மூலாதாரப் போதனை சர்வ சமய சமரஸத் தன்மையிலே நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. பிற சமூகக் கூட்டுறவினாலேயே இஸ்லாம் மதம் வளர்ச்சி யடைந்திருக்கிறது. ஆதலால் இஸ்லாம் பிற மதஸ்தருடன் ஒத்துழைப்பையும் நேச பாவத்தையுமே விரும்புகிற தென்பதை மேற்கண்ட ஆதாரங்களால் நன் குணர்ந்து கொண்டோம்.

எனவே, இந்தியாவிலுள்ள இஸ்லாமிய மக்கள் ஹிந்து சமூகத்துடன் பரஸ்பரம் நேசமாய் கலந்துறவு பூண்டு, தேசமும், மதங்களும், சமூகங்களும் உன்னதமான நிலைமைக்கு வருவதற்கு இஸ்லாம் மதக் கோட்பாடுகள் எவ்வகையிலும் முட்டுக்கட்டையா யில்லையென்பதையும் ஐயமற அறிந்து கொள்ளுகிறோம். மதாசார விஷயங்கள் ஒரு பக்க மிருக்கட்டும்; உலகார்த்தமான விஷயங்களில்—குறிப்பாய் தேசீய விஷயத்தில் முஸ்லிம்களும் ஹிந்துக்களும் சேர்ந்து ஒரு கூட்டுறவையும், அரசியல் வேலைத் திட்டத்தையும் ஏற்படுத்திக் கொண்டு ஒற்றுமையாய் வேலை செய்ய வேண்டியது அத்தியாவசியம் என்பதை வற்புறுத்துவோமாக.

முஸ்லிம்களில் ஒரு சில பிற்போக்காளர், "ஹிந்துக்களுடன் நாம் ஒருக்காலும் சேரக் கூடாது" என்று வேற்றுமைப் பாராட்டுவது போல், ஹிந்துக்களிலும் ஒரு சில குரோதிகள், "முஸ்லிம்களை ஹிந்துக்கள் ஒருக்காலும் அணுகக் கூடாது" என்று பகைமை பாராட்டி வருகின்றனர். பொதுவாய் ஒரு சமூகம் நல்லதா, கெட்டதா? என்று ஆராயுங்கால்,

அந்தச் சமூகத்தில் பெரும்பாலோர் எத்தகையவர் களா யிருக்கின்றனர் என்பதைத் தான் கவனிக்க வேண்டும்.

பொறுப்பற்ற ஒரு சிலருடைய விபரீதமான போக்கை நாம் பொருட்படுத்தக் கூடாது. ஆரிய சமாஜிகளோ, சுத்தி சங்கடனக்காரர்களோ முஸ்லிம் கள் மீது துவேஷத்தை வெளிப்படுத்துகின்றனர் என் பதற்காக எல்லா ஹிந்து சோதரர்களையும் வெறுக்கக் கூடாது. தேசீயமே தங்கள் மதமாகவும், சுயராஜ் யமே தங்கள் லக்ஷியமாகவும் கொண்டுள்ள ஹிந்து சோதரர்கள் பல கோடிப் பேர்கள் இன்று முஸ்லிம் சமூகத்தின் ஒத்துழைப்பை வேண்டி நிற்கிறார்கள். முஸ்லிம்களுடைய கூட்டுறவுக்காக அவர்கள் தங்களு டைய பல உரிமைகளையும் விட்டுக் கொடுக்கத் தயாரா யிருக்கிறார்கள். இத்தகைய தாராள சுபாவமும், பரந்த நோக்கமுமுள்ள நல்ல ஹிந்து சோதரர்களின் கூட்டுறவை முஸ்லிம்கள் திரஸ்கரித்து உதைத்துத் தள்ளிவிடுவது இந்தியாவில் இஸ்லாமிய முன்னேற்றத் துக்கும் வருங்கால முஸ்லிம் சமூக வாழ்வுக்கும் பாதக மாய் தமக்குத்தாமே தீங்கைத் தேடிக்கொள்வதாகும். இஸ்லாத்தின் லக்ஷியத்திற்கும் இச் செயல் முரணாகும்.

## அடிமை வாழ்வு

அடிமை வாழ்வை ஒழிப்பதும், வறுமைத் தொல்லையைத் தொலைப்பதும் இஸ்லாத்தின் இரு பெரும் லக்ஷியங்கள். இஸ்லாம் மதம் தழைத்தோங்கத் தலைப்பட்டதும், முஹம்மத் நபியவர்கள் அடிமைகளை விடுதலை செய்வதிலும், எளிய ஜனங்களின் வறுமை

யைப் போக்குவதிலுந் தான் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டார்கள். பிறரை அடிமைப்படுத்தி வைப்பதும், பிறரிடம் அடிமைப்பட்டுக் கிடப்பதும் மாபெரும் சாபக்கேடு என்பது இஸ்லாத்தின் கொள்கை.

ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாகப் பிறந்து, சுதந்திரமாக வாழ்ந்து, சுதந்திரமாக சாகவேண்டும். அங்ஙனம் மாந்தர் அடிமையாக யிருக்க வேண்டுமாயின், சர்வேசுவரனாகிய அல்லாஹ்வுக்குத் தான் அடியானாக யிருக்கலாம். மனிதருக்கு மனிதர் அடியானாகவும், ஆண்டானாகவு மிருப்பது ஆண்டவனுக்கே விருப்பமில்லாத காரியம். இது தான் தீனுல் இஸ்லாம் போதிக்கும் சுதந்திரத் தத்துவம். அரபுகள் இஸ்லாம் உதயத்துக்கு முன், அதாவது மக்கள் முறை தவிர்ந்து மாக்கள் தோரணையில் வாழ்ந்து வந்த காலை, எளிய மக்களையும், கரிய நிற ஹபஷி (நீக்ரோ)களையும் ஏராளமாய் விலைக்கு வாங்கி அடிமைத் தளையில் பிணைத்து, அடக்கி யாண்டு வருவர். அவ்வடிமைகளைக் கடைகளிலும், விழாக்களிலும் கொண்டுபோய் ஆடு மாடுகளை விற்பது போல் விற்று பொருளீட்டுவர். அடங்கி ஒடுங்கி நடந்து கொள்ளாத அடிமைகளைச் செம்மையாக உதைத்து ஹிம்ஸிப்பார்கள். அடிமைப் பெண்களைத் தாராளமாய் 'வைப்பு' வைத்துக்கொள்வார்கள்.

இத்தகைய ஈனத் தொழிலை அரேபியா தேசத்தை விட்டும் ஒழித்த பெருமை உலகச் சரிதையில் முஹம்மத் நபி (ஸல்) அவர்களையே சேரும். ஒரு முஸ்லிம் ஓர் அடிமையை எதேச்சையாய் வாழ விடுதலை செய்து விடுவானால், அவனுக்குக் கோடி புண்ணியம் உண்டு என்று இஸ்லாமிய ஷரீஅத் போதிக்கிறது. எனவே,

இஸ்லாத்தில் அடிமைத்தனம் கூடவே கூடாது; ஒரு வரை யொருவர் அடிமைப்படுத்தி வைப்பதே கூடா தென் றிருக்கும்போது, ஒரு தேசம் பூராவையுமே அன்னியர் அடிமைக் கொண்டு ஆளுவதைக் கண்டு இந் நாட்டு முஸ்லிம்கள் வாளா விருப்பது எத்துணை அவிவேகம்!

எளியாரை வலியார் அடிமை கொள்வதற்கும், சிறிய தேசத்தைப் பெரிய தேசம் அடக்கி யாள்வதற் கும் மூல சாதனமாய் இருப்பது வறுமை நிலையே. ஏழையைச் செல்வங் கொழித்த பணக்காரன் ஆட் கொள்வது எளிது. அவ்வாறே செல்வத்தில் சீரழிந்த நாட்டைப் பணம் கொழுத்த நாட்டினர் அடக்கி யாள் வதும் எளிதே. இந்தியரைப் பிரிட்டிஷார் அடக்கி யாள்வதற்குரிய காரணங்களி லொன்று பாரத மக்க ளாகிய நாம் ஏழ்மையில் கிடந்து வாழ்வதாகும்.

## வறுமையின் சிறுமை

வறுமையே எல்லாவித சீரழிவுகளுக்கும் மூல விஷம். பொதுவாக இந்திய மக்கள் எல்லோரும் வறுமைப் பேயின் வசப்பட்டு வாடுகின்றனர். இந் தியாவில் வாழும் 40 கோடி பேர்களில் தினமும் வயிறார உண்டு, மானம் மறைய உடுத்து, சஞ்சல மற்று வாழ்பவர் ஆயிரத்திற் கொருவனாக யிருக்கும் ‘தரித்திர நாராயணன்’ முஸ்லிமாகவே யிருப்பான் என்று கூறுவது மிகையாகாது. அதாவது இந்தியா வில் நடைப் பிணங்களாய் வாழும் ஏழை மக்களில் முஸ்லிம்கள் தான் அதிகமாயிருப்பர் என்பதற்கு முஸ் லிம் மஹல்லாக்களிடம் பிரயத்தியக்ஷமாய் நாம் காணும் தரித்திரக் காட்சிகளே சான்று.

பொதுவாக இந்திய மகா சமுதாயத்தை வாட்டி வரும் வறுமைப் பேயை விரட்டித் துரத்த வேண்டியது ஒவ்வொரு இந்தியனுடைய அறக் கடமையாகும். ஹிந்துக்கள் தானே அதிக ஏழைகளாயிருந்துழல்கின்றனர் என்று முஸ்லிம்கள் அலக்ஷியமாயிருப்பதும், முஸ்லிம்கள் தானே தரித்திரப் பிண்டங்களாய் திரிகின்றனரென்று ஹிந்துக்கள் லக்ஷியஹீனமாயிருப்பதும் ஒவ்வாத செயலாகும்.

தன்னை யடுத்து வாழும் அயலார்களின் க்ஷேமலாபத்தை முஸ்லிம்கள் தம்முடையதைப் போல் பாவித்து உபகாரம் செய்ய வேண்டுமென்று இஸ்லாம் மதம் இனிது போதனை புரிகிறது. "அடுத்தாரைப் பராமரிக்கும்படி (தேவ தூதர்) ஜிப்ரீல் (அலை) என்னை அடிக்கடி வற்புறுத்தி வருகிறார். ஆகையால், ஆண்டவன் கட்டளைதானோ என்று சமுசயிக்கிறேன்" என்று நபிகள் நாயகம் றஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

தங்களை அடுத்தாரைப் பராமரிக்கும் விஷயத்தில் முஸ்லிம்—முஸ்லிமல்லாதான் என்ற வித்தியாசத்தை இஸ்லாம் ஒரு சிறிதும் கற்பிக்கவில்லை. பிறர் கஷ்டத்தைப் போக்கி உபகாரம் செய்வதில் நபிகள் நாயகம் (ஸல்) ஜாதி மத வித்தியாசம் கருதியதே கிடையாது.

## அடிமை வாழ்வை வெறுப்போம்

அடிமை வாழ்வை அகற்றுவதும், வறுமைப் பிணியைப் போக்குவதும் இஸ்லாத்தின் இரு பெரும் லக்ஷியங்கள் என்று மேலே குறிப்பிட்டிருக்கிறேன். இஸ்லாம் குறிப்பிடும் அடிமை வாழ்வென்பது அரபு தேசத்

தில் பண்டைப்போது நடந்துவந்த அடிமை வழக்கம் தான்; அது இக்காலே அரசியல் துறையில் ஒரு நாட்டார் இன்னொரு நாட்டாரால் சுதந்திரம் பறிக்கப்பட்டு அடிமை வாழ்வு வாழ்ந்து வருவதற்குப் பொருந்தாது என்று ஒரு சிலர் கூறலாம். அதற்குப் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இஸ்லாம் போதனைகள் ஒரு குறித்த காலத்திற்கோ, ஒரு குறித்த தேசத்திற்கோ மட்டும் ஏற்பட்டதல்ல. சகல தேச நிலைமைக்கும், சர்வ தேச மக்களுக்கும் இயற்கை போல் அமைந்து, வாழ்க்கை முறையோடு கலந்து, சமூகத்தின் சகல பிரச்னைகளுக்கும் ஏற்ற ஔஷதமாய் அமைந்தது இஸ்லாத்தின் போதனை.

அன்று ஒருவரை யொருவர் அடிமை கொண்டு அட்டூழியம் புரிந்து வந்தனர். இன்று ஒரு நாட்டாரை இன்னொரு நாட்டார் அடக்கி யாண்டு, சட்டத்தின் பெயரால் அதிக்கிரமங்கள் இழைத்து வருகின்றனர். அதாவது ஐரோப்பிய வெள்ளையர் கீழ் தேச இஸ்லாமிய நாடுகள் பலவற்றையும், இந்தியாவையும் சட்டத்தை யென்னும் விலங்குகள் பூட்டி, அடக்கி ஒடுக்கிக் கசக்கிப் பிழிந்து ஆட்சி புரிந்து வருகின்றார்கள்.

எனவே, பொதுவாய் நமது இஸ்லாமிய நாடுகளையும், குறிப்பாய் நாம் வாழும் இந்தப் பரந்த இந்தியாவையும் அந்தத் தந்திரவாதிகளான ஐரோப்பிய வெள்ளையர்களின் ஆட்சியினின்றும் காப்பாற்றிச் சுதந்திர நாடாகத் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு உடல், பொருள், ஆவியை அர்ப்பணித்துத் தேச சேவை

செய்யவேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடைய முதற் பெருங் கடமையென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

## ஏழ்மை கொடிது

“இஸ்லாம் சுகபோகிகளின் உல்லாச மதமல்ல. ஆகையால், சுயேச்சைப் பெற்றுச் செல்வத்தைக் கொழித்துக் கொண்டாட்டம் புரியும் பிரச்னை முஸ்லிம் களுக்கு அத்துணை அவசியமில்லை” என்று கூறும் ‘கிணற்றுத் தவளை’களும் முஸ்லிம் வைதிகர்களும் இருக்கலாம். “அந்தக் கிணற்றுத் தவளைகளுக்கு நாட்டு வளப்பம் எதற்கு?” என்று நாமும் அவர்கள் கூற்றை அலக்ஷியமாய் விட்டுவிடக் கூடாது. வறுமை எத்துணைக் கொடியதென்பதை பின்வரும் ஹதீஸ்கள் நன்கெடுத்துக் கூறுகின்றன:—

“வறுமையானது மனிதனைக் குப்ரியத்தில் (நாஸ் திகத்தில்) கொண்டு போய் விட்டுவிடுகிறது.”

“லோக வாழ்வில் உங்களுக்குரிய பாக்கியத்தை மறந்து விடாதீர்கள்.”

“இஸ்லாத்தில் சன்யாசத்தன்மை (ரஹ்பானியத்) கிடையாது.”

வறுமை எத்துணைக் கொடிய பிணியென்பதை யும், லோக வாழ்வில் நாம் வேண்டிய மட்டும் சம்பா தித்துச் சுகமாய் காலங் கழிக்க வேண்டுமென்பதை யும், வறுமைக்கும் அடிமை வாழ்க்கைக்கும் பயந்து துறவிகளைப் போல காட்டுக்கோ, சன்யாசிகளைப் போல மடங்களுக்கோ ஓடவேண்டாமென்பதையும் நபிகள் பெருமானார் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள்

மேற்கண்ட வாக்கியங்களில் வெகு அழுத்தமாய் எடுத்தோதுகின்றார்கள்.

சோம்பேறித்தனத்தால் செல்வம் சம்பாதிக்க முடியாமல் சீரழிந்து, வறுமைப் பேயின் கையில் சிக்கி வாடும் ஒருவன் பசிக் கொடுமையைத் தணிக்க என்னென்ன அக்கிரமங்கள் செய்வானென்பதைச் சொல்லவும் நா கூசுகிறது. நர சோரம், களவு, வஞ்சனை, கொலை, கொள்ளை முதலிய மகா பாபங்களைச் செய்யவும் அவன் தயங்கமாட்டான். ஆகவே தான் வறுமை பஞ்ச மகா பாதகங்களில் கொண்டு போய் விடும் என்று இஸ்லாத்தின் மூலபுருஷர் (ஸல்) கூறினார்.

மேலும், "எங்கள் இரக்ஷகனே! எங்களுக்கு இகத்திலும் 'நல்லதை'க் கொடுத்தருள்! பரத்திலும் 'நல்லதை'க் கொடுத்தருள்! நரக வேதனையினின்றும் எங்களைக் காத்தருள்!" என்று அனுதினமும் ஐங்காலம் தொழுகையில் பிரார்த்திக்கும் மந்திரத்தைக் குர்ஆனும் நமக்குப் போதிக்கின்றது. இவ்வுலகில் கவலையற்ற சுக வாழ்வே நல்லது; மறுவுலகில் சஞ்சலமற்ற சுவன வாழ்வே நல்லது. இத்தரணியில் வறுமையைப் போக்குவதால் சுக வாழ்வைப் பெறலாம்; மறு உலகிற்குரிய சுவர்க்க வாழ்க்கை, சத்கருமங்களால் அடையலாம். இதைத் தான் இஸ்லாமும் வற்புறுத்துகிறது. சமூகச் சீர்திருத்தவாதிகளும் இதைத்தான் வற்புறுத்துகின்றனர்.

## வறுமை ஒழிய வழி என்ன?

இந்துஸ்தானம் பல ஜாதி, பல மத மக்களும் கூடி வாழும் ஒரு கலப்பு நாடு. இந் நாட்டில் சமூ

கப் பிரச்னை சம்பந்தமான காரிய மொன்றைச் சாதிக்க வேண்டுமாயின், கூட்டுறவு உழைப்பின் வாயிலாய் தான் முடியும். எந்த ஒரு சமூகம் இந் நாட்டில் தனித்து நின்று பொதுக் காரியம் எதையும் பரிபூர்ண மாய் சாதித்துக் கொள்வது முடியாது. ஆதலால், இந் நாட்டின் வறுமைப் பேயை ஓட்டும் விஷயத்தி லும் இந் நாட்டு மக்க ளனைவரின் ஒத்துழைப்பு அத்தி யாவசியமாகும்.

வறுமைப் பிணியைப் போக்கிக்கொள்ள வேண் டிய அவசியம் இந்நாட்டில் ஹிந்து, கிறிஸ்து, பார்ஸி முதலிய இதர சமூகங்களை விட முஸ்லிம் சமூகத்துக் குத் தான் அதிகமா யிருந்து வருகிறது. எனவே, தங்கள் வறுமைப் பிணியைப் போக்கிக் கொள்ள முஸ்லிம்கள் எந்த டாக்டரை யணுகவேண்டு மென் பதை முடிவு செய்யவேண்டும்.

இந் நாட்டில் சிறுபான்மையினராய் வாழும் முஸ்லிம்கள் தேச சமுதாயத்துக் குரிய எந்தப் பொது லக்ஷியத்தைச் சாதிக்க வேண்டுமாயினும், அவர்கள் முஸ்லிமல்லாத இதர பெரிய சமூகங்களுடன் ஐக்கியப் பட்டு ஒத்துழைத்துத்தான் ஜெயம் பெற முடியும். எனவே, இந் நாட்டில் தேசீய முன்னேற்றத்தையே தங்கள் லக்ஷியமாகக் கொண்டுள்ள ஹிந்து தேசீய வாதிகளுடன் நம் முஸ்லிம்கள் கூட்டுறவு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அவர்கள் சமர்ப்பிக்கும் வறுமை நிவாரணத் திட்டத்தை ஆலோசித்து அங்கீகரித்துக் கொண்டு, அவர்களுடைய தோழர்களாய் ஒத்துழைக்க வேண்டும். கால தேச வர்த்தமானத்தையும் இந்தியா வில் இஸ்லாமிய சமுதாயம் க்ஷீணதசை யடைந்து,

வருவதையும் கவனிக்குமிடத்து, இது இந்திய முஸ்லிம் சமூகத்தின் அத்தியாவசிய அவசரக் கடமையாயிருந்து வருகிறது.

## பொது விதி எது?

நம் சமூகத்தின் வறுமையைப் போக்குவதற்காக முஸ்லிம்கள் தங்கள் இஸ்லாமிய மூலாதார லக்ஷியங்களையெல்லாம் இதர சமூகத்தாரிடம் ஒப்படைத்துச் சரணாகதி யடைந்துவிட வேண்டுமென நாம் கூறவில்லை. வறுமையைப் போக்க வழி கோலுவதென்பது இஸ்லாமிய ஷரீஅத்தைப் பாதிக்காத ஒரு பொது விவகாரம். பொது விவகாரத்தில் மதத்துக்கு இடையூறு இல்லாத முறையில் ஹிந்துக்களுடன் சேர்ந்துழைப்பதில் முஸ்லிம்கள் முன்வர வேண்டும். இந்த ஒரு வழியினால் தான் முஸ்லிம்கள் வறுமைப் பிணி தொலையும். வறுமைப் பிணிக்குத் தக்க மருந்து தேசீய லக்ஷியம் தான்.

மனித சமூகத்தைச் சஞ்சலத்திலும் கஷ்டத்திலுமாக்கி வைக்கும் காரியம் வட்டி. வட்டி வாங்குதல் அல்லது கொடுத்தல், சூதாடுதல், பந்தயம் கட்டுதல் முதலிய காரியங்கள் மிகக் கொடியவை. இக் காரியங்கள் இஸ்லாத்தில் ஹராம் என்று விலக்கப்பட்டிருக்கின்றன. இதே போல் ஏழை எளியவர்களிடம் கஷ்டப்படுத்தி வேலை வாங்கிவிட்டு, அதற்குத் தகுந்த பிரதியுபகாரம் செய்யாமல் (கூலி கொடாமல்) வஞ்சிக்கும் முதலாளித்துவத்தையும் இஸ்லாம் மதம் கண்டிக்கிறது. அங்ஙனம் கஷ்டப்பட்டு வேலை செய்யும் தொழிலாளர்களாகிய 'வாயில்லாப் பூச்சி'களுக்கு உபகாரம்

செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடைய கடமை. இத்துறையில் சமூகச் சேவை செய்வதற்காக முன்வரும் முஸ்லிம்கள் தனியே நின்று காரியம் சித்தி பெறுமல் அல்லலுறுவதை விட, தொழிலாளர் இயக்கத்திற்காக அல்லும் பகலும் உழைத்துவரும் தேசியத் தலைவர்களுடன் சேர்ந்துழைப்பது சாலவும் சிறந்ததாகும்.

இஸ்லாம் மதம் பணக்காரர்களுடைய நன்மையை விட ஏழைகளுடைய நன்மையைத் தான் பிரதானமாகக் கருதுகிறது. தீனுல் இஸ்லாம் ஏழைகளுக்குரிய மதம் என்றும் கூறப்படுகிறது. "இஸ்லாம் மதம் ஏழைகளிடமிருந்தே தோன்றியது; அது ஏழைகளிடமே தஞ்சமடையும். (அதாவது ஏழைகளாலேயே அது பாதுகாக்கப்படும்.) ஆதலால், ஏழைகளுக்கு மங்களம் உண்டாகக்கடவது."—இது நபிகள் நாதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்த்து.

இத்தகைய மனித வாக்குக்குரிய ஏழை மக்களுடைய கோடி லாபத்தைக் கருதி, தேச சமூகத் தொண்டாற்றுவது இஸ்லாத்துக்குச் சேவை செய்தது போலாகும். எனவே, ஏழைகளின் சேவை இஸ்லாத்தின் சேவை யாகும்.

மேலும், இஸ்லாம் மதம் ஜன சமுதாய சமத்துவத்தையும், சுதந்திரத்தையும் அதிகம் வற்புறுத்தும் சிறந்த மார்க்கமாகும். ஏழைகளின் பசிப் பிணியைப் போக்கும் மார்க்கத்தை முஸ்லிம்கள் முதலில் கடைப்பிடித்தால் தான் இஸ்லாத்தின் லக்ஷியமான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் யாவும் கைகூடும். இதற்காக வென்று தேச சமூக சேவையில் ஈடுபட்டு

இதர சமூகத்துடன் சேர்ந் துழைப்பதை விட்டு, வாய் வேதாந்தம் பேசிக் கொண்டிருப்பதில் பல ஞென்று மில்லை. தற்காலம் தேசீயத் தலைவர்களால் நடத்தப் பட்டு வரும் அரசியல் போராட்டம் இத்தகைய வறுமை நிவாரணத்தை அடிப்பீடமாய் கொண்டதே யாகும். ஆதலின் ஏழை முஸ்லிம்களின் க்ஷேமத்தை யும், அதன் மூலம் இஸ்லாத்தின் க்ஷேமத்தையுங் கருதி யாவது இந்திய முஸ்லிம்கள் தேசீயத் தலைவர்கள் நடத்திவரும் அரசியல் திட்டங்களில் சேர்ந்து வேலை செய்யும்படி முஸ்லிம் சோதரர்கள் வேண்டிக் கொள் ளப்படுகிறார்கள்.

இந்திய முஸ்லிம்களில் கோடிக் கணக்கான பேர் கள் விவசாயம் புரிந்து ஜீவித்து வருகின்றார்கள். கிராமங்களில் குடிசைத் தொழில் புரிந்து வயிறு வளர்க்கும் ஏழை முஸ்லிம்கள் கோடிக் கணக்கான வர்கள் இருக்கின்றனர். கைத்தறியையும், கைராட் டையுங் கொண்டு ஜீவிக்கும் ஏழை முஸ்லிம்கள் ஏராள மாய் இருக்கிறார்கள். தற்கால இந்திய தேசீய வேலைத் திட்டங்களில் கிராம சீர்திருத்தமும், குடிசைத் தொழில் வளர்ச்சியும் பிரதான விஷயங்களாய் எடுத் துக்கொள்ளப்பட் டிருக்கின்றன. இச் சேவைகளில் தேசீயத் தலைவர்கள் ஹிந்து முஸ்லிம் என்ற வேற்றுமை பாராட்டமாட்டார்கள். ஆகவே, முஸ்லிம்கள் தங் கள் நன்மையைக் கருதியாவது தேசீயத் தலைவர் களுக்கு ஆதரவு அளிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

## வகுப்புத் துவேஷம் ஏன்?

முஸ்லிம்கள் இயற்கையாகவே ரோஷமும் வீர மும் முன் கோபமும் நிறைந்த சமூகத்தினராவர். முஸ்

லிம் பாமர மக்களைத் தட்டிக் கொடுத்து உணர்ச்சி யூட்டிவிட்டால், அவர்கள் முன் பின் பாராமல் அவ சரப்பட்டு தம் இன்னுயிரையும் திரணமாக மதித்து அக்காரியத்தில் இறங்கி விடுவர். அவ்வாறே அவர் களுக்கு இதோபதேசம் புரிந்து நல் வழியில் அழைத் துச் சென்றால், எந்தப் பெரிய இயக்கத்தையும் அவர் களின் துணை கொண்டு எளிதில் சாதிக்கலாம்.

முஸ்லிம் பாமர மக்களில் கல்வி யறிவும், உலகா னுபவமும் மிகக் குறைவு. எனவே, தலைவர்களெனப் படுபவர்கள் அவர்களிடம் என்ன கூறிய போதிலும் அதை வெகு எளிதில் நம்பி கொள்வார்கள். பிற சமூகத்தின் மீது விசுவாசத்தைப் புகட்டினால் நல்ல விசுவாசிகளாய் விடுவார்கள்; துவேஷத்தைப் புகட்டி னால் கடுந் துவேஷிகளாய் விடுவார்கள்.

இக்காலை தலைமைப் பதவிக்கு ஆசை கொண்டலை யும் சில 'தலைவர்கள்' இல்லாதவற்றை யெல்லாம் உண்டெனக் கூறி, பொது மக்களின் ஆத்திரத்தை யும் மத உணர்ச்சியையும் தூண்டிவிட்டு விடுகின்ற னர். இதனால் பொது மக்கள் பிற சமூகத்தின் மீது கோபமும் அருவருப்புங் கொண்டு, துவேஷம் பாராட் டத் தலைப்பட்டு விடுகின்றனர். இத்தகைய துவேஷப் புத்தி இறுதியில் விபரீதமாய் முடிந்து, தேச விடுதலைப் பாதையில் முட்டுக் கட்டையாய் முளைத்து விடுகிறது. இதனால் பொது மக்களுக்கு ஒரு பயனுமில்லாமற் போவதோடு, சில விஷயங்களில் சமூக நலன்களுக்கே தீங்காகவும் வந்து முடிகிறது.

பொதுவாய் இரு நண்பர்களுக் கிடையே சிநேக மும் அன்யோன்யமும் ஏற்படுத்துவது மிகச் சிரமம்.

ஆனால், அவ்விருவர்க் கிடையே துவேஷத்தை யூட்டி, விரோதத்தை உண்டாக்கி விடுவது வெகு எளிது. கொஞ்ச நாட்களுக்கு முன் இந் நாட்டு ஹிந்துக்களும் முஸ்லிம்களும் உற்ற சகோதரர்களைப் போல் இருந் தனர்; இந்த நேசத்தால் தேச விடுதலைக் குரிய ஆயத் தங்கள் வெகு தீவிரமாக நடைபெற்று வந்தன. ஆனால், அரசியல் துறையில் தலைவர்களுக் கிடையே ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தின் காரணமாய் பொது மக்களும் கட்சி பேதங் கொண்டு ஒருவரை யொரு வர் வெறுக்கவும், தூற்றிப் பேசவும் தலைப்பட்டு விட்டனர்.

## வித்தியாசம் வேண்டாம்

இக்காலை நாட்டில் பொதுவான எந்த விஷயத்தை யெடுத்துக் கொண்ட போதிலும், வகுப்பின் பெய ராலும், உரிமைகளின் பெயராலும், கலாசாரத்தின் பெயராலும் துவேஷம் கிளப்பி விடப்படுகின்றது. சட்டசபை, ஸ்தலஸ்தாபனம், நகரசபை, கிராமச் சபை ஆகியவைகளைப் பற்றி வகுப்புப் பேச்சு பேசப் படுவது சர்வ சாதாரணமா யிருந்து வருகிறது. சர்க் கார் காரியாலயங்கள், பள்ளிக்கூடங்கள், கலாசாலை கள், பொதுஸ்தலங்கள் முதலியவற்றின் நியமனங் களைப் பற்றி யெல்லாம் இக்காலை வகுப்புப் பிரிவினைச் சூறுவளி வீசிக்கொண்டே யிருக்கிறது. அது மட்டு மல்ல. பந்தய விளையாட்டுக்களிலுங் கூட ஜாதி வித்தி யாசம் கற்பிக்கப்படுகிறது. உதாரணமாய்: கிரிக்கெட் விளையாட்டுக் கட்சிகளிலும், முஸ்லிம்கள்—ஹிந்துக் கள் வகுப்புப் போட்டி நடைபெறுகிறது. இந்தப்

"பெண்டாங்குலர்" கிரிக்கெட் முறையும் நம் தேசத்துக்கு ஒரு சாபத் தீட்டாகவே யிருக்கிறது. இதன் பயனாய் கலாசாலைகளில் படிக்கும் இளங் குமரர்களுங் கூட ஜாதிப் பாகுபாடு ஏற்படுத்திக்கொண்டு ஒருவரை யொருவர் பால்ய முதலே வெறுக்கக் கற்றுக் கொள்கின்றனர். பள்ளிப் பழக்கம் பரகதி யெய்து மட்டும் போகா தென்பர்.

அரசியல் விஷயங்களில் தான் கட்சிப் பிரதி கட்சிகள் உண்டாக்கி வைக்கப்படுகிற தென்றால், பள்ளிக்கூடப் பிள்ளைகள் தேகத் திடத்திற்காக விளையாடும் ஆட்டங்களில் கூடவா ஜாதிப் பாகுபாடுகள் பாராட்டப்பட வேண்டும்? முஸ்லிம் பள்ளிக்கூடம் வேறு என்று பிரித்து வைக்கப்பட்டிருப்பதே தேசீய ஐக்கியத்துக்கு ஒரு முட்டுக் கட்டை. அதுவும் போதாதென்று, அந்தப் பிள்ளைகளும், இந்தப் பிள்ளைகளும் சண்டையிட்டுக் கொள்ள வழி கற்பிப்பது எத்துணை கேடு? எனவே, பள்ளிக்கூடங்களிலிருந்தும், கலாசாலைகளிலிருந்தும் ஜாதி வேற்றுமை முதலில் எடுபட வேண்டும். அப்போதுதான் தேசம் சுபிக்ஷ மடையும்.

## அரசியல் கூட்டுறவு

பொது ஜனங்களிடையே துவேஷப் பிரசாரம் செய்யப்படுவதைப் போக்க வேண்டியது தேச க்ஷேமத்தை விரும்பும் ஒவ்வொருவருடையவும் அவசரக் கடமையாகும். துவேஷத்தையும், வகுப்பு வித்தியாசங்களையும் குறைந்த பக்ஷம் பொது வாழ்க்கைத் துறையிலாவது போக்குவதற்கு ஒரு கூட்டுறவு ஸ்தாபனம் அத்தியாவசியம். இத்தகைய கூட்டுறவு ஸ்தா

பனம் எல்லோருக்கும் பொதுப்படையாகவுள்ள அரசியல் துறையில் இருத்தல் சாலச் சிறந்தது. இத்தகைய அரசியல் கூட்டுறவுத் துறையிலல்லாமல், வேறு வகைகளில் இந் நாட்டின் பல்வகை சமுதாய மக்களை ஒரே மேடையில் கூட்டுவதென்பது முடியாது. இந்த ஒரு வழியில் தான் ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்துவர், சீக்கியர் முதலிய சகலரும் பொதுச் சேவை கருதி ஐக்யப்பட்டு உழைக்க முன் வருவர்.

இச் சேவைக்காக நாம் புதியதாய் ஒரு கூட்டுறவு அரசியல் ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஏற்கனவே நம் நாட்டில் சுமார் 50 வருட காலமாக ஒரு கூட்டுறவு அரசியல் ஸ்தாபனம் இருந்தே தான் வருகிறது. அதில் சகல சமூகத்தினர்களுக்கும் சமத்துவமாய் இடமிருக்கிறது. புதியதாய் வேறு எத்தகைய ஸ்தாபனமும் கூட்டுறவு முறையில் நடத்த வேண்டிய அவசியமில்லை. அங்ஙனம் ஒரு பொது சபை இருக்கும்போது தனித்தனியாய் சில்லரைச் சபைகளை ஆரம்பித்து நடத்துவது, சமூகங்களுக்கிடையே துரதிருஷ்டவசமாய் புகைந்து கொண்டிருக்கும் சச்சரவுத் தீயை ஏறத் தள்ளி ஊதிவிடுவது போலாகும்.

## இரு சமூக ஸ்தாபனங்கள்

ஒரு பொதுச் சபை யொன்றிருந்தால் யாராவது ஒரு சிலருக்கு ஏதாவது சில குறைகள் அதில் ஏற்பட்டு விடுவது சகஜம் தான். அதற்காக அந்த ஸ்தாபனத்தையே நாம் திரஸ்காரம் செய்து விடுவது புத்திசாலித்தன மல்ல. அதற்குப் பதில் அந்த ஸ்தாபனத்

திலேயே ஸ்திரமாய் இருந்துகொண்டு, அதிலுள்ள குறைகளைப் போக்கித் தங்களுடைய ஆதிக்கத்தை அந்த ஸ்தாபனத்தில் நிலைநிறுத்திக் கொள்வது தான் புத்திசாலித்தனம். இதுதான் இராஜதந்திர முறையுமாகும்.

மேலே பொதுப்படையாய் குறிப்பிட்ட விஷயங்கள் அகில இந்திய காங்கிரஸ் மகா சபையையும், அகில இந்திய முஸ்லிம் மகா ஜனங்களையும் பொறுத்ததாகும். பொது ஸ்தாபனமாகிய காங்கிரசில் பலஹீனமும் ஊழலும் ஏற்பட்டுவிட்டன வென்று முஸ்லிம்கள் சிலர் குற்றஞ் சாட்டுகிறார்கள். அக்குறைகள் நீங்குவதற்குப் பரிகாரம் முஸ்லிம்கள் ஏகோபித்து அந்த ஸ்தாபனத்தில் சேர்ந்திருந்து கொண்டே ஹிந்துக்களுடனும் இதர சிறுபான்மையினருடனும் ஒத்துழைப்பது தான். இங்ஙனம் தேசீய சபையிலிருந்து கொண்டே ஹிந்துக்களுடன் கூட்டுறவு ஏற்படுத்திக் கொள்வது தான் தேசத்துக்கும் பிரஜைகளுக்கும் நன்மையைத் தரும்.

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் வெவ்வேறு மதாசார மனப்பான்மை யுள்ளவர்களாதலால், அவர்கள் அரசியல் துறையிலும் ஐக்கியப்பட முடியாதென்று ஒரு சாரார் கூறுகின்றனர். ஏன் முடியாதென்று ஒரு கேள்வி கேட்போம். இன்றைய உலக நிலையை சற்றே ஆராய்ச்சிக் கண் கொண்டு நோக்குங்கள்.

## ரஷ்யாவும் ஜெர்மனியும்

சர்வ தேச சமூகங்களும் தத்தம் பழைய விரோதங்களை மறந்துவிட்டு, ஒன்றோடொன்று ஐக்கியமாகி, சிரம சாத்தியமான கொள்கைகளை நிறைவேற்றி வரு

வதைக் காண்கின்றோம். ரஷ்யா பணக்காரத் தன்மையே உலகிலிருக்கக் கூடாதென்று ஒழித்து, பொதுவுடைமை ஸ்தாபித்த ஒரு வல்லமை மிகுந்த நாடு. ஜெர்மனியோ பொதுவுடைமை வாதமே தரணியிலிருக்கக் கூடாதென்று முதலாளித்வம் ஸ்தாபித்த சர்வாதிகார நாடு. இவற்றின் அரசியல் தோற்றம் எலி—பூனையின் பகைமையைப் போல் இருந்து வந்தது. இன்றைய உலகத்தில் அந்த ரஷ்யாவையும், ஜெர்மனியையும் ஒரு புதுமைக் கோலத்தில் காண்கின்றோம். சர்வதேச நெருக்கடியைக் கண்டதும், அவை தங்கள் எலி—பூனைத் தன்மையை விடுத்து, மனைவியும் புருஷனும் போல் நேசம் ஏற்படுத்திக் கொண்டு விட்டன. இக் கூட்டுறவின் பயனை அவ்விரு நாடுகளும் போலந்தில் அடைந்து விட்டன.

ரஷ்யாவும், ஜெர்மனியும் அரசியல் கூட்டுறவை ஏற்படுத்திக் கொண்டது சத் காரியத்திற்காக அல்லவென்பதை உலகம் அறிந்து கொண்டுவிட்டது. ஆனால், இவ்வடிமை நாட்டில் பாரத மக்களாகிய ஹிந்து, முஸ்லிம் அனைவரும் அரசியல் கூட்டுறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது தேச விடுதலை யென்னும் புனிதமான ஒரு பாத்தியதையைச் சமத்துவமாய் அடைவதற்கே யாகும். ரஷ்யரும், ஜெர்மனியரும் வெவ்வேறு பாஷையைப் பேசுவதோடு, வெவ்வேறு தேசத்தைச் சேர்ந்தவர்களாய் பல நாட்களாய் வேறுபட்டு சத்துருத் தன்மை பாராட்டி வந்தனர். அப்படிப்பட்ட 'கழுகும், காடியும்' ஒன்று சேர்ந்து விட்டதென்றால், ஒரே தேசத்தில் பிறந்து, ஒரே வித வழக்க ஒழுக்கங் கொண்டு, ஒரே சீதோஷ்

ணத்தில் வாழும் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து வாழ முடியாதென்று கூற முடியுமா?

## ஹைதராபாத் உதாரணம்

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்று கூடி வாழ்வதில் உள்ள பலன்களை நாம் கண்ணாரக் காண்கிறோம். ஹைதராபாத் நிஜாம் சமஸ்தானத்தில் ஹிந்துக்களுடையவும் முஸ்லிம்களுடையவும் நடை யுடை பாவனையில் கொஞ்சங்கூட வித்தியாசமில்லை. முஸ்லிம் மன்னரின் ஆட்சியில் ஹிந்துக்கள் சுமுகமாய் வாழவில்லையா? மைசூர் சமஸ்தானத்தில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கலந்துறவு பூண்டு, ஹிந்து மன்னரின் ஆட்சிக்குட்பட்டு க்ஷேமமாய் வாழவில்லையா? ஹைதராபாதிலுள்ள ஹிந்துக்கள் நிலைமையும், மைசூரிலுள்ள முஸ்லிம்கள் நிலைமையும், நம் தேசத்து ஹிந்து முஸ்லிம்களின் நிலைமையைப் போல் சீர்குலைந் தில்லாமல், சீர்பெற் றிலங்குவதை நாம் காணவில்லையா? முஸ்லிம் சமஸ்தானத்தில் ஹிந்து தர்மம் ஓங்கி வளரவில்லையா? ஹிந்து சமஸ்தானத்தில் இஸ்லாத்தின் ஜோதி பிரகாசிக்கவில்லையா? அங்குள்ள ஹிந்து—முஸ்லிம்களின் ஜீவனோபாயமும், பொருளாதாரமும் நம் நாட்டு ஹிந்து, முஸ்லிம்களின் நிலையை விட பன்மடங்கு மேன்மையுற்று விளங்கவில்லையா?

பிற தேசமக்களின் நிலைமை அங்ஙனம் உன்னதமடைந்திருக்க, இந் நாட்டு ஹிந்து முஸ்லிம்களாகிய நாம் மாத்திரம் ஏன் ஒரு கூட்டுறவு ஏற்படுத்திக் கொண்டு மேன்மையுறக் கூடாது? சுதந்திரம், சமத்துவம், நியாயம், பரிபாலனம் ஆகிய சத்திய லக்ஷியங்

களுக்காக நாம் இதுவரை என்ன தியாகம் செய்திருக்கின்றோம்?

## "ஓர் தாயின் வயிற்றில் பிறந்தோம்!"

ஹிந்துக்கள் யார்? முஸ்லிம்கள் யார்? ஒரே பூமித் தாய் மடியில் தவழ்ந்து வளர்ந்த சகோதரர்களன்றோ? ஹிந்துக்களின் பெருக்கத்தைக் கண்டு முஸ்லிம்கள் பயப்பட வேண்டியது அவசியமில்லை; முஸ்லிம்களுடைய துணிச்சலைக் கண்டு ஹிந்துக்கள் பீதியடைய வேண்டிய பிரமேயமேயில்லை. மனம் ஒன்றுபட்டு விட்டால் இனமும் ஒன்றுபட்டு விடும்.

இந்தியாவில் வருங்கால சுதந்திர ஆட்சி ஜன நாயக முறையில் நடைபெறும். அதில் பிரிதொரு சமூகத்துக்கும் எல்லாத் துறையிலும் பூரண பாத்தியதை அளிக்கப்படும். ஒரு சாராரை அடக்கி யொடுக்குவதென்பதும் நடவாது. எல்லோர் உரிமைகளும் சரி சமத்துவமாய் பாதுகாக்கப்படும். இத்தகைய ஜன நாயக முறையை வேண்டாமென்பாருமுண்டோ?

## நமது கூட்டு வாழ்வு

ஹிந்துஸ்தானத்தில் முஸ்லிம் மகா ஜனங்கள் 9 கோடி பேர்கள் இருக்கிறார்கள். முஸ்லிம் குடிகள் இல்லாத நாடோ, நகரமோ, கிராமமோ இந்தியாவில் ஒன்றுங் கிடையாது. அங்ஙனம் சர்வ வியாபகமாய் இந் நாடெங்கும் முஸ்லிம்கள் பரவி வாழ்ந்து வருகின்றனர். இந்திய முஸ்லிம்கள் அரசியல், வர்த்தகம், கைத்தொழில், விவசாயம், உத்தியோகம் முதலிய சகல துறைகளிலும் ஹிந்து சமூகத்துடன் சமத்துவமாய் வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்தியாவில் புதிய அரசியல் சீர்திருத்தச் சட்டப் படி ஆட்சி நடைபெறும் மாகாணங்கள் பதினொன்ருகும். அவற்றில் நான்கு மாகாணங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராய் வாழ்ந்து வருகின்றனர். ஆகவே அந் நான்கு மாகாணங்களிலும் முஸ்லிம் ஜனப் பிரதிநிதிகளின் ஆட்சி தான் நடைபெறுகிறது என்று சொல்லலாம்.

கிறிஸ்துவர்கள், பார்ஸிகள், சீக்கியர்கள் முதலிய இதர சிறு சமூகத்தினரும் இந் நாட்டில் இருந்து வருகிருர்கள். ஆனல், இவர்கள் மிக மிகச் சிறுபான்மையினர்கள். இன்ஞேர் இத்துணைச் சிறிய சமூகங்களாயிருந்தும், ஹிந்து சமூகத்தைப் பற்றி பயமின்றி, மதம், கலை, அரசியல் ஆகிய துறைகளி லெல்லாம் ஹிந்துக்களுடன் கூட்டுறவு பூண்டு வாழ்ந்து வருகின்ருர்கள். அவர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் பொது விஷயங்களில் எத்தகைய விகல்பங்களும் நேரிடுவதில்லை.

## முஸ்லிம்கள் தாழ்ந்தவர்களல்ல

ஆனல், ஹிந்துஸ்தானத்தில் 9 கோடி குடிமக்களாய் விளங்கும் பெருஞ் சமூகமான முஸ்லிம்கள் மட்டும் ஹிந்துக்களின் ஜனப் பெருக்கத்தை நினைத்துக் கொண்டு எதற்காக பயங் கொள்ள வேண்டும்? சிறுசிறு சமூகங்களெல்லாம் பயப்படாது நிம்மதியாய் வாழும்போது, இரண்டாவது பெரும்பான்மை சமூகமாகிய முஸ்லிம்கள், "உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழவேண்டி யிருக்கிறது" என்று கூறப் படுவது வேடிக்கையாகவே யிருக்கிறது.

உலக மெல்லாம் பரவி வாழும் ஒரு சமூகம்,

இந்தியாவில் 9 கோடி பேர் வாழும் ஒரு சமூகம், இந் நாட்டில் இரண்டாவது மெஜாரிட்டியாய் வாழும் ஒரு சமூகம், வீரதீரத்தில் உலகப் பிரசித்தி பெற்ற சமூகம், "மற்றொரு சமூகத்தினர் எங்கள் உரிமைகளை யெல் லாம் அபகரித்துக் கொண்டு எங்களை நசுக்குகின்ற னர்" என்று கூறி அச்சங் கொள்ளுமாயின், அதைக் கேட்கும் யாரும் எள்ளி நகையா திருக்கமாட்டார்கள்.

"நீங்கள் உங்களைத் தாழ்ந்தவர்களென எண்ணு தீர்கள்; சஞ்சலங் கொள்ளாதீர்கள்; நிச்சயமாய் நீங்கள் உயர்ந்த சமூகத்தினர். இதுவெல்லாம் நீங்கள் (உறுதி யான) ஈமான் உள்ளவர்களா யிருப்பின்."

இது குர்ஆன் வேத வாக்கியம். ஆண்டவன் முஸ்லிம் சமூகத்துக்கு இதன் மூலம் தைரியம் அளிக் கின்றான். ஈமான் உள்ள முஸ்லிம்கள் எதற்கும் அஞ் சவும், சஞ்சலப்படவுங் கூடாதென்பது ஆண்டவன் கட்டளை. ஆனால், இன்றைய இந்திய முஸ்லிம்களின் நிலையைச் சற்றே ஓர்ந்து பாருங்கள்.

## அதைரியக் குரல்

"இஸ்லாத்திற்கு ஆபத்து! இந்துக்கள் முஸ்லிம் களை நசுக்கி விட்டனர்!" என்றெல்லாம் கூறுபவர்கள் யார்? பொதுஜனங்க ளல்ல. அல்லாஹ்வின் மீதும், முஹம்மத் நபியின் மீதும் உறுதியான விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டுள்ள முஸ்லிம்கள் ஒருக்கா லும் இங்ஙனம் அதைரியங் கொள்ளமாட்டார்கள். அப்படியாயின், அந்த அதைரியக் குரல் யாருடையது? ஹிந்து சகோதரர்களுடன் முஸ்லிம் சகோதர்கள் சேர்ந்து வாழ்வதை விரும்பாத படாடோபத் தலைவர்க

ளுடையது தான். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஐக்கிய மடைந்து விட்டால், தம் தலைமைப் பதவிக்கு மகிமை யில்லாது போய்விடுமென்று பயங் கொள்ளும் தலைவர்களே இத்தகைய அச்சத்தையும் வீண் வாதத்தையும் கிளப்புகின்றனர்.

எனவே, அத்தகைய படாடோபத் தலைவர்களின் 'போலி பயத்தை'ப் போக்குவதற்கு ஒரு மருந்துண்டு. முஸ்லிம் பொது ஜனங்கள் தங்கள் சொந்த பகுத்தறிவைக் கொஞ்சம் உபயோகித்து யோசித்துப் பார்க்க வேண்டும். ஹிந்துக்களுடன் முஸ்லிம்கள் அரசியல் துறையில் இணங்கி நடந்து கொண்டால், இஸ்லாமிய வாழ்வுப் படகே கவிழ்ந்து விடுமென்று கூறப்படுவதில் எத்துணை உண்மை யுண்டென்பதைக் கண்டறிய வேண்டும்.

## ஒற்றுமை சாதனம்

உண்மையில் ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை,ஏற்பட்டால் தான் இந் நாட்டில் இஸ்லாமிய வாழ்வுக்கும், முஸ்லிம்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் சாதனங்கள் பிறக்கும். தற்போது ஒரு சில தலைவர்களால் கற்பனை செய்யப்பட்டு பறக்கவிடப்பட்டிருக்கும் வதந்திகள் மறைவதற்கு ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை யென்ற தென்றல் வீசவேண்டும். கலைக்கும் வாழ்வுக்கும் ஆபத்து என்ற பனிப் படலம் ஒழிய வேண்டுமாயின், ஹிந்து—முஸ்லிம் ஐக்கியம் என்ற பாஸ்கரன் உதயமாக வேண்டும்.

தற்காலம் நம் நாட்டில் வகுப்புப் பூசல் உண்டாக்கப்படுவதெல்லாம் பெரும்பாலும் மதத்தின் பெயரால்

தான் சாதிக்கப் படுகின்றன. பொது மக்களுக்கு மத உணர்ச்சியைப் புகட்டி, அவர்களைச் சுலபமாய் ஏமாற்றிவிடுகின்றனர். பாமர மக்கள் உண்மை யறியாது, தலைவர்களின் சூத்திரக் கயிற்றின் அசைப்புக்கெல்லாம் இசைந்து பாவை போல் ஆடுகின்றனர். எடுப்பார் கைப்பிள்ளை போல் நம் முஸ்லிம்கள் இக்காலை தவிக்கின்றனர். தாங்கள் விமோசனம் பெறற்குரிய வழி காட்டும் சுயநலமற்ற உத்தமத் தலைவர் யாரென்பதை முஸ்லிம் பொது மக்கள் ஊர்ஜிதமாய் கண்டு கொள்ள முடிவதில்லை.

பொதுவாய் இக்காலை இந்திய அரசியல் கோதாவில் புகுந்து தங்கள் வாயளவில் வீர பராக்கிரமங்களைக் காண்பிக்கும் தலைவர்கள் உண்மையில் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம் பாமர மக்களின் க்ஷேமத்தின் மீதும் எத்துணை கரிசனம் கொண்டிருக்கிறார்களென்பது வெளிக்குத் தெரிவதில்லை.

## உண்மை வேஷம்!

இக்காலை பொதுவாய் கூட்டங்களிலும் மேடைகளிலும் படாடோபமாய் பேசி, இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் தம்மை அர்ப்பணித்து விட்டதாய் பறை சாற்றுபவர்கள், உண்மையாக இஸ்லாமிய ஷரீஅத்தின் கடமைகளை எத்துணை மட்டும் ஏற்றொழுகி வருகின்றனர் என்பதைச் சிறிது கவனிக்குமாறு பொது மக்களை வேண்டிக் கொள்கிறேன். நடையுடை பாவனைகளிலோ, கோலத்திலோ, அந்தரங்கச் செய்கைகளிலோ தாமும் ஓர் உண்மை முஸ்லிம் என்று காண்பிப்பதற்கு எத்தகைய அடையாளமும் இல்லாத

வர்கள் தான் இன்று இந்திய முஸ்லிம்களின் தலைவர்களாய் விளங்கி வருகின்றனர். முகத் தோற்றத்திலோ, உடைக் கோலத்திலோ அவர்கள் ஐரோப்பியர்களையோ, இதர சமூகங்களையோ பின்பற்றிக் கொண்டுழல்வதைப் பற்றி நாம் ஆக்ஷேபிக்க வேண்டியதில்லை. தினமும் அனுஷ்டித்தாக வேண்டிய இஸ்லாத்தின் ஐம்பெருங் கடமைகளில் ஒன்றிரண்டையாவது அவர்கள் பகிரங்கமாய் நிறைவேற்றுகின்றனரா வெனின், அதுவு மில்லை.

இஸ்லாமியச் சரித்திரக் காலத்து முஸ்லிம் தலைவர்களாகிய சஹாபாக்களும், கலீபாக்களும், சுல்தான்களும், பாதுஷாக்களும் எத்தகைய நடை யுடை அனுஷ்டானம் கொண்டிருந்தார்களென்பதையும், அந்த லக்ஷணத்துக்குத் தற்கால முஸ்லிம் தலைவர்களின் லக்ஷணம் எத்துணை பொருந்தி யிருக்கிற தென்பதையும் ஒரு சிறிதே ஒத்திட்டுப் பார்க்குமாறு நம் முஸ்லிம் சோதரர்களை வினயமாய் வேண்டிக் கொள்கிறேன்.

## காங்கிரசும் முஸ்லிம் லீகும்

இந்நாட்டில் இக்காலை இரு பெருங் கட்சிகள் தமக்குள் ‘போராட்டம்’ புரிந்து கொண்டிருக்கின்றன. பொதுவாய் ஒரு நாட்டில் மக்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் ஏற்படுவது சகஜம். அந்த பேதம் எல்லா மக்களுக்கும் பொதுப்படையான ஓர் அரசியல் விஷயத்திலோ, அனுஷ்டான பூர்வமான வேலைத் திட்டத்திலோ இருந்தால் பாதக மில்லை. இங்ஙனம் நடைமுறை விஷயங்களில் கருத்துப் பேதம் கொள்வது அந்த வேலைத் திட்டத்திலுள்ள ஊழலைப் போக்கி,

அரசாங்க யந்திரம் உறுதியுடன் இயங்குவதற்கு ஆக்கம் அளிப்பது போலாகும். இஃதிங்ஙன மிருக்க நாட்டில் தற்காலம் நடைபெற்று வரும் கட்சிப் போராட்டமானது வகுப்பின் பெயராலும், மதத்தின் பெயராலும் நடைபெற்று வருகின்றது. அரசியல் விஷயங்களில் மதத்தையும் வகுப்பையும் கொண்டு வந்து புகுத்துவது மிகவும் விபரீதமான முடிவையே உண்டாக்கும்.

காங்கிரஸ் மகாசபை தான் ஆதியில் ஏற்பட்ட பொதுஸ்தாபனம். முஸ்லிம் லீக் பிறகு ஏற்பட்ட ஒரு தனி ஸ்தாபனம். முஸ்லிம் லீக் ஆதியில் காங்கிரஸுக்கு விரோதமாய் ஆரம்பிக்கப்படவில்லை. அதன் பழந் தலைவர்கள் பெரும்பாலோர் காங்கிரஸ் ஸ்தாபனத்துடன் ஒத்துழைத்தவர்கள். எனவே, முஸ்லிம் லீக் காங்கிரஸுக்கு ஆதரவாய் ஏற்பட்ட துணை ஸ்தாபனம் தான்.

இடையிடையே காங்கிரஸுக்கும் முஸ்லிம் லீகுக்கு மிடையே சில்லறை விஷயங்களில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு வந்திருக்கலாம். ஆனால், பொதுப்படையான லக்ஷியங்களில், பழைய லீக் தலைவர்கள் காங்கிரஸ் தலைவர்களுடைய அபிப்பிராயங்களுக் கிணங்கி சுமுகமாய் நடந்து கொண்டார்கள். ஆனால், இப்போதுள்ள முஸ்லிம் லீக் பழைய லீக்கைப் போல் இல்லை; இப்போதுள்ள தலைவர்கள் முன்னிருந்த தலைவர்களைப் போல் இல்லை. காலம் விபரீதமாய் மாறி வருகிறதல்லவா? அதைப் போல் முஸ்லிம் லீக் தலைவர்களும் விபரீதமாய் மாறி வருகிறார்கள். இதைச் சிறிது விளக்குவோம்:

## பிரதிநித்துவ வாதம்

அகில இந்திய காங்கிரஸ் மகா சபையானது ஜாதி மத வகுப்பு பேதம் பாராமல், இந்துஸ்தானத்து மக்க ளெல்லோருடைய நலன் கருதி, இந்தியாவுக்கு ஜன நாயக முறையில் பூரண சுயாட்சியைக் கோரி போராடி வரும் மாபெரும் ஸ்தாபனமாகும். சுய ராஜ்யமே இதன் பிரதான லக்ஷியம். எனவே, இந்திய மகாஜனங்கள் இதை ஒருங்கே ஆதரித்து, பக்க பல மளித்து வந்தார்கள். இன்று காங்கிரஸ் மகாசபை அகில இந்திய ஜன சமுதாயசதுக்குப் பிரதிநிதித்துவம் பெற்ற ஒரு சபை யென்று தைரியமாய் கூற முன் வருவதற்கு இந்தியப் பொது ஜன ஆதரவே காரணம்.

## முஸ்லிம்களுக்குத் தனி சபை

காங்கிரஸைப் போல் முஸ்லிம் லீகும் தன்னுடைய பிரதம லக்ஷியம் பூர்ண ஸ்வராஜ்யம் என்று தான் கூறிக் கொண்டிருக்கிறது. அத்துடன் அது முஸ்லிம் களுடைய சகல பாத்தியதைகளைப் பாதுகாப்பதாகவும், மத சமுதாயப் பிரச்னைகளிலெல்லாம் தானே ஏக பிரதிநிதித்துவம் வகிப்பதாகவும் சொல்லிக் கொண்டி ருக்கிறது. முஸ்லிம் மத, சமுதாயப் பிரச்னைகளில் முஸ்லிம் லீக் 'கார்டிய'னாக இருப்பதைப் பற்றி யாருக் கும் ஆக்ஷேபனை யிருக்க பிரமேய மில்லை. ஆனால், ஹிந்து—முஸ்லிம் முதலிய இந்திய மக்கள் எல்லோ ருக்கும் பொதுவான பல விஷயங்களிலும் முஸ்லிம் லீக் தலையிட்டு தேச மக்களைப் பிரித்து வருவதை முஸ் லிம்களிலேயே பல்லோர் எதிர்த்து வருகின்றார்கள்.

இத் தேசத்தில் முஸ்லிம்களுக் கென்று தனிச்

சபை யொன்றும் இருக்கக் கூடாது என்று யாம் கூறவில்லை. முஸ்லிம் லீக் முஸ்லிம்களுடைய தனிச் சபையாகவே இருக்கட்டும். மத, சமூக, சீர்திருத்த விஷயங்களில் மட்டும் அது சேவை புரியட்டும். பொது அரசியல் விஷயங்களில் அது காங்கிரஸ் மகா சபையுடன் இணங்கி, தேச விடுதலைக்காக சேர்ந்துழைக்கட்டும்.

ஹிந்துக்களும், முஸ்லிம்களும் இப்புனித நாட்டில் உலக முள்ளளவும் இருந்தே தான் தீருவர். முஸ்லிம்களின் உதவியின்றி ஹிந்துக்கள் தேசீய லக்ஷியத்தை யடைய முடியாது; ஹிந்துக்களின் கூட்டுறவின்றி முஸ்லிம்களும் இந்நாட்டில் அரசியல் ஆதிக்கம் பெற்றுவிட முடியாது. இரண்டு சமூகமுஞ் சேர்ந்து ஒரு மனப்பட்டு, அரசியல் துறையில் ஏதேனு மொரு தீர்க்கமான வழியை வகுத்தால் தான், நாடும் மக்களும் க்ஷேமமுற முடியும். இதற்கு ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை அவசியம்.

இந் நாட்டு அரசியல் துறையில் கூட்டுறவு அரங்கம் அத்தியாவசியம். அங்ஙனம் ராஜீய கூட்டுறவு அரங்கமாய் இருக்க லாயக்குள்ளது சகல வகுப்புக்களுடைய ஆதரவும் பெற்று விளங்கும் காங்கிரஸ் மகாசபை தான்.

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இந்நாட்டில் கலந்து வாழ்கிறார்கள். பழக்க வழக்கம், குடி வாழ்க்கை, பேச்சு ஆகியவைகளெல்லாம் இரு சாராருக்கும் அநேகமாய் ஒன்றாகவே இருந்து வருகின்றன. வாழ்க்கைச் சாதனங்களில் ஒருவருக்கொருவர் சகாயமாய் இருந்தும் வருகின்றனர். அரசியல் துறையிலும் கூட

இரு சாராரும் ஒருமித்துத் தொண்டியற்ற வேண்டிய அவசியமும் இருக்கிறது. ஆகவே, ஒரு கூட்டுறவு அரசியல் ஸ்தாபனம் இல்லாமல் தேசீய வாழ்வுக்குக் கதிமோக்ஷ மில்லை.

## முஸ்லிம் லீகும் இருக்கட்டும்

காங்கிரஸ் மகா சபை எல்லோருக்கும் பிரதிநிதித் துவம் வாய்ந்த பொது ஸ்தாபனமா யிருப்பதால், முஸ் லிம் லீகை இல்லாதபடி செய்துவிட வேண்டுமென்று யாரும் கூறவில்லை. முஸ்லிம்களுடைய மதாசார விஷ யங்களையும், சமூக சீர்திருத்த சம்பந்தமான காரியங் களையும் லீக் செய்துகொண் டிருக்கட்டும். பொதுப் படையான அரசியல் போராட்டத்துக்குக் காங்கிரஸ் மகா சபை இருப்பது போல், இஸ்லாமியச் சம்பிர தாயங்களின் சேவைக்காக முஸ்லிம் லீக் இருக்கட் டும்.

இப்படி முஸ்லிம் லீக் தனிப்பட்ட முறையில் சேவை செய்து கொண்டிருந்தால், தேச பக்தர்கள் யாரும் அதைக் குறை கூறமாட்டார்கள். அதை விட்டு காங்கிரசினுடைய உன்னதமான லக்ஷியங்கள் நிறைவேறி வரும்போது, முஸ்லிம் லீகின் பெயரால் ஒரு சிலர் முட்டுக்கட்டை போட்டு வில்லங்கம் உண் டாக்கும்போது தான் தேசபக்தர்கள் முஸ்லிம் லீகைச் சுட்டிக் காட்டவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ஒரு காலத்தில் லக்ஷியத்திலும் வேலைத் திட்டத்தி லும் அன்யோன்யமா யிருந்த காங்கிரசும் முஸ்லிம் லீகும் இன்று எதிர்த்துப் போராடி வருவதன் காரண மென்ன? காங்கிரசுடன் முஸ்லிம் லீக் பிணங்கிக்

கொண்டதா? அல்லது முஸ்லிம் லீகுடன் காங்கிரஸ் பிணங்கிக் கொண்டதா? இதைச் சிறிது கவனிப்போம்.

## பிணக்கின் வரலாறு

1935-ம் வருடம் ஹிந்துஸ்தானத்துக்குச் 'சீர் திருத்தம்' (மாகாண சுயாட்சி) அளிப்பதென்று இங்கிலாந்தில் பார்லிமெண்டில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஜனப் பிரதிநிதி சபைகள் கூடி, இந்திய அரசியல் நிர்வாக விஷயங்களை முடிவு செய்து கொள்ளலாம் என்ற 'மாகாண சுயாட்சி' முறை இந்தியரிடம் ஒப்படைக்கப்பட்டது. நாடெங்கும் தேர்தல்கள் நடைபெற்றன. ஹிந்துக்கள் பெரும்பான்மையினராய் இருந்துவந்த மாகாணங்களி லெல்லாம் மக்கள் காங்கிரஸ் மகா சபையைப் பெரிதும் உவந்து ஆதரித்ததால், அரசாங்க ஆதிக்கம் அவர்கள் வசமாயிற்று. முஸ்லிம் லீக் சார்பாகவும் பலர் காங்கிரசுடன் போட்டி யிட்டார்கள். ஆயினும், ஹிந்துக்கள் மெஜாரிட்டியாயுள்ள இடங்களில் முஸ்லிம் லீகர்களுக்கு அரசாங்கப் பதவிகளில் பங்கு கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல.

முஸ்லிம் ஜனத்தொகை அதிகமாயுள்ள மாகாணங்களில் கூட முஸ்லிம் லீக்காரர்கள் அச்சமயம் தங்கள் சார்பாக மந்திரி சபை அமைத்துக் கொள்ள முடியாது போய்விட்டது. இது தான் முஸ்லிம் லீக் தலைவர்களுக்குக் காங்கிரஸ் தலைவர்கள் மீது மனத் தாங்கல் ஏற்பட்டதற்கு அடிப்பீடம்.

அரசியல் துறையில் தலைவர்களுக்குள் ஏற்பட்ட இந்தப் பிணக்கு பிறகு ஸ்தாபனங்களையும் பிடித்தது. காங்கிரஸ் மீது முஸ்லிம் லீகர்கள் குறை கூற

லாயினர். "காங்கிரஸ்காரர்கள் இந்தியாவில் ஹிந்து ராஜ்யத்தையும், ராம ராஜ்யத்தையும் ஸ்தாபிக்கப் பார்க்கின்றனர்; முஸ்லிம்களுடைய மதம், கலாசாரம் ஆகிய தர்மங்களையெல்லாம் அழித்துப் போட பார்க்கின்றனர்" என்ற அபவாதங்கள் கிளப்பப்பட்டன.

## காங்கிரஸ் மீது பழி

மாகாணங்களில் ஆங்காங்கு வகுப்புப் பூசலால் நடைபெற்ற சில்லறைச் சச்சரவுகளெல்லாம் பிரமாதப் படுத்தப்பட்டன. அச்சண்டைகளுக்கெல்லாம் காங்கிரஸ் தான் கர்த்தா என்று பழி சுமத்தப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டுகளையெல்லாம் கேட்டு காங்கிரஸ் சும்மா யிருந்துவிடவில்லை. அக் குற்றச்சாட்டுகளையெல்லாம் ஒருங்கு திரட்டி, அவற்றைப் பாரபக்ஷமற்ற ஒரு விசாரணைக் கோர்ட்டாரிடம் சமர்ப்பித்து, தாராளமான முறையில் விசாரிக்கக் காங்கிரஸ்காரர்கள் சம்மதித்தார்கள். ஆனால், முஸ்லிம் லீக் தலைவர்கள் இந்த விசாரணைக்கு இணங்கவில்லை. அது சட்ட ரீதிக்குப் பொருந்தியதல்லவென்று மறுத்து விட்டார்கள்.

இத்துடன் மௌனம் சாதித்து விடவில்லை. 'ஹிஸ் எக்ஸலன்ஸி' வைசிராய் அவர்கள் திருச் சமூகத்தில் தங்கள் குறைகளையெல்லாம் கூறி முறையிட்டுக்கொள்ளப் போவதாக பறையறைந்தனர். அவ்வாறே செய்தும் பார்த்தனர். அதனால் என்ன பயன் உண்டாயிற்று என்பது இதுவரை சிதம்பர ரகசியமாகவே இருக்கிறது.

முஸ்லிம் லீகர்களுடைய குறைகள், குற்றச்

சாட்டுகள் முற்றும் நியாய மென்றோ, அனைத்தும் அபத்த மென்றோ இப்போது நாம் அபிப்பிராயம் கூறி விடுவது பொருந்தாது. அப்படி கூறுவது அகாலத்தில் கூறிய அவச் சொல்லாயும் முடியலாம். ஆனால், ஒரு விஷயம்:

காங்கிரஸ் ஸ்தாபனத்தின் மீது குறை கூறி குற்றஞ் சாட்டுவது முஸ்லிம் லீக் மட்டும் தான் என்றெண்ண வேண்டாம். ஹிந்து மகாசபையினர், "காங்கிரஸ் ஹிந்துக்களுடைய உரிமைகளை யெல்லாம் அபகரித்து 'யாருக்கோ' கொடுத்து விட்டது" என்று காங்கிரஸ் மீது குற்றஞ் சாட்டுகின்றனர். எனவே, தங்கள் சமூக பாத்தியதைகள் பறி போகிறதென்ற காரணம் கூறுவதில் ஹிந்து மகாசபைக்காரர்கள் முஸ்லிம் லீகர்களுக்குக் கொஞ்சமும் பின்வாங்கியவர்களல்ல வென்பதை நிரூபித்துக் காட்டிவிட்டனர். எனவே, முஸ்லிம் லீகும் மகா சபையும் ஒருங்கே காங்கிரஸ் மீது தமது ஆத்திரத்தைப் பிரயோகித்து வருகின்றன.

## முஸ்லிம்களின் கூக்குரல்

ஆயினும், காங்கிரஸ் ஸ்தாபனம் முஸ்லிம்களுடைய கூக்குரலை அலக்ஷியம் செய்துவிடவில்லை. எவ்வகையிலேனும் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமுள்ள பிணக்கு நீங்கவேண்டு மென்பதற்காக முஸ்லிம்களுக்குக் காங்கிரஸ் பல துறைகளில், பல சமயங்களில் விட்டுக் கொடுத்து வந்திருக்கிறது. இதைக் கண்டு ஹிந்து மகாசபை சீற்றமடைந்து, காங்கிரஸ் லீகர்களுக்கு அதிகம் விட்டுக் கொடுத்துச் சரணாகதியடைவதாகவும் குறை கூறி வருகிறது.

எனினும் காங்கிரஸ், முஸ்லிம் சமூகத்துக்குச் சலு கைக் காட்டி நடந்துகொள்ள வேண்டுமென்ற தன் இயற்கை தாராளத் தன்மையைச் சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை. முஸ்லிம்கள் பெருந் தன்மை பூண்டு இணங்கிவருவார்க ளென்று இன்னமும் காங்கிரஸ் தன் வாசற் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு ஆவ லுடன் எதிர்பார்த்த வண்ணம் தான் இருக்கிறது.

காங்கிரஸ் தான் தேச விடுதலைக்குப் பாடுபடும் உண்மையான தீவிர பொது அரசியல் ஸ்தாபனம் என் பதை உணர்ந்துள்ள முஸ்லிம்கள் காங்கிரசில் ஏராள மாய் இருக்கிறார்கள். காங்கிரஸ் மூலமாகத் தான் தேசத்துக்கும், சமுதாயத்திற்கும் நல்ல முறையில் சேவை செய்யமுடியு மென்பதை அவர்கள் உறுதி யாய் நம்பி யிருக்கின்றனர். ஆகவே, இன்றும் அவர் கள் காங்கிரசுடன் இணங்கி, பொதுப்படையாய் இந்திய மக்க ளெல்லோருக்கும் அருஞ் சேவை செய்து வருகின்றார்கள். பொது ஸ்தாபனத்தில் சேர்ந்து தேசத் திற்கும் சமூகத்திற்கும் சேவை செய்வது இஸ்லாமிய சம்பிரதாயத்தில் பெரிதும் விரும்பப்படும் ஒரு காரி யம்.

## தேசீய முஸ்லிம்கள் மீது பழி

இஃதிங்ஙன மிருக்க, காங்கிரசில் சேர்ந்துழைக் கும் முஸ்லிம்கள், தங்கள் இஸ்லாத்தையும் சமூகத்தை யும் உதறித் தள்ளிவிட்டுப் போய்விடுகின்றன ரென்று பழி சுமத்தப்படுகின்றது. காங்கிரசிலுள்ள முஸ்லிம் களால் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எத்த கைய நன்மையும் ஏற்படுவதில்லை யென்றும் குறை கூறப்படுகின்றனர். முஸ்லிம் லீகிலுள்ள படாடோப

முஸ்லிம்களை விட காங்கிரசிலுள்ள முஸ்லிம்கள் பலர் இஸ்லாமியக் கலாசாரங்களை நன்கறிந்தவர்களாகவும், ஷரீ அத்தின் சட்ட திட்டங்களின்படி வழுவாது ஒழுகிக் கொள்பவர்களாகவும், உலகானுபவம் பெற்று பகுத்தறிவுடன் நடந்து கொள்பவர்களாகவும் இருக்கின்றனர். காங்கிரசிலுள்ள மௌல்விகளுக்கும், ஆலிம்களுக்கும் தெரியாத இஸ்லாம், லீகிலுள்ள லௌகீகர்களுக்கு அதிகம் தெரிந்துவிட்டது போலும்!

காங்கிரசுடன் இணங்கி சேவை புரியும் தலைவர்கள் இஸ்லாத்தைப் பற்றியும், முஸ்லிம் சமூக உரிமைகளைப் பற்றியும் பேசக்கூடாதென்றுங்கூட லீக் சர்வாதிகாரிகள் வாய்ப் பூட்டுச் சட்டம் போடுகிறார்கள். தேச விடுதலை லக்ஷியங் கொள்ள பொது ஸ்தாபனத்தில் ஈடுபட்ட முஸ்லிம்கள், மதத் தொண்டும் சமூக சேவையும் புரியக் கூடாதென்று கூறுவதற்கு அவர்கள் இஸ்லாத்தின் பேரால் என்ன ஆதாரங் காட்ட முடியும்? பொது சேவையே பிரதம லக்ஷியமாய் பூண்டுள்ள இஸ்லாத்தில், இத்தகைய குறுகிய நோக்கத்தைக் கற்பிப்பது இழிவான செய்கையாகும்.

## சந்திரிகையும் நட்சத்திரமும்

சத்தியத்தையும் உண்மையையும் எடுத்துக்கூறினால், அதற்காக கோபித்துக் கொள்ளும் சோதரர்களும் நம்மிடையே இருக்கிறார்கள். அவர்களுக்காக நாம் உள்ளதை மறைத்து வைப்பது பேதமையாகும். சத்தியவந்தன் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. அவனுக்கு ஆண்டவன் துணையுண்டு.

முஸ்லிம் லீக் இருக்கும்போது காங்கிரஸ் ஸ்தா

பனம் இருக்கவேண்டிய அவசியமில்லை யென்று லீகர்கள் கருதுகிறார்கள். ஆனால், காங்கிரஸ்காரர்கள் தங்கள் ஸ்தாபனம் பிரதிநிதித்துவ முள்ள சபையாக யிருக்க இதர ஸ்தாபனங்கள் இருக்கக் கூடாதென்று கூறவில்லை. காங்கிரஸ் வான மண்டலத்தில் பிரகாசிக்கும் பூரண சந்திரிகைக்கு ஒப்பாகும். இதர ஸ்தாபங்களெல்லாம் அந்தப் பூர்ணிமாவை அழகுபடுத்தும் உடுக்கலங்க ளாகும். சந்திரனும் நட்சத்திரங்களும் கூடி வான விதானத்தை அலங்கரிப்பதைப் போல், காங்கிரசும் இதர ஸ்தாபனங்களும் சேர்ந்து தேசீய லக்ஷியத்தைத் துரிதப்படுத்த வேண்டும்.

காங்கிரசை ஓர் அரசாங்கத்துக்கும், பிற ஸ்தாபனங்களை அவ்வாட்சியின் கீழ் வாழும் பல மதங்களுக்கும் ஒப்பிடலாம். பல மதஸ்தர்களுடைய குறைகளைக் கவனித்துப் பரிகாரம் செய்யவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பா யிருப்பதைப் போல், இந்நாட்டுப் பலதிறப்பட்ட சமூகங்களுடைய பாத்தியதைகளுக்குப் பொறுப் பேற்றுக்கொள்ள வேண்டியது காங்கிரசின் வேலை யாகும். அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்குச் சகல சமயத்தினர்களும் உட்பட்டு இணங்கி நடக்க வேண்டியதிருப்பது போல், சகல வகுப்பாரும் காங்கிரசின் வேலைத் திட்டங்களுக்கு இணங்கி ஆதரவளித்தல் வேண்டும். இங்ஙனம் யாவரும் ஒருமித்து நடந்து கொண்டால் தான் எல்லோருக்கும் பொதுப்படையான நன்மை யுண்டாகும். ஒத்துழைப்பதில் பின்னடைந்து விட்டு, நன்மை பெறுவதில் மட்டும் குறை கூறுவது நியாயமாக மாட்டாது.

காங்கிரஸ் ஸ்தாபன அமைப்பு ஒரு ஜனநாயக

ஆட்சி முறைக் கொப்பாகும். அதில் பல சமய, சமூக மக்களும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். அதில் மனப் பூர்வமாய் நாம் சேர்ந்துழைக்கும் வரை நம்ம வர்க்கு எத்தகைய இடையூறும் ஏற்படமாட்டாது. எனவே, அக் கூட்டு ஸ்தாபனத்தில் சேர்ந்துழைக்கா மல் தனித்து நின்று, அதற்கெதிரிடையாய் நின்றால் நாம் எதையும் அனுகூலமாய் சாதித்துக் கொள்வ தென்பது முடியாது.

## காங்கிரஸ் ஆட்சி

1937-ல் காங்கிரஸ் ஸ்தாபனம் அரசியல் பதவி வகிப்பதென்ற பொறுப்பேற்றுக் கொண்டபோது, அரசாக்ஷி முறை அதற்கொரு புது அனுபவமா யிருந்து வந்தது. இந்தியருக்கு அரசாங்க நிர்வாகங்களை நடத்தத் தெரியுமோ? என்று வெள்ளையர்களும், அதிகார வர்க்கத்தினரும் சந்தேகித்து வந்தார்க்ள். ஆட்சி முறையை ஏற்றுக் கொண்ட சொற்ப காலத்துக்குள் காங்கிரஸ்காரர்கள் வெள்ளையர்களின் வியப்பையும் சந்தேகத்தையும் போக்கி விட்டனர்.

காங்கிரஸ் பொதுஜன சேவையே ஜீவனாகக் கொண்ட ஸ்தாபனம். அதற்கேற்ப அது அசெம் பிளித் தேர்தல்களின்போது பொது ஜனங்களுக்குப் பல வாக்குறுதிகளை யளித்தது. அவ்வாக்குறுதிகளில் பலவற்றைக் காங்கிரஸ்காரர்கள் நிர்வாகம் நடத்தி வந்த ஆரம்ப காலத்திலேயே நிறைவேற்றுவதற்குத் தொடங்கி விட்டார்கள். மற்றும் பல வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் சில சோதனைகள் குறுக்கிட்டன.

எதிர்க் கட்சிப் பேர்வழிகளின் முட்டுக்கட்டை

தான் அந்தச் சோதனை. ஆகவே, இதர கட்சிகளுடன் சமரஸம் செய்து கொண்டால், தாங்கள் மேற்கொண்ட வாக்குறுதிகளையும் ஏனைய திட்டங்களையும் நிறைவேற்ற இடையூறு ஏற்படுமென்று எதிர்பார்த்தனர். காங்கிரஸ் மந்திரி சபையில் இதர கட்சியினர்களையும் சேர்த்துக்கொண்டு, ஐக்கியமாய் வேலை முறையைக் கவனிப்பது சாத்தியமா வென்றும் பார்த்தனர்.

காங்கிரசினுடைய உன்னதமான லக்ஷியங்களை ஒப்புக் கொள்வதாய் எதிர்க் கட்சியினர் சம்மதித்துக் கையெழுத் திடுவதாயின், சேர்த்துக்கொள்ள முன் வந்தனர். ஆனால், தேசத்தின் துரதிருஷ்டவசமாய் எதிர்க் கட்சியினர் இணங்கவில்லை. எனவே, கூட்டு மந்திரி சபை திட்டம் கைவிடப்பட்டது. தங்களுக்கு சுலபமாய் பதவியில் பங்கு கிடைக்காது போகவே, எதிர்க் கட்சியினர் காங்கிரசின் வேலைத் திட்டங்களில் பன்மடங்கு அதிகமான முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தத் தலைப்பட்டார்கள். இத்தியாதி காரணங்களை முன்னிட்டு காங்கிரஸ் மந்திரி சபை அரசாங்கக் காரியாதிகளைத் தம் வேலைத் திட்டத்தின்படி பரிபூர்ணமாய் நிறைவேற்றி முடிக்கச் சாத்தியமில்லாது போயிற்று.

## மாகாண சுயாட்சியின் குறை

காங்கிரஸ் மந்திரி சபை ஆட்சி நடத்தி வந்த காலங்களில் சிறுபான்மை சமூகத்தினர்களைச் சரிவர திருப்திப்படுத்தி வைக்கவில்லை யென்று அடிக்கடி குறை கூறப்பட்டது. இதற்கு முக்கியமான காரணம், 1935-ம் வருஷத்துச் சீர்திருத்தச் சட்ட திட்டங்கள் குறுகிய முறையில் அமைந்திருந்ததே யாகும்.

மாகாண சுயாட்சியில் எதேச்சையாய் நடந்துகொள் வதற்கு மந்திரி சபைக்குச் சுயேச்சாதிகாரம் அளிக் கப்படவில்லை. வைசிராய், கவர்னர்களுடைய சர்வாதி காரம் என்ற கூரிய வாள் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்தது.

இதுவல்லாமல், எந்த விஷயமும் மெஜாரிட்டியின் அங்கீகாரத்தின்படி தான் நடக்கவேண்டி யிருந்தது. எனவே, ஓட்டு சேகரிக்கும் விவகாரங்களில் சிறு பான்மையினர் வெற்றிபெற முடியாம லிருந்தது. சிறுபான்மையினருக்கு அதிருப்தியையும், காங்கிரஸ் காரர்கள் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் முட்டுக்கட்டையையும் போட்டு வந்தது அந்தச் சீர் திருத்தச் சட்ட திட்ட ஷரத்துக்கள் தான். சீர்திருத் தம் அதிருப்திகரமான தென்பதில் முஸ்லிம் லீக், காங் கிரஸ் மற்றுமெல்லா இந்தியக் கட்சிகளும் ஏகோபித்த அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றன. இது புனர் திருத்தம் செய்யத் தக்க சட்ட திட்டம் என்பதைப் பிரிட்டிஷ் சர்க்காரே ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய ஸ்திதியில் காங்கிரஸ் மந்திரி சபை யினர் குடிமக்களுக்குச் செய்து கொடுத்த வாக்குறுதி களைச் சரிவர நிறைவேற்றி வைக்கவில்லை யென்று குறை கூறுவதும், சிறுபான்மையினரைத் திருப்திப் படுத்தி வைக்கவில்லை யென்று பழி சுமத்துவதும் ஒப்புக்கொள்ளத் தக்கவையல்ல.

## சுபாஷ் கட்சியின் சீற்றம்

காங்கிரசின் நிர்மாணத் திட்டமும், மிதமான போக்கும் காங்கிரசிலே யிருந்த ஒரு கோஷ்டியின

ருக்குப் பிடிக்கவில்லை. சீர்திருத்தச் சட்டங்களை உடைத்தெறிந்து விட்டு வந்துவிட வேண்டு மென்பது அந்த அவசரக் கூட்டத்தாரின் அபிப்பிராயம். உடனே காங்கிரஸ் சட்டமறுப்பை ஆரம்பிக்க வேண்டுமென் பதும் அந்த அவசர வாதிகளின் உள்ளக் கிடக்கை. இந்தத் தடபுடல் போக்கைக் காங்கிரசின் பிரதான புருஷர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வளவு தான். அவசரவாதிகள் பிணங்கிக்கொண்டனர். காங்கிரசி லுள்ள அத் தீவிரப் போக்குடையோரின் தலைவர் வங்க சிங்கம் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ். அவர் காங்கிரசின் 'கட்டை வண்டி' கொள்கையைத் தீவிரப் படுத்துவதாகக் கூறி, முன்னேற்றக் கட்சி யென்ற மோட்டாரைக் கொண்டு வந்தார். முன்னேற்றக் குழாமின் அந்த மோட்டார் அதி வேகமாய் ஓடிக் கொண்டு தானிருந்தது. ஆனால், அது எங்கு போய் மோதிக் கொண்டு உடைந்து சிதறிப் போகுமோ என்று காங்கிரஸ்வாதிகள் அச்சப்பட்டுக் கொண் டிருந்தனர். அவ்வாறே ஆயிற்று!

## யுத்தப் பிரச்னை

'வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந் தது' என்பார்கள். அதைப் போல் காங்கிரசின் வேலைத் திட்டங்கள் சிறுகச் சிறுக நிறைவேறி வரு கையில் யுத்தப் பிரச்னை என்ற பூதம் கிளம்பியது. அந் தப் பூதத்துக்கு இந்தியர் யாதொரு நிபந்தனையு மின்றி சிர வணக்கம் புரியவேண்டுமென்ற நிர்ப்பந்தம் கற்பிக் கப்பட்டது, ஆனால், காங்கிரஸ் அதற்கு இணங்க வில்லை. இப் பிரச்னையால் அரசியல் கடல் கொந்தளிப் படைந்தது. காங்கிரஸ்காரர்கள் மந்திரி சபை யென்ற

ஓட்டைப் படகை நடுக் கடலிலேயே விட்டுவிட்டு பழையபடி கரையேறி வந்துவிட்டனர்.

இஞ்ஞான்று காங்கிரஸ்காரர்கள் அதிகார வர்க்க பீடத்தி லில்லை. பதவியின் மீது தங்களுக்கு மோக மில்லை யென்பதை மெய்ப்பித்துக் காட்டுவதற்காக வேண்டி மந்திரிப் பதவிகளைத் தூவென உதறித் தள்ளி விட்டு, இப்போது சத்யாக்ரஹம் என்ற சோதனைத் தீயில் இறங்கியுள்ளனர். ஆதலின், காங்கிரஸ்காரர்கள் தங்கள் வேலைத் திட்டங்களையும், வாக்குறுதிகளையும் தாற்காலிகமாய் அமைதிப்படுத்தி வைத்துள்ளனர்.

## ராஜிநாமா புதிர்

காங்கிரஸ் மந்திரிப் பதவி ராஜிநாமா தேசீயத் துறையில் ஒரு புதிராக இருந்துவருகிறது. மீண்டும் அப் பதவியைக் காங்கிரஸ்காரர் ஏற்றுக்கொண்டு தங் கள் லக்ஷியங்களை அவ்வழியிலேயே பூர்த்திப்படுத்த வேண்டுமா, வேண்டாமா? என்பது சிந்தனைக்கு ஆஸ் பதமா யிருந்து வருகிறது. காங்கிரஸ் ஆட்சி ஒழிந் தால் தங்களுக்குக் கொண்டாட்டம் என்று ஆவ லுற்று வந்த ஒரு சாரார் இப் புதிரின் கருத்தை யுண ராது, தங்கள் கோரிக்கையை ஆண்டவன் ஏற்றுக் கொண்டு கடாக்ஷித்து விட்டதாக யெண்ணி சந்தோ ஷம் கொண்டாடுகின்றனர்.

காங்கிரஸ் தலைவர்கள் மந்திரிப் பதவியில் இருக் கும்வரை பிரிட்டிஷ் விலங்கு இந்தியத் தாயின் பாதத் தை விட்டும் நீங்காதென் றெண்ணி பதவிகளைத் துறந்து விட்டனர். என்றைக்குக் காங்கிரஸ் தலைவர்கள் மந் திரிப் பதவியைத் துறப்பரோ என்று ஏங்கிக் கிடந்த

அவசரவாதிகளும் தங்கள் மனோபீஷ்டம் நிறைவேறி விட்டதாய் இறும்பூதெய்துகின்றனர். காங்கிரஸ் மந்திரி சபை ஆட்சியின்போது மாபெரும் பயனடைந்து வந்த குடியானவர்கள், கடன்காரர்கள், குடிகாரர்கள், ஹரிஜனங்கள் ஆகியோர் தங்களுக்கு இனி அந்த நற்காலம் என்று வருமோவென்று ஏங்குகின்றனர்.

காங்கிரசின் வலதுகை ஒரு தவறு செய்துவிட்டதென்று ஹிந்து—முஸ்லிம் பிரச்னையில் ஆர்வமுள்ள ஒரு சாரார் கூறுகின்றனர். ஹிந்து—முஸ்லிம் பிரச்னை இன்று, நேற்று தோன்றிய புது விஷயமல்ல. காங்கிரஸ் பதவி ஏற்றுக்கொள்வதற்கு முன்னும் இப்பிரச்னை இருந்துகொண்டிருந்தது. ஆனால், இப்பிரச்னை இப்போது பாதையின் மத்தியில் ஓங்கி வளர்ந்து படர்ந்து நிற்கும் ஆல மரத்தைப் போல் இருக்கிறது. இரண்டு வருடங்களுக்கு முன் இப் பிணக்கு முளைத்து மூன்றிலை கூட விடாத சிறு செடியாக யிருந்தது. அன்று அதைக் கெல்லி எறிவதற்குச் சமரஸ சம்பாஷணை யென்ற இரண்டு விரல்கள் போதுமானதாய் இருந்தன. இன்று அதைத் தீர்த்து வைத்துப் பாதையைச் சீர்திருத்துவதற்குச் சமூகப் பிரச்னைகள் என்ற கோடரியும் வாளும் உளியும் சம்மட்டியும் வேண்டியிருக்கின்றன.

## முஸ்லிம்களின் சபைகள்

இன்று காங்கிரசும் முஸ்லிம் லீகும் சமரஸம் ஏற்படுத்திக்கொள்ள முற்பட்டால், எடுத்த எடுப்பில் லீக் தலைவர்கள் ஒரு பெரிய நிபந்தனை போடுகின்றனர். அதாவது, "இந்தியாவில் வாழும் 9 கோடி முஸ்லிம்

களுக்கும் முஸ்லிம் லீக் ஒன்று தான் பிரதிநிதி'' என்ற மூல மந்திரத்தைச் சமரஸ ஒப்பந்தத்தின் தலைப்பில் கொட்டை யெழுத்தில் தீட்டவேண்டுமென்கின்றனர். மூன்று வருடங்களுக்கு முன் முஸ்லிம் லீக் விசுவரூபங் கொள்ளாதிருந்த சமயம் இந்த 'ஏகப் பிரதிநிதித்வப் பேச்சு' எழுந்ததேயில்லை. இத்தகைய முதற் பெரும் முட்டுக்கட்டை ஏற்பட்டதற்குக் காங்கிரஸ் வலது சாரிகளின் சரணாகதித்தன்மையே காரணமென கூறப்படுகிறது. லீகர்கள் போடும் நிபந்தனை சரியல்ல வென்பதற்கும், அது சரிதான் என்பதற்கும் முஸ்லிம்களே காரணங் கூறுகின்றனர். முஸ்லிம் லீக் எங்களுக்குப் பிரதிநிதி யல்லவென்று காங்கிரஸ் முஸ்லிம்களும், ஜமீஅத்துல் உலமா, அஹ்ரார், ஷீஆ, மோமின் ஆகிய இதர முஸ்லிம் கட்சியினரும் கூறுகின்றனர்.

## சமரஸ வழி

இச்சமயம் இந்திய முஸ்லிம்களில் ஒரு பெரும் பகுதியினர் தங்கள் அரசியல் பொறுப்பை முஸ்லிம் லீகுடைய ஆதிக்கத்தில் ஒப்படைத்துள்ளனர் என்பதை யாரும் மறைத்துக் கூறுவதற்கில்லை. முஸ்லிம்களில் பெரும் பகுதியினரின் ஸ்தாபனமான முஸ்லிம் லீக் என்ற தோரணையில் காங்கிரஸ் மகா சபை சமரஸ உடன்படிக்கை செய்ய சித்தமாகவே யிருந்தது. ஆனால், முஸ்லிம் லீக் தலைவர்கள், "9 கோடி முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் லீக் தான் கார்டியன்'' என்று கூறுவதுதான் முஸ்லிம் பிரஜைகளின் சுயமரியாதைத் தன்மையைக் கேவலப்படுத்துவதா யிருக்கிறது.

முஸ்லிம் லீக் தலைவர்கள் வாஸ்தவமாகவே காங்

கிரசுடன் சமரஸம் செய்துகொண்டு தேச விடுதலைக் குச் சேவை புரிய விரும்புகிறார்களெனின், சமரஸம் வெற்றியுற ஒரு மார்க்க முண்டு. காங்கிரஸ் தலைவர் களுடன் அவர்கள் பேசுங்கால், முஸ்லிம் சமூகத் துக்கு என்னென்ன அனுகூலங்கள் செய்யப்பட வேண்டுமென்பதைப் பற்றித் தாராளமாய் கேட்கட் டும். காங்கிரஸ் தலைவர்கள் தாராளத் தன்மையோடு அவற்றைப் பரிசீலனை செய்து ஒப்புக்கொள்ளத் தயார். இந்த நேர்மையான உத்தம முறையை விட்டு, சமரசப் பேச்சு ஆரம்பித்தவுடனேயே 'ஏகப் பிரதி நிதித்வ' பல்லவியைப் பாடி, சமரஸப் பேறு மேலே செல்ல வொட்டாமல் 'பிரேக்' போடுவதென்றால், யுகாந்தம் வரையில் இந்தப் பிரச்னை இருள் நீங்கப் போவ தில்லை.

ஹிந்து—முஸ்லிம் சமரஸத்துக்கு மற்றொரு நல்ல சந்தர்ப்பமும் இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஐரோப் பிய யுத்தச் சூறாவளி தோன்றி, குவலயத்தை வாட்டி அழியச் செய்து கொண்டிருக்கிறது. இச் சமயத்தில் முஸ்லிம் லீகர்கள் சற்று தாராளத்தன்மை காட்டி, காங்கிரஸ் ஸ்தாபனத்துடன் சமரஸம் ஏற்படுத்திக் கொள்வார்களாயின், இந்தியாவுக்குப் பிரிட்டிஷார் உடனே பூர்ண ஸ்வராஜ்யம் தந்து விடும்படியான நிர்ப் பந்தத்தை இந்தியர் உண்டாக்க முடியும். பிரித்து வைக்கும் மூன்றாவது பேர்வழி யில்லாவிடில், பிரிந் துள்ள இரு சோதரர்கள் கூடிக் கொண்டு, தங்கள் சொந்த சில்லறைப் பிரச்னைகளை எளிதில் தீர்த்துக் கொண்டு சுமுகமாய் வாழ்வதில் சிரம மொன்றும் ஏற் படாது. ஆகவே, இரு சமூகத் தலைவர்களும் இச்

சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொள்ள விழைய வேண்டும்.

### ஜனநாயக ஆட்சி

இந் நாட்டிற்குச் சுய ஆட்சி முறை வேண்டுமென்று ஹிந்து, முஸ்லிம் முதலிய இந்திய சமூகத்தினர் எல்லோருமே கோருகிறோம். குறிப்பாய் காங்கிரஸ் மகா சபை கோரும் சுயாட்சி முற்ற முற்ற ஜனநாயக அரசுதான். இந்த ஜனநாயக முறை அரசுக்கு இஸ்லாமியர்கள் ஜும்ஹூரியத் என்பார்கள். இன்று துருக்கியில் நடைபெறும் ஆட்சி 'ஜும்ஹூரியத்' தான். ரஷ்யாவிலும் அமெரிக்காவிலும் மற்றுஞ் சில நாடுகளிலும் நடைபெறுவது ஜும்ஹூரியத் முறையாகிய குடியாட்சி தான். எனவே, காங்கிரஸ் கோரும் ஜனநாயக ரீதியான குடியரசு முறை இஸ்லாத்தின் லக்ஷியத்துக்கு ஒத்ததே யாகும். ஆதலின் எந்த முஸ்லிமும் இஸ்லாமிய சம்பிரதாய குடியரசாட்சி இந் நாட்டிற்கு வேண்டாமென்று சொல்லத் துணிய மாட்டார்.

"எக்காரியத்திலும் ஜனங்களுடன் கலந்தாலோசனை புரிவீராக" என்பது ஆண்டவன், குர்ஆன் ஷரீபில் நபிகள் நாயகம் அவர்களுக்குச் செய்த கட்டளை.

எம்பெருமானார் (ஸல்) தம் ஆயுள் பரியந்தம் எந்தச் சிறு காரியத்திலும் தம் தோழர்களாகிய ஸஹாபாக்களுடன் கலந்து, தர்க்கித்து ஆலோசனை புரிந்து கொண்டு தான் எதையும் செய்வார்கள். திரு நபிக்குப் பிறகு வந்த கலீபாக்களாகிய ஜனநாயகர்களும் ஜனங்களுடன் ஆலோசனை புரிந்து கொண்டே

மத, தேச, அரசியல், சமுதாய காரியங்களைப் புரிந்து வந்தார்கள். உலகச் சரித்திரத்திலேயே "கிலாபத்தெ ராஷிதா" (கலீபாக்கள் புரிந்த குடியாட்சி முறை) தான் சிறந்த அரசாட்சி என்று போற்றப்படுகிறது.

பிரஜா ஆக்ஷி முறை இத்துணைச் சிறந்ததாயிருக்க, இக்காலை "இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வேண்டாம்; பிரிட்டிஷ் மேற்பார்வை ஆட்சியிருப்பதே நல்லது" என்ற முறையில், முஸ்லிம் லீக் பேர்வழிகளில் பலர் இன்று 'பாகிஸ்தான்' கோருகின்றனர்.

பொதுவாய் எந்த தேசத்திலும் அரசியல் துறையில் கட்சிப் பிரிவினை யேற்படுவது சகஜம். அப்படி யேற்பட்டாலும் உள் நாட்டு நிர்வாக விஷயங்களில் மட்டும் தான் தகராறு இருக்கும். ஆனால், இரு கட்சி களின் போராட்டத்தில் மூன்றாவது—அன்னிய ஆட்சி இங்கு நிலை பெற்றோங்க இடமளித்து விடுவது புத்தி சாலித்தனமல்ல.

இக்காலை லீகின் பெயரால் நடைபெறும் கூட்டங் களில் லீக் தலைவர்கள் புரியும் பிரசங்கங்களையும், அவர் கள் எழுதும் எழுத்துக்களின் வாசகங்களையும் சற்று நோக்குவோமானால், ஜனநாயக ஆட்சி முறையைக் குறை கூறும் வாக்கியங்களையே அதிகம் காணலாம். காங்கிரஸ் கோரும் ஜனநாயக ஆட்சி முறை வேண்டா மென்றால், வேறென்ன ஆட்சியைத் தான் முஸ்லிம் லீக் வாதிகள் கோருகிறார்கள்?

ஒருக்கால் ஹிட்லரின் "நாஜிஸத்தையும், முஸோ லினியின் பாசிஸத்தையும், பிரிட்டனின் இம்பீரிய லிஸத்தையும் கோருகிறார்கள் போலும்! காங்கிரஸ்

லக்ஷியமாகிய ஜனநாயக ஆட்சி தவிர்த்து வேறு விதமான "இஸம்"கள் இந்நாட்டில் ஏற்படுமானல், அதில் இந்தியாவின் 40 கோடி மக்களும் பல பிரிவுகளாகி ஒருவரை யொருவர் அடித்துக் கொண்டு அடிமை வாழ்க்கை தான் புரியவேண்டி ஏற்படும்.

## ஏன் இந்த வீண் பயம்?

இந்தியாவில் சில மாகாணங்களில் ஹிந்துக்கள் அதிகமா யிருக்கிறார்கள்; வேறு சில மாகாணங்களில் முஸ்லிம்கள் அதிகமாய் வசிக்கிறார்கள். அங்கெல்லாம் பெரும்பான்மையைக் கண்டு சிறுபான்மையினர் நடுங்கும் நோய் வியாபித்து வருகிறது. இந்த நோய் வீண் பீதியால் தான் உற்பத்தியாகிறது.

உண்மையில் உலக வழக்கத்தில் எந்தப் பெரும்பான்மையினரும் எந்தச் சிறுபான்மையினரையும் விழுங்கி விடுவது என்ற காரியம் அசாத்தியமாகும். ஹிந்துக்கள் அதிகமாயுள்ள மாகாணங்களில் முஸ்லிம் லீகின் சில தலைவர்களுடைய தூண்டுதலின் காரணமாய் முஸ்லிம் மக்கள் ஹிந்துக்களுக்குப் பயப்படுவது போல் நடித்து வருகின்றனர். இதை அறிந்துகொண்டு கொஞ்ச காலமாக முஸ்லிம்கள் அதிகமாகவுள்ள சில மாகாணங்களிலுள்ள ஹிந்துக்கள் முஸ்லிம்களுக்கு நடுங்குவதாக பாவனை காட்டி வருகின்றனர். ஒரு சமூகத்துக்கு இன்னொரு சமூகம் பயப்படுவதென்பது, சட்டமும் நீதியும் நிர்வாகமும் நன்கு நடைபெறும் இந்நாகரிக யுகத்தில் பார்த்துப் பரிகசிக்கத் தக்க சம்பவமாகும்.

வருங்கால இந்தியாவில்—அதாவது சுயராஜ்ய

இந்தியாவில் ஹிந்துக்களைக் கண்டு முஸ்லிம்களோ, முஸ்லிம்களைக் கண்டு ஹிந்துக்களோ கிஞ்சிற்றேனும் பயங்கொள்ள வேண்டிய பிரமேயமே ஏற்படமாட்டாது. வருங்கால சுயேச்சை இந்தியாவில் எல்லா சமூகத்தாருடைய சம்மதம் பெற்ற சாத்விகமான ஆட்சியே நடைபெறும். அதில் சிறுபான்மை சமூகத்துக்குத் திருப்திகரமான ஸ்தானங்கள் அளிக்கப்படும். சிறுபான்மையினரின் மதம், கலை, ஆசாரம், சமூக உரிமைகள் ஆகியவைக ளெல்லாம் திருப்திகரமாய் பாதுகாக்கப்படும்.

சுதந்திரமான அரசாக்ஷியும், சமத்துவமான வாழ்க்கையும், நீதி மிகுந்த விசாரணையும், நேர்மையான பரிபாலனமும் தான் காங்கிரஸ் கோரும் வருங்கால ஸ்வராஜ்ய இந்தியா. குடியரசாக்ஷி முறையில் எந்தக் காரியமும் குடிமக்களுடைய ஆலோசனை பெற்று, பிரஜைகளின் அனுகூலங் கருதியே செய்யப்படும். ஹிந்துக்கள் பெரும்பான்மையாயுள்ள மாகாணங்களில் சிறுபான்மையினர் உரிமைகளைக் கருதி எத்தகைய ஆட்சி முறை நடைபெறுமோ, அத்தகைய நேர்மையான ஆட்சி முறைதான் முஸ்லிம்கள் பெரும்பான்மையாயுள்ள மாகாணங்களில் நடைபெறப் போகிறது. எனவே, ஹிந்துக்களோ, முஸ்லிம்களோ பெரும்பான்மை பயம் என்ற பீதி கொண்டு மடிய வேண்டிய அவசியமில்லை.

## பயப்படுபவர் யார்?

இந்தியாவிலுள்ள மொத்த ஜனத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு (சுமார் 33 சத விகிதம்) முஸ்லிம்

கள் இருக்கிறுர்கள். முஸ்லிம்களல்லாது மற்ற சிறு சமூகத்தினர் பலர் 3 சத விகிதமும், 10 சத விகிதமும், 9 சத விகிதமுமாக பல நிறத்தினர் இருக்கிறுர்கள்.

தற்கால அரசியல் போராட்டங்களைக் கவனிக்கு மிடத்து, 1, 3, சத விகிதமுள்ள சின்னஞ் சிறுபான்மையினர் எந்தப் பெரும்பான்மையினருக்கும் பயப் படுவதாகத் தெரியவில்லை. ஆனால், 33 சத விகித முள்ள மாபெரும் சிறுபான்மையினரான முஸ்லிம் கள்தான் பெரும்பான்மையினருக்கு நடுங்கிக்கொண் டிருப்பதாகத் தெரிகிறது. வீர தீரர்களும் 9 கோடி தொகையினருமான ஒரு சிறந்த சமூகத்தோர் நடுங் கிக்கொண்டு உயிர் வாழ்வதென்பது நகைப்பிற் குரிய விஷயமாகும்.

உண்மையில் முஸ்லிம்கள் சுயமே யாருக்கும் பயப்படுவதில்லை. ஆனால், தலைவர்க ளெனப்படுவோ ரின் பூச்சாண்டியைக் கண்டு தான் பொது மக்களும் பயப்படத் தலைப்படுகிறுர்கள். ஆகவே, சிறுபான்மை பெரும்பான்மைக்குப் பயப்படுவ தென்பது வெறும் வேஷமும் அபிநயமும் தவிர வேறென்று மில்லை.

சிறுபான்மை பயப் பிரச்னை ஹிந்துஸ்தானத்தில் மட்டும் தான் இருக்கிறதென் றெண்ணவேண்டாம். இதர ஐரோப்பிய நாடுகளிலும் இப் பிரச்னை புகைந்து கொண்டு தான் இருக்கின்றன. ஆனால், அந் நாடு களில் இப் பிரச்னை நாடு பிடிப்பதற்கு ஓர் உபாயமாய் கைக் கொள்ளப்படுகிறது. சிறுபான்மைப் பிரச்னை கானடா, தென் ஆப்ரிக்கா முதலிய நாடுகளிலும் எழுந்தது. ஆனால், அங்கெல்லாம் ஒரு வகையாய்

தீர்த்து வைக்கப்பட்டு விட்டது. இதே தோரணையில் இந் நாட்டிலும் ஹிந்து, முஸ்லிம் பிரச்னையைத் தீர்த்து வைப்ப தென்பது சாத்தியமே யாகும்.

## முஸ்லிம்கள் சிறுபான்மை யல்ல

முஸ்லிம்கள் ஒரு விஷயத்தை முக்கியமாய் கவனிக்கவேண்டும். 9 கோடி பேர்களுடைய ஒரு சமூகம் எப்படி சிறுபான்மை யாகும்? இப்படிப் பார்க்கப் போனால், பெரும்பான்மையினர் என்று கூறப்படுவதற்கு உலகத்தில் ஒரு சமூகங் கிடையாதென்பது உண்மையே. இக்காலை இந்தியாவில் நான்கு மாகாணங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாய் வசித்து வருகின்றார்கள். அங்கெல்லாம் மத அனுஷ்டானமும், கலாசாரமும் பொதுப்படையாய் எல்லோருடைய கூட்டுறவையும் பெற்றதாய் இருந்து வருகின்றன.

வங்காளம், பாஞ்சாலம், சிந்து, சென்னை ஆகிய மாகாணங்களிலுள்ள முஸ்லிம்கள் பெரும்பாலும் அந்தந்த மாகாண ஆதிவாசிகளின் தோரணைக்கு நேர் மாறாகவே வாழ்ந்து வருகின்றனர். எனவே, இங்கெல்லாம் முஸ்லிம்கள் யார், அல்லாதார் யார்? என்பதைக் கண்டுபிடிக்க எளிதில் இயலுகிறது. பொது விஷயங்களில் அவர்களெல்லோரும் ஒரே பிரதேசத்து மக்களைப் போல் ஐக்கிய வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். ஒரு மாகாணத்தில் முஸ்லிம்கள் எவ்வளவு குறைந்த தொகையினராக யிருந்த போதிலும், அவர்கள் தம் இதர மாகாண சோதரர்களுடன் தொடர்பும் சிநேகமும் சகோதரத்வமும் கொண்டு வாழ்ந்து வருவதால், அவர்கள் பிற்பட்ட மக்களாய் கருதப்படுவதில்லை.

இந்தியாவிலுள்ள 9 கோடி முஸ்லிம்களும் சிதறி வாழ்ந்தாலும், அவர்களெல்லோரும் இஸ்லாமிய உறவு பூண்டு கட்டுப்பாடாய் இருந்து வருகின்றனர். அவர்கள் தம்மைச் சிறுபான்மையினர் என்று சொல்லிக்கொள்வது இஸ்லாத்தில் கட்டுப்பாடும் ஐக்கிய வாழ்வும் கிடையாதென்று ஒப்புக் கொள்வதற்கொப்பாகிறது. இது இஸ்லாத்தின் லக்ஷியத்துக்கே முரணாகும்.

எனவே, முஸ்லிம்கள் தங்களைச் சிறுபான்மையினர் என்று நினைத்துக்கொண்டு அச்சங் கொள்வதை விட்டொழிக்க வேண்டும். அதற்குப் பதிலாய் தங்களுக்குள் கூட்டுறவையும் சம்பந்தத்தையும் பெருக்கிக் கொள்ள வேண்டும். இந் நாட்டில் வாழும் 9 கோடி முஸ்லிம்களும் இந்தியர் என்ற மனப்பான்மை கொண்டால், பெரும்பான்மை—சிறுபான்மை என்ற பேச்சேயில்லா தொழிந்துவிடும்.

இந்நாட்டில் வாழும் முஸ்லிம்களுக்குத் தேசபக்தியில்லை; சுதந்திர தாகமில்லையென்று ஒரு சிலர் குறை கூறுகின்றனர். இதற்குக் காரணம், முஸ்லிம்கள் தங்களைப் பொதுவாய் இந்தியர் என்று கருதாமல், தனியே யிருந்து அன்னியரைப் போல் வாழ பிரியப்படுவதே யாகும். இந்திய முஸ்லிம்கள் இந்த உண்மையை உணர்ந்து கொள்வார்களே யாயின், அவர்களுக்கு ஹிந்துக்களிடம் நல்லெண்ணம் தோன்றும்; ஹிந்துக்களும் முஸ்லிம்களுடன் மனம் ஒன்றுபட்டு அன்யோன்யமாய் வாழுவர். இதனால் முஸ்லிம் சமூகம் அளவற்ற பயனடையும். முஸ்லிம்களின் தேசபக்தியும், சுதந்திரப் பற்றும் அனைவராலும் பாராட்டப்

படும். சிறுபான்மை—பெரும்பான்மைப் பிரச்னை தீருவதற்கு இதுவே சிறந்த வழி.

## உர்தூ—ஹிந்தி 'ஜகடா'

நம் தேசத்தில் வழங்கும் பாஷைப் பிரச்னையும் இக்காலே ஹிந்து-முஸ்லிம் பிணக்குத் தீயைச் சிலர் தூண்டிவிடுவதற்கு ஒரு எரிகொள்ளி ஆயுதமாய் உபயோகப்பட்டு வருகிறது. தேச மொழியை அபி விருத்தி செய்வதென்ற திட்டம், இன்று நேற்று ஏற் பட்டதல்ல. சுமார் நாற்பது ஐம்பது வருஷங்களா கவே இந்துஸ்தானத்தில் இந்த இயக்கம் இருந்து வருகிறது.

சமீபத்தில் மகாத்மா காந்தி இந்தி இயக்கத் தைத் தம் பொறுப்பில் ஏற்றுக்கொண்டார். தம் கட மைப்படி அவர் நாடெங்கும் இந்தியைப் பரப்பப் பிர யத்தனம் எடுத்துக்கொண்டார். பிறகு, காங்கிரசி லும் காந்திஜீ சர்வாதிகாரி ஸ்தானத்தை வகிக்க லானர். தேசத்துக்குப் பொதுவான காங்கிரஸ் மகா சபையில் ஒரு முக்கியஸ்தராக இருந்துகொண்டு, இந்தியையும் நாட்டில் பரப்பப் பகீரதப் பிரயத்தனம் எடுத்துக்கொண்டது உர்தூ அபிமானிகளான முஸ் லிம்களுக்குக் காங்கிரசின் மீது அவநம்பிக்கையை உண்டாக்கிற்று. காந்திஜீ காங்கிரசுக்குள் ளிருந்து கொண்டு முஸ்லிம்களுடைய பாஷையையும், இலக்கி யத்தையும் அழித்து வருவதாய் எதிர் பிரசாரங்கள் தொடங்கப்பட்டன. அதிலிருந்து இந்தி—உர்தூ 'ஜகடா' நாட்டில் தலைதூக்கித் தாண்டவ மாடத் தொடங்கிற்று.

மகாத்மா காந்தி ஹிந்தி பிரசார வேலையை ஆரம்பித்தபோது அவர் உர்தூவை அழிக்கவேண்டுமென்ற எண்ணம் ஒரு சிறிதும் கொள்ளவேயில்லை. அதற்குப் பதிலாய் தமக்கு உர்தூ மொழியில் எத்துணை அபிமானமும், அனுபவமும் உண்டென்பதை பிரசங்க மூலமாயும், கட்டுரை மூலமாயும் அப்போதைக் கப்போது வெளிப்படுத்தி வந்தார். ஆனால், ஹிந்தியைப் பரப்ப எடுத்துக் கொண்ட முயற்சியைப் போல் உர்தூவைப் பரப்ப முயற்சி எடுத்துக் கொள்ளாததால், காந்திஜி மீது முஸ்லிம்களுக்கு அவநம்பிக்கை அதிகரிக்கலாயிற்று.

அதன் பிறகு, காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டதும் சர்க்காரில் அங்கம் வகித்த காங்கிரஸ் தலைவர்களில் ஒரு சிலர் ஹிந்திப் பிரசாரத்துக்கு அளவுக் கதிகமான ஆதரவளித்தனர். சர்க்கார் சார்பான அறிக்கைகளுக்கும், எழுத்துக்களுக்கும் ஹிந்தியை அதிகம் உபயோகப்படுத்தத் தொடங்கினர்.

அத்துடன் மட்டுமல்ல. ஹிந்தி அதிகம் வழங்காத பிற மாகாணங்களிலும் ஹிந்திப் பிரசாரத்தைத் தீவிரப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டனர். இத்தியாதி காரணங்களால் காங்கிரஸ்காரர்கள் ஹிந்தியைப் பரப்பி வைத்து உர்தூவை அழித்துவிட கங்கணம் கட்டிக்கொண்டார்களென்று முஸ்லிம்கள் திடமாக எண்ணிக் கொண்டார்கள்.

## ஹிந்தியினுல் நன்மை யுண்டா?

தற்கால இந்திய அரசியல் துறைக்கு ஹிந்தி வளர்ச்சி சாதகமாய் முடியுமோ, பாதகமாய் முடியுமோ அதை இப்போது தீர்க்கதரிசனமாய் கூறி

வைப்பதற்கில்லை. ஆனால், ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை ஏற்படுத்தும் துறையில் ஹிந்தி—உர்து பிரச்னை உண்மையில் ஒரு தடைக்கல்லா யிருக்கக் கூடாதென்பதை சிறிது விளக்க விரும்புகிறோம்.

கால, தேச நெருக்கடியை யுத்தேசித்துக் காங்கிரஸ் தலைவர்கள், ஹிந்தி பிரசார இயக்கத்தின் வேகத்தைக் கொஞ்சம் தளர்த்தி வைத்தல் வேண்டும். இன்றேல், ஹிந்தி எதிர்ப்பின் பெயரால் காங்கிரஸ் லக்ஷியங்களுக்கு முட்டுக்கட்டை பல ஏற்படும்.

ஹிந்தி—உர்து பிரச்னையை யொட்டி முஸ்லிம்களும் சில விஷயங்களை உய்த்துணர வேண்டும். உர்து இந்திய முஸ்லிம்கள் பெரும்பாலோர் பேசி வரும் பாஷை. ஆனால், அது அவர்களுடைய மதப் பாஷை யல்ல. உர்து மொழி இஸ்லாத்திற்காக பொதுவாக ஏற்பட்டதாகும். ஹிந்தி பாஷை பேசுவதும் எழுதுவதும் மக்களிடையே பெருகிப் போனால், உர்தூவே இல்லாது மறைந்து விடுமென்று பயப்படுவது வெறும் பேதமையாகும். இஸ்லாமிய நாடுகளில் பற்பல விதமான மொழிகள் வழங்கி வருகின்றன.

துருக்கியில் லத்தீனும், ஈரானில் பார்ஸீயும், எகிப்தில் அரபியும் வழங்கி வருகின்றன. ஒரு காலத்தில் (சுல்தான் ஆட்சியில்) துருக்கியில் அரபு மொழி தான் அரசாங்கத்துப் பாஷையா யிருந்து வந்தது. பிறகு, துருக்கியில் கலீபா ஆட்சி முறை யொழிந்து, காஜி முஸ்தபா கமால் பாஷாவின் நவீன யுகம் ஆரம்பிக்கவே, அரபு மொழியை உதறித் தள்ளிவிட்டு, அதன் ஸ்தானத்தில் லத்தீன் எழுத்தில் எழுதப்படும் தேச பாஷையை ஏற்படுத்தினார்கள். அப்போது அங்குள்ள

முஸ்லிம்கள் இப் புதுமாறுதலை எதிர்க்கத்தான் செய்த னர். "அரபு தான் இஸ்லாத்தின் பாஷை; அரபு எடு பட்டு விட்டால் இஸ்லாம் குன்றிப்போகும்" என்று கிளர்ச்சியுஞ் செய்தார்கள். ஆனால், துருக்கிப் பிரதானி கள் இஸ்லாத்துடன் அக்ஷரத்தைப் பிணைக்கக் கூடா தென்று கடுமையான நடவடிக்கைகள் எடுத்து கிளர்ச் சியை ஒடுக்கினர். ஆனால், இப்போது துருக்கியில் அரபு பாஷை சர்க்கார் மொழியாக யில்லை; லத்தீன் எழுத்துக்கள் அந்த ஸ்தானத்தை ஆக்கிரமித்துக் கொண்டன.

## உர்தூ வடநாட்டுப் பாஷை

ஹிந்தியும் உர்தூவும் வடநாட்டில் தான் அதிகம் வழங்கி வருகின்றன. அங்கு பல இடங்களில் முஸ் லிம்களுடைய மொழி ஹிந்தியாகவே இருந்து வரு கின்றது. கிராமப் பிரதேசங்களிலுள்ள முஸ்லிம் களுக்கு ஹிந்தியைத் தவிர வேறொன்றும் தெரியாது.

அவ்வாறே லக்னோ, அலஹாபாத், டில்லி முதலிய இடங்களில் ஹிந்துக்களின் தாய் பாஷையும் லௌகிகப் பாஷையும் சுத்தமான உர்தூவாகவே யிருக்கிறது. ஹிந்தியை யெதிர்க்கும் வட இந்திய ஹிந்துக்களில் ஸர் தேஜ்பஹதூர் ஸப்ரூவின் பெயர் குறிப்பிடத் தக்கதாகும். இவர் தற்சமயம் உர்தூ அபிவிருத்திச் சக்கத்திற்கு (அஞ்ஜுமனே தரக்கியே உர்தூவுக்கு)த் தலைவராய் இருந்து வருகின்றார். இவரது தலைமையில் இந்துக்களும் முஸ்லிம்களும் ஐக்கியமாய் உர்தூவுக்கு தொண்டாற்றுகின்றனர். எனவே, உர்தூ முஸ்லிம் களுடைய பாஷை யல்ல; அதில் ஹிந்துக்களுக்கும்

பங்குண்டு என்பதற்கு மேற்கண்ட விஷயம் ஓர் உதாரணம்.

உர்தூ ஒரு மதத்துக்கோ, ஒரு சமூகத்துக்கோ சொந்தமான பாஷை யல்ல. அது இந்திய மக்க ளெல்லோருக்கும் பொதுப் பாஷை. ஹிந்தியும் 'இந்திய மக்க ளனைவருக்கும் உரித்தான பாஷை தான். யார் யார் எதை யெதை கற்கவும் பேசவும் இஷ்டமோ, அதை யதை அவரவர் கற்றுப் பேசட்டும். இதில் கட்டாயமோ, பலாத்காரமோ தேவையில்லை.

உர்தூ—ஹிந்தி யென்று துவேஷம் கற்பிக்கப் படுவதெல்லாம் அதை யெந்த அக்ஷரத்தில் எழுத வேண்டும் என்பதைப்பற்றித் தான். ஒருசாரார் தேவ நாகரியில் எழுதப்படும் மொழியை ஹிந்தி யென்கின்ற னர். இன்னொரு சாரார் பார்ஸீ அக்ஷரத்தில் எழுதப் படுவதை ஹிந்தி என்கின்றனர். மற்றுஞ் சிலர், தேச மக்கள் பேசும் பாஷையை ஹிந்தி யென்றுஞ் சொல்லாமல் ஹிந்துஸ்தானி என்கின்றனர்.

உர்தூவும் ஹிந்தியும் ஒரே இலக்கணத்தை அடிப் பீடமாய் கொண்டுதான் நிறுவப்பட்டுள்ளன. பேசப் படுவதில் வித்தியாசமில்லை. அரபு, பார்ஸி தெரிந்தோர் அம் மொழியின் பதங்களையும், சமஸ்கிருதம் தெரிந் தோர் அம் மொழிப் பதங்களையும் தாராளமாய் கலந்து கொண்டு பேசுகின்றனர். இது அவரவர் இஷ்டம். சமஸ்கிருத வார்த்தை கலப்போரை அரபு பதங்களைக் கலந்து கொள்ளும்படியும் அரபு பதங்களை கலந்து கொள்வோரைச் சமஸ்கிருத பதங்களைக் கலக்கும்படி யும் கட்டாயப்படுத்துவது அசாத்தியம்.

இந்தியாவில் பலதரப்பட்ட பாஷைகள் வழங்குகின்றன. அவற்றில் இந்தி, உர்தூ என்று பாகுபாடு செய்யப்படும் இந்துஸ்தானியு மொன்று. இந்துஸ்தானி நாட்டில் பெரும்பாலோரால் பேசப்படுவதால், அதையே தேச பாஷையாக்க வேண்டுமென்று தலைவர்கள் விரும்புகின்றனர். இது ஒரு தேசீயப் பிரச்னை. இத் தேசமெல்லாம் ஒரே பாஷை பேசப்பட்டால் அது எல்லோருக்குமே நலம். இதற்காக இந்து, முஸ்லிம் எல்லோரும் ஏகோபித்து உதவி புரியவேண்டும். "இது எங்கள் பாஷை; அது உங்கள் பாஷை" யென்று பிரிவினைப்படுத்தினால் தேசம் உருப்படாது.

எனவே, முஸ்லிம்கள் உர்தூ இஸ்லாமிய பாஷையென்பதையும், இந்துக்கள் இந்தி தார்மீக பாஷையென்பதையும் விட்டொழிக்க வேண்டும். உர்தூ—இந்தி ஜகடாவையே எடுத்துக்கொள்ளக் கூடாது. அப்போது தான் இந்து—முஸ்லிம் ஒற்றுமை யுண்டாகும்.

## தேசீயக் கல்வி

வார்தா திட்ட மென்பது இந்திய மக்களெல்லோருக்கும் பொதுப்படையாய் இந்துஸ்தானியில் கல்வி புகட்டுவதற்காக ஏற்பட்ட ஒரு தேசீய கல்வித் திட்டம். டில்லி ஜாமிஆ மில்லியாவின் ஷெய்கான மௌல்வி சாகிபவர்கள் தேசத்திற்கும் மதத்திற்கும் தொண்டாற்றி கீர்த்தி பெற்றவர். முஸ்லிம்கள் அவரது கல்வித் திறமைக்காகவும், பெருந் தன்மைக்காகவும் அவரை நாடெங்கும் கொண்டாடுகிறார்கள். மௌல்வி ஜாகீர் ஹுஸைன் காங்கிரசில் அதிக சம்பந்தமுடையவரா யிருந்து வருகின்றார். ஆகவே,

அவரைப் பற்றி பொறுப்பற்ற பேர்வழிகள் சிலர் அவதூறுகளைக் கிளப்பி, பொது ஜனங்கள் உள்ளத்தில் அவர் பாலுள்ள அபிமானத்தை அபகரித்துவிட பிரயத்தனம் எடுத்துக் கொண்டனர்.

மௌல்வி ஜாகீர் ஹுஸேனின் குண குணங்களைப் பற்றி நமக்குச் சிரத்தையில்லை. அவர் தேச மக்களுக்குச் சமர்ப்பித்துள்ள கல்வி போதனை திட்டம் எத்தகைய தென்பதைச் சிறிது ஆராய்வோம்.

வார்தா கல்வித் திட்டத்தில் இரு பெரும் விஷயங்கள் மூலாதாரமாகவும் அடிப்படையாகவும் கொள்ளப் பட்டிருக்கின்றன. இந்துஸ்தானத்தின் பலதிறப்பட்ட வகுப்புகளுக் கிடையில் வேற்றுமைக்கும் சச்சரவுக்கும் காரணமா யிருக்கும் விஷயத்தை இயன்ற மட்டும் நீக்கி வைப்பது அவரது திட்டம். ஆகையால் தான் வார்தா திட்டத்தில் மதாசாரக் கல்வி அங்கீகரிக்கப் படவில்லை.

வார்தா திட்டத்தில் மதக் கல்வி சேர்த்துக் கொள்ளப்படாதது ஒரு புதுமையல்ல. தற்காலம் பொதுப் பள்ளிக்கூடங்களில் குறிப்பாக எந்த மதக் கல்வியும் போதிக்கப்படாததைத் காண்கின்றோம். அதைப் போல் தான் அத்திட்டத்தில் எந்த மதக் கல்வியும் பிரதானமாய் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

ஆனால், எல்லா மதங்களுடைய பொதுப் போதனை மக்களின் குண ஒழுக்கங்களைச் சீர்திருத்தி உத்தமர்களாக்க வேண்டுமென்பதாகும். மனிதரை மனுஷ்யத் தன்மையின் எல்லைக்குக் கொண்டு செல்லும் சன்மார்க்கம் குண ஒழுக்கம் தான். ஆகவே,

வார்தா திட்டத்தின் பொதுப்படையான குண ஒழுக்கத்துக் குரிய போதனைகள் நிறைய புகுத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மதத்தின் தலைவருடைய ஜீவிய வாழ்க்கை வரலாறு, மேற்படி போதனைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சமூகமும் பிற சமூகத்தையும், பிற சமூகப் பெரியோர்களையும் கௌரவப்படுத்த வேண்டுமென்பதே இதன் நோக்கம்.

அத்திட்டத்தில் கைத்தொழிலும் வித்தையும் கட்டாயமாய் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. உலக வாழ்க்கையில் கல்விக்குப் பிறகு ஜீவனோபாயமே பிரதான லக்ஷியமா யிருப்பதால், தொழில் முறைக்கு இத்திட்டத்தில் விசேஷத்துவம் அளிக்கப்பட் டிருக்கிறது.

## வந்தேமாதரம்

'வந்தேமாதரம்' என்று ஆரம்பிக்கும் இந்த கீதத்தை ஒரு புனித தேசீய கீதமாக இந்து சோதரர்கள் சுமார் ஒரு தலைமுறை காலமாகப் பாடி வருகின்றார்கள். மத சம்பந்தமான சடங்குகளும், தேசீயக் கூட்டங்களின் நடவடிக்கைகளும் இந்தக் கீதத்தைக் கொண்டே ஆரம்பிக்கும் வழக்கம் நெடுநாளாகவே யிருந்து வருகிறது. சென்ற மூன்று வருடங்கள் வரை இந்தப் பாட்டு பாடுவதை முஸ்லிம்கள் சிறிதும் ஆக்ஷேபிக்கவில்லை. அக் காலங்களில் பெரிய பெரிய முஸ்லிம் தலைவர்கள் இக் கீதத்தைக் கேட்டதும் மரியாதைக்காக எழுந்து நிற்பது வழக்கமாயிருந்து வந்தது. கிலாபத் இயக்கக் காலத்தில் எந்த முஸ்லிம் தலைவரும் இந்த பாட்டை யொட்டி ஆக்ஷேபனை கிளப்பவில்லை.

ஆனால், காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகுக்கும் அபிப் பிராயபேதம் ஏற்பட்டு, வகுப்புப் பேச்சு தலைவிரித்துத் தாண்டவமாடத் தலைப்பட்டதும், இந்தக் கீதம் பாடப் படுவதை யொட்டி முஸ்லிம்கள் ஆக்ஷேபனை செய் யத் தொடங்கினார்கள். இந்தப் பாட்டு ஆக்ஷேபனைக் குரியது என்பதற்கு முஸ்லிம் லீக்காரர்கள் கூறும் காரணம் யாது தெரியுமா?

"இந்தக் கீதம் ஒரு வங்க மொழிக் கதையிலி ருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. அக்கதை ஹிந்துக் களும் முஸ்லிம்களும் போரிடுவதை மூலக் கருத்தாய் கொண்டதாகும். ஹிந்துக்கள் இந்த வீர கீதத்தைப் பாடிக்கொண்டே முஸ்லிம்களை இந்நாட்டை விட்டும் துரத்திவிட அதில் சபதம் செய்கிறார்கள். இப்பாட்டில் காளியிடம் உதவி கோரப்படுகிறது. முஸ்லிம்களுக்கு விரோதமாக ஹிந்துக்களைத் தூண்டி விடுவதையே அந்த வங்கக் கதாசிரியர் முக்கிய நோக்கமாய் கொண் டுள்ளார்" என்பதேயாம்.

இப்படி யெல்லாம் கற்பனை செய்து ஆத்திரம் உண்டாகும் வண்ணம் கூறினால், எந்த முஸ்லிம் தான் கோபங் கொள்ளாதிருக்க முடியும்? ஆனால், உண்மை யென்ன? அந்த நாவலை யெழுதிய வங்காளி தலைவ னென்றோ, தேசத் தியாகி யென்றோ கொண்டாடப் படவில்லை. ஆனால், அந்தப் பாட்டில் தேசபக்தி யூட் டும் அம்சம் நிறைந்து ததும்புவதினால் தான் அதைத் தேசீய கீதமாய் பாடுகிறார்கள்.

முஸ்லிம்கள் அயல் தேசங்களிலிருந்து இந்நாட் டில் குடியேறியவர்க ளென்றே வைத்துக்கொள் வோம். இந்துஸ்தானத்தில் வந்து குவிந்து பரவிக்

கிடக்கும் ஆரியர்களைப் போல் தான் முஸ்லிம்களும் இந்நாட்டிற்கு வந்து, இதையே தாய் நாடாகக் கருதிக் கொண்டவர்கள். பிறகு, முஸ்லிம்களுடைய ஆட்சி முறை தான் இந்நாட்டுக்கு நாகரிகத்தையும் கலா ஞானத்தையும் புகட்டி உன்னதப்படுத்தியது முஸ் லிம்கள் தான் இந்நாட்டை உலகத்தில் சிறந்த நாடாக் கினார்கள். ஆகையால், பல தலைமுறையாய் இந் நாட்டைத் தாயகமாய் கொண்டுள்ள முஸ்லிம்களை அன்னியர்கள் என்று கூறுவது பொருந்தாது. அது மட்டுமல்ல. இந்தியாவெங்கும் பரவி வாழும் 9 கோடி முஸ்லிம்களை இந்நாட்டை விட்டும் விரட்டி விடுவதென் பது காரிய சாத்தியமா? ஒருக்காலும் முடியாது. அங்ஙனமிருக்க, 'வந்தேமாதரம்' என்று சொன்னதும் முஸ்லிம்கள் எதற்காக பயப்படவேண்டும்.

## முஸ்லிம்களைப் பற்றி யல்ல

'வந்தேமாதரம்' கீதத்தின் பின்னடிகளில் கூறப் படும் 'அன்னியர்' என்ற வார்த்தை தற்கால முஸ்லிம் களைப்பற்றி யல்ல. மூன்று தலைமுறைகளுக்கு முன் ஆண்டுகொண்டிருந்த கொடுங்கோலர்களைப் பற்றியிரு க்கலாம். எனவே, அந்த மன்னர்களும் இப்போதில்லை; அதைப்பற்றிய பிரச்னையும் இப்போது எழவேண்டிய தில்லை.

தற்காலம் 'வந்தேமாதரம்' பாடும் தேச பக்தர் கள் வங்க கதாசிரியரின் கருத்தை மனதில் எண்ணுவது கூடக் கிடையாது. அதைக் கேட்பவர்களுக்கு அந்த 'பழைய கருத்து' தோன்றுவது மில்லை. முஸ்லிம்களைப் பற்றித் துவேஷமில்லாமல், நிஷ்களங்கமாய்த் தான்

தற்கால தேசபக்தர்கள் இப்பாட்டைப் பாடிவருகிறார் கள்.

மூன்னிரண்டு தலைமுறையாக யில்லாமல் திடீ ரென்று இரண்டரை வருட காலமாக இந்த 'வந்தே மாதர' கானத்துக்கு எதிர்ப்பு கற்பிக்கப்பட்டிருப்ப தின் உட்கருத்து வேறு. கொஞ்சகாலமாக ஹிந்துக் களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையில் கலகப் பிரியர்க ளான சில தலைவர்கள் துவேஷப் பிரசாரம் செய்து வருவதை அறிகிறோம். அத்தகைய தலைவர்கள் பொதுப்படையான எந்தச் சிறு விஷயத்திலும் துவேஷங் கற்பிப்பதற் குரிய அணுவளவு அம்சம் கிடைத்தாலும் அதை வியர்த்த மாக்குவதில்லை; அதை உடும்புப் பிடியாய் பிடித்துக்கொண்டு தேசமக்களின் மனத்தை ஒரு குழப்பு குழப்பியே திருவர். 'வந்தே மாதர' கானத்தின் மீது கிளப்பப்படும் சர்ச்சைகளும் இந்த வகைப்பட்டது தான்.

ஒரு காலத்தில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் உத்தி யோக வர்க்கத்தினர்களும் தான் இந்த வந்தேமாதர கீதத்தின் மீது கோபவேகத்தைக் காட்டிவந்தார்கள். அதன் பயனாய் இந்தப் பாட்டு கொஞ்சகாலம் சட் டப்படி தடை செய்யப்பட்டுக் கிடந்தது. இந்த உரிமையைத் திரும்பப் பெறுவதற்காக ஹிந்துக்களும், இதர தேசபக்தர்களும் பலவகை தியாகஞ் செய்தனர்; சிறைக்கோட்டங்களில் அடைபட்டு வாடினர். ஆகை யால், இப்பாட்டிற்கு மகத்துவம் ஏற்பட்டு விட்டது. இதைக் காங்கிரஸ்வாதிகள் விடாதிருப்பதற்குக் கார ணம் இது தான்.

'வந்தேமாதர'த்தைப் பற்றி முஸ்லிம்கள் ஆக்ஷேபனை செய்வது நியாயமாயிருந்தாலும், அதைக் காங்கிரஸ் மகாசபை அலக்ஷியம் செய்துவிடவில்லை. பாட்டில் காளியின் ஸ்தோத்திரத்தைப் பற்றி வரும் அடியைக் காங்கிரஸ்காரர்கள் அடியோடு விட்டுவிட்டார்கள். மேலும், முஸ்லிம்கள் கலந்துகொள்ளும் சபையிலோ, கூட்டத்திலோ 'வந்தேமாதரம்' பாடுவதை முஸ்லிம்கள் ஆக்ஷேபிப்பார்களானால், அதை ஒரேயடியாய் விட்டு விடும்படி காங்கிரஸ் மகாசபை கட்டளையிட்டுவிட்டது. எனவே, திரும்பத் திரும்ப வந்தேமாதரப் பிரச்னையைப்பற்றி முஸ்லிம்கள் சிலர் சர்ச்சை புரிவது கூடாது. முஸ்லிம்களை மதித்து ஹிந்துக்கள் விட்டுக் கொடுத்திருக்கும்போது முஸ்லிம்களும் தாராள மனப்பான்மையுடன் அவ் விஷயத்தில் பிறரின் மனதை மேன்மேலும் புண்படுத்தா திருப்பது நலம்.

## மேளமும் குர்பானியும்

இந் நூலில் இதுவரை கூறிவந்த விஷயங்களெல்லாம் கல்வி யறிவும் விவேகமும் அரசியல் ஞானமும் பெற்ற கனவான்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளாகும். நல்ல விஷயங்களை எடுத்துக் கூறினால் கல்வி யறிவுடைய புத்திசாலிகள் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், போதிய கல்வி ஞானமற்ற பாமரர்கள் என்ன விளக்கிச் சொன்னாலும் இதமான நீதியைக் கிரஹிக்க மாட்டார்கள்; பழைய பிடிவாதத்திலேயே வீழ்ந்து புரளுவார்கள்.

மஸ்ஜித் முன் பிடிவாதமாய் மேளம் வாசித்துக் கடுபிடி செய்து செல்வதும், ஹிந்து தர்மத்தில் புனிதப்

பிராணியாகக் கருதப்படும் பசுவை வதைத்துக் குர்பானி செய்வதற்காக ஹிந்து அஹிம்ஸா தர்மிகளின் மனம் புண்படும்படி பசுவைப் பகிரங்கமாய் படாடோபத்துடன் ஊர்வலம் கொண்டு செல்வதும் கல்வியறிவில்லாத பாமர மக்களின் செயல்களாகும்.

மஸ்ஜித் எதிரில் மேளம் வாசித்து இஸ்லாமியப் பிரார்த்தனைக்குப் பங்கம் விளைவிப்பதால் ஹிந்து தர்மத்துக்கு நன்மை யொன்றுமில்லை; அவ்வாறே முஸ்லிம்கள் பசுவினத்தைக் குர்பானி செய்யும்போது ஹிந்து சோதரர்களின் மனது புண்படாது நடந்து கொண்டால் அதனால் இஸ்லாத்தின் கௌரவம் குன்றிவிடாது.

இந்தியாவுக்கு வெளியே அயல் நாடுகளில் மேளத்தின் பேராலும், பசுவின் பேராலும் வகுப்புச் சச்சரவுகள் நடைபெறுவதே கிடையாது. இந்தியாவில் இந்த விசித்திச் சண்டைகள் நடப்பதைக் கண்டு ஐரோப்பியர்களும், இஸ்லாமிய நாட்டினரும் நம் இந்தியர்களைப் பரிகாசம் செய்கிறார்கள்.

இதெல்லாம் அந்தந்த இடத்துப் பாமர மக்களின் மனோபீஷ்டத்தைப் பொறுத்த விஷய மாதலால், ஆங்காங்குள்ள ஹிந்து—முஸ்லிம் தலைவர்கள் கவனித்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

## உத்தியோக வேட்டை

முஸ்லிம்களுக்கு ஜனத்தொகை விகிதாசாரப்படி உத்தியோக ஸ்தானங்கள் அளிக்கப்பட வேண்டுமென்பது தேசத்தின் பொருளாதார விஷயத்தையும் நபர்களின் கல்வி அனுபவ யோக்கியதாம்ஸத்தையும் பொறுத்த விஷயங்களாகும். இது ஹிந்து—முஸ்லிம்

சமூகப் பிரச்னை யாகமாட்டாது. வகுப்புப் பிரச்னை யோடு இதையும் சேர்த்துவைப்பது ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமையை மேன்மேலும் சிக்கலுக்குள்ளாக்குவதே யாகும்.

முஸ்லிம்கள் விகிதாசார உத்தியோகம் கோருவது எதற்காக? முஸ்லிம் சமூகத்தின் வறுமை நீங்குவதற்காகவா? சர்க்கார் உத்தியோகஸ்தர்களில் 100க்கு 10 பேர்கள் நல்ல சம்பளம் பெறும் 'ஜென்டில்மேன்' களாகி விட்டால், இந்தியாவிலுள்ள 9 கோடி முஸ்லிம்களுக்கும் க்ஷேமம் உண்டாய் விடுமா? சில படித்த பேர்வழிகள் கொழுத்த சம்பளம் பெற்று உல்லாஸ வாழ்க்கை நடத்துவதற்குரிய பேச்சு எப்படி சமூகத் தொண்டாகும். கல்வி யறிவில்லாத பாமர மக்களின் வறுமையைப் போக்குவதைவிட படித்தவர்களுக்கு வேலை வாங்கித் தருவது சிலாக்கியமா? ஏழை முஸ்லிம் தொழிலாளர்களின் பசிப்பிணியை நிவர்த்திப்பதை விட்டு ஹாட், ஷூட், கோட் அணியும் பேர்வழிகளுக்கு வருவாய் தேடித் தருவது சிலாக்கியமா?

எது முதலில் செய்யவேண்டிய கடமை யென்பதை முஸ்லிம்கள் உணர வேண்டும். அதைக் கருதியே விகிதாசார உத்தியோகங்களைப் பற்றி சில வரிகள் எழுதினேன்; அவர்களுக்குப் பாதகமாக அல்ல.

## தனித் தொகுதித் தேர்தல்

இந்திய அரசியல் வாழ்க்கையில் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையே வேற்றுமைச் சூறாவளியை வீசவைத்து, முஸ்லிம்களுடைய கட்சியைப்

பலஹீனப்படுத்திய விஷயங்களில் தனித் தொகுதித் தேர்தல் பிரச்னை முக்கியமான தொன்ருகும். ஒரு தேசத்து மக்கள், எல்லோரும் ஒன்ருயிருந்து அரசியல் துறையில் கூட்டுறவா யுழைத்தால், எல்லா சமூகங்களும் ஒருங்கே பயனடைய முடியும். இதுதான் ஜனநாயக முறையின் தத்துவம். இதை விட்டு ஒவ்வொரு சிறு சமூகமும் தனித்தனியே நின்று பெரிய சமூகத்துடன் போட்டிப் போட்டுக்கொண்டு, தன் சமூகத்துக்கு நன்மை தேடுவதென்பது சமுத்திர அலைகளுடன் எதிர்த்து நிற்பதே போல் தாளுகும். நம் இந்திய தேசம் ஜனநாயக ஆட்சியை விரும்பும் நாடு. ஜனநாயக நாடுகளில் கூட்டுறவு அரசியல் தான் பயன்படும். ஆகையால், இந்திய சமூக மெல்லாம் பொதுப் படையாய் நன்மை யடையவேண்டுமாளுல் பிரிவினை அரசியல் கூடவே கூடாது.

தனித்தொகுதி தேர்தல் முறை ஒரு தேச மக்களை வகுப்பு வகுப்பாக பிளவுபடுத்தி பகைமையை வளர்க்கிறது. தற்காலம் அரசியல் துறையில் முஸ்லிம் சமூகம் பிற்போக்கடைந்து கிடப்பதற்குக் காரணம் தனித் தொகுதி தேர்தல் போட்டா போட்டி தான். தனித் தொகுதி தேர்தல் முறை தான் முஸ்லிம் சமூகத்துக்கு நலம் தரும் என்று முஸ்லிம்கள் பலர் கருதுகின்ருர்கள். அவர்கள், கூட்டுத்தொகுதி தேர்தல் ஏற்பட்டால் இதர சமூகத்தினர் முஸ்லிம்களை ஒடுக்கி விடுவர் என்று எண்ணுகின்றனர். ஆளுல், முஸ்லிம்கள் தனித்து நிற்பதால் தீமை அதிக முண்டாகிறதென்பது அரசியல் தந்திரம் அதிகம் தெரிந்தவர்களின் அபிப்பிராயம்.

தற்போதுள்ள தனித்தொகுதி தேர்தல் முறையில் அதிக சிரமமின்றி முஸ்லிம்களுக்குச் சில ஸ்தானங்கள் கிடைத்து விடுவதா யிருக்கலாம். ஆனால், தேசத்துக் குப் பொதுவான ஒரு காரியம் செய்யவேண்டிய போது ஹிந்துக்களும் முஸ்லிம்களும் வேற்றுமைப் பட்டு அக்காரியத்தை திண்டாட்டத்தில் விட்டு விடு கின்றனர்.

"முஸ்லிம்களுக்குப் பிரதிநிதி முஸ்லிம்கள் தான்; ஹிந்துக்களுக்குப் பிரதிநிதி ஹிந்துக்கள் தான்" என்று ஏற்பட்டு விடுவதால், ஹிந்துக்கள் முஸ்லிம்களுக்கு எத்தகைய நன்மையும் செய்யாதிருந்து விடுகின்றனர்.

தனித்தொகுதி தேர்தல் முறையில் இன்னொரு பாதகமும் இருக்கிறது. ஒரு முஸ்லிம் தொகுதிக்கு முஸ்லிம் லீக்காரர்கள் பிரதிநிதிகளை அபேக்ஷகர்களாக நிறுத்துவார்கள். காங்கிரஸ்காரர்களும் போட்டிக்குச் சில காங்கிரஸ் முஸ்லிம்களை நிறுத்துவார்கள். இதனால் முஸ்லிம்களுடைய ஐக்கியம் இன்னும் சீர்கெட்டுப் போய் விடுகிறது. பிறகு, கௌன்ஸில்களிலும் அந்த விரோதமிருந்து எந்தத் தீர்மானமும் ஏகோபித்த முறை யில் நிறைவேறாமற்படி முட்டுக்கட்டைகள் ஏற்படு கின்றன. எனவே, தனித்தொகுதி தேர்தல் முறையில் முஸ்லிம்களுக்கு நன்மை யிருப்பது போல் வெளிப் படையில் காணப்பட்டாலும், அந்தரங்கத்தில் அதில் முஸ்லிம் சமூகத்துக்குப் பல முட்டுக்கட்டைகள் ஏற் படுகின்றன. ஆனால், கூட்டுத்தொகுதி தேர்தல் முறை யில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பரஸ்பரம் கலந் துறவு கொள்ள நிறைய சந்தர்ப்பங்கள் ஏற்படுவ தோடு, பொதுக் காரியங்களில் ஒருவருக்கொருவர்

விட்டுக் கொடுக்கும் சமரஸ சுபாவமும் ஏற்படுகிறது. சட்டசபைகளில் முஸ்லிம் சமூகத்துக் குரிய ஒரு விஷயம் வருமானல், பரஸ்பர நேசத்தால் இதர சமூகத்தாரும் முஸ்லிம் மெம்பர்களுடன் சேர்ந்து சாதகமாய் ஓட்டு செய்து சகாயம் செய்வார்கள். இதனால் முஸ்லிம்கள் வெகு சுலபமாய் தங்கள் மதம், சமூகம், கலை, பொருளாதாரம், தொழில் முதலியவற்றிற்கு நன்மை தேடிக்கொள்ள சாத்தியமாகிறது. ஆகவே, கூட்டுத் தொகுதி தேர்தல் முறையை அனுசரித்தால் ஹிந்து—முஸ்லிம் ஐக்கியம் எளிதில் உண்டாகுமென்பது திண்ணம்.

## ஒன்றுபட்டா லுண்டு வாழ்வு

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இந்நாட்டில் ஓர் ஆயிரம் வருஷகாலமாய் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளார்கள். இனியும் ஹிந்து—முஸ்லிம்கள் அரசியல் துறையில் கூடி வாழ முடியுமென்பதற்கும் அஃதொன்றே போதிய அத்தாக்ஷியாகும். இன்றுங்கூட முஸ்லிம் சமஸ்தானங்களில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அரசியல் துறையில் ஐக்கியமாய் இருந்து வருவதைக் காணலாம். அவ்வாறே ஹிந்து சமஸ்தானங்களிலும் முஸ்லிம் குடிகளுடன் ஹிந்து சகோதரர்கள் அன்யோன்யமாய் இருந்து வருகின்றனர். இத்தகைய ஐக்கிய வாழ்வுக்கு முக்கியமான அம்சம் ஒருவர்மீதொருவருக்குள்ள நல்ல நம்பிக்கை தான். பிறர் நம்மிடத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ, அப்படியே நாமும் முதலில் நடந்து காண்பிக்க வேண்டும். இரு தரத்தினரின் மனமும் ஒன்றுபட்டால் தான் அன்பு ஏற்படும்.

மேலே இதுகாறும் கூறிவந்த பிரச்னைகளெல்லாம் இந்தியர் வாழ்வில் எக்காலும் சாசுவதமாய் இருந்து தீருமென்று சொல்வதற்கில்லை. மேற்கூறிய பிரச்னைகளில் சில தீர்ந்து போயிருக்கலாம்; சில தீர்ந்து போகக்கூடிய நிலைமையில் இருக்கலாம். வேறு சில தீர்த்து வைப்பதற்குரிய ரீதியில் இருக்கலாம். ஆகவே கால, தேச, வர்த்தமானத்துக் கேற்ப அப் பிரச்னைகளெல்லாம் கட்டாயம் தீர்த்துப் பைசல் செய்ய வேண்டியவைகளாகும்.

மேற்கூறிய பிரச்னைகளில் சில வகுப்பு வித்தியாசங்களின் காரணமாகவும், வேறு சில அரசியல் துறை அபிப்பிராய பேதங்களின் காரணமாகவும் இருக்கலாம். ஆனால், பொது விஷயத்தை மதத்தின் மூலாதாரக் கொள்கையுடன் பிணைத்து வைப்பது கூடாது. ஒரு மதத்தின் லக்ஷியத்தை இன்னொரு மதத்தின் நலனுக்காக யாரும் விட்டுக் கொடுக்கமாட்டார்கள். அவ்வாறே முஸ்லிம்களும் தங்கள் இஸ்லாமிய சம்பிரதாயத்தை ஹிந்துக்களின் தாக்ஷண்யத்திற்காக விட்டுக் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால், மதத்தின் மூலாதார அடைப்படையின் மீது நிறுவப்படாத சில்லறை விஷயங்களை—அதாவது தேசீய, சமுதாய, அரசியல் கூட்டுறவு சம்பந்தமான பொது விஷங்களில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்து சமூகமாய் வாழலாம். இத்தகைய ஜனசாரக் கூட்டுறவை எம்மதமும் வேண்டாமென விலக்காது.

ஒரு தேசத்தில் வாழும் இரு பிரதம சமூகங்கள் பொருளாதாரத்திலும் அரசியல் துறையிலும் கூடி வாழ்வது தேச முன்னேற்றத்திற்கு அத்தியாவசிய

மாகும். உலக ஆரம்ப காலம் முதல் இத்தகைய கூட்டுறவுதான் இயற்கையாகவும் பரம்பரையாகவும் நடைபெற்று வந்துள்ளது. இந்நாட்டில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரையொருவர் அணுகாமல் தனித்து உயிர் வாழ்வதென்பது முடியவே முடியாது. நகரத்திலாயினும், கிராமத்திலாயினும், எங்கு பார்த்த போதிலும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கலந்து வியாபாரம் செய்து கொண்டிருப்பதையும், தொழில் நடத்திக் கொண்டிருப்பதையும் சகஜமாய் காண்கிறோம். இவர்கள் தினசரி ஒருவரையொருவர் அணுகி, கொள்வினை கொடுப்பினை செய்வதையும், ஒருவர் தொழிலில் இன்னொருவர் சகாயம் செய்வதையும் பார்க்கின்றோம்.

நாட்டில் யாரோ சில அநாமதேயப் பேர்கள் தூண்டிவிடும் சச்சரவுக்காகவும், யாரோ சில வகுப்புப் பித்தேறிய தலைவர்கள் கட்சிப் பிரிப்பதை யனுசரித்தும், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தத்தம் வர்த்தகத்திலும் தொழிலிலும் இருந்து வரும் கூட்டுறவு நேசத்தை விட்டு விடுவது சாத்தியமான காரியமா? உயிர் வாழ்க்கைக் குரிய சாதனத்தைத் தேடிக் கொண்ட பிறகு தானே மற்ற பிரச்னைகளை கவனிக்க முடியும்?

## பகிஷ்காரம் வேண்டாம்

ஒரு சிலர் காங்கிஸ் தலைவர்கள் மீது சில பழிகளைச் சுமத்தி, காங்கிரஸ் ஹிந்துக்களுடைய ஸ்தாபனமென்றும், முஸ்லிம்களெல்லோரும் ஹிந்துக்களுடன் எத்தகைய சம்பந்தமும் வைத்துக் கொள்ளக் கூடாதென்றும் துவேஷப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

முஸ்லிம்கள் ஹிந்துக்களைப் பகிஷ்கரிப்பதால் இந்துக்களுக்கொன்றும் நஷ்டம் ஏற்படமாட்டாது. ஆனால், அதற்குப் பழிக்குப் பழியாய் இந்துக்கள் முஸ்லிம்களைப் பகிஷ்கரிக்க ஆரம்பித்து விடுவார்களானால், பின்னர் முஸ்லிம் சமூகத்தின் வாழ்க்கை சங்கடத்தில்தான் வந்து முடியும்.

உணவுப் பொருள் விற்பனை செய்யும்பெரிய பெரிய கடைக்காரர்கள் முதல் வண்ணார, அம்பட்ட, சக்கிலிய வேலைகள் செய்யும் தொழிலாளர்கள் வரை நம் நாடுகளில் பெரும்பாலும் இந்துக்களாகவே தான் இருக்கின்றனர். அது மட்டுமல்ல. முஸ்லிம்களுடைய பயிர்களிலும், விவசாய நிலங்களிலும் கூலிக்குப் பாடுபட்டு வேலை செய்பவர்கள் பெரும்பாலும் ஹரிஜனங்களாகிய இந்துக்கள் தான். முஸ்லிம்கள் எங்கேயோ மூலைக்கொன்றாக வைத்திருக்கும் பலசரக்குக் கடைகளில் காசு கொடுத்து சரக்கு வாங்கிச் செல்பவர்கள் பெரும்பாலும் இந்துக்கள் தான்; முஸ்லிம் வியாபார ஸ்தலங்களில் இந்து குமாஸ்தாக்கள் எண்ணற்றோர் காணப்படுகின்றனர். முஸ்லிம் வியாபாரிகளுடைய சரக்குகளை வண்டிகளில் ஏற்றிச் சென்று, ஏற்றுமதி—இறக்குமதி செய்யும் பாட்டாளி மக்கள் பெரும்பாலும் இந்துக்களே யாவர்.

நாட்டு நிலைமை இங்ஙன மிருக்க, முஸ்லிம்கள் இந்நாட்டில் இந்துக்களைப் பகிஷ்கரித்து (அதாவது இந்து சகோதரர்களின் அவசிய உதவி யின்றி) எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? எங்ஙனம் வியாபாரம் செய்ய முடியும்? எவ்வாறு தொழில் நடத்த இயலும்? எவ்வண்ணம் விவசாயஞ் செய்ய இயலும்?

இந்துக்களும் முஸ்லிம்களும் கூட்டுறவின்றி ஒரு க்ஷணமும் வாழ்க்கை நடத்த முடியாது. இந்து நிலச்சுவான்களிடம் எத்தனையோ முஸ்லிம் குடியானவர்கள் வேலை செய்து பிழைக்கின்றனர்; முஸ்லிம் ஜமீன்தார்களிடம் எத்தனை இந்து விவசாயிகள் பயிரிட்டு மாசூல் பெற்று ஜீவிக்கின்றனர். இவர்கள் பிரிந்து வாழ்வது முடியுமா?

சில இடங்களில் இந்துக்கள் அதிகாரிகளாயிருக்கின்றனர்; வேறு சில இடங்களில் முஸ்லிம்கள் அதிகாரிகளாயிருக்கின்றனர். அங்கெல்லாம் ஒருவரையொருவர் பகைத்துக் கொண்டால் என்னென்ன அனர்த்தங்கள் நேரிடுமென்பதைச் சிறிதே யோசித்துப் பாருங்கள். முஸ்லிம் வக்கீல்களிடம் இந்து வழக்காளிகள் அணுகாதிருக்க முடியுமா? இந்து வக்கீல்களிடம் முஸ்லிம் தாவாதார்கள் உதவி கோராதிருக்க முடியுமா? நீதிஸ்தலத்தில் நியாயஞ் சொல்லும் ஹிந்து ஜட்ஜின் தீர்ப்பை முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ளாதிருக்க முடியுமா? முஸ்லிம் நீதிபதியின் தீர்ப்பை இந்துக்கள் அலக்ஷியஞ் செய்துவிட முடியுமா?

இங்ஙனம் தேசத்து வாழ்க்கை முறையில் இந்துக்களும் முஸ்லிம்களும் சகஜமாய் அன்யோன்யமாய் பழகி, பாலும் சர்க்கரையும் போல் கலந்துறவு பூண்டிருப்பதைப் பார்க்கின்றோம். யாரோ சில தலைவர்கள், தங்களுக்குள் புகையும் விரோதத்தின் காரணமாய் பொது மக்களிடையே வகுப்பு துவேஷத்தைப் புகட்டுவதைக் கருதி, இந்துக்களும் முஸ்லிம்களும் வேற்றுமை பூண்டு சீரழிவது புத்திசாலித்தன மாகுமா?

# முடிவுரை

இறுதியாக என் சுதேசத்து வாழ்க்கைச் சகோதரர்களாகிய இந்து, முஸ்லிம்க ளெல்லோரது திருச் சமூகத்தில் ஒரு விஷயத்தை வேண்டிக்கொள்கிறேன்: இதுகாறும் யான் மேலே கூறி வந்த பிரச்னைகளையும், விவாதங்களையும் நடுநிலைமை வகித்து ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற முறையி லல்லாமல், பொதுவாக ஒரு இந்தியன் என்ற ரீதியில் உற்றுணர்ந்து சீர்தூக்கிப் பாருங்கள்.

மேற்கூறிய விஷயங்களை யெல்லாம் யான் ஒரு கட்சியைச் சேர்ந்தவ னென்ற தோரணையிலோ, எவருடைய தூண்டுதலின் மீதோ, யாருடைய தாக்ஷண்யத்துக் குட்பட்டோ எழுதவில்லை. உண்மையான ஒரு முஸ்லிம் என்ற முறையில், முஸ்லிம் சமூகத்தின் நன்மையைக் கருதியும், தாய் நாட்டின் க்ஷேமத்தை யுன்னியும், என் அறிவிற்கும் ஆராய்ச்சிக்கு மெட்டிய விஷயங்களைப் பொதுப்படையாய் எடுத் தியம்பி யுள்ளேன்.

உண்மையை எடுத்துச் சொல்லி எச்சரிக்க வேண்டியது தெரிந்தவர் கடமை; அதன் சாதக பாதகத்தை உய்த்துணர்ந்து, உத்தம வழிப்படி நடந்து கொள்ள வேண்டியது மக்கள் கடமை. "விஷயத்தை யெடுத்துக் கூறுபவர் எத்தகையவர் என்பதைப் பார்க்காதீர்கள்; அவர் எடுத்துக் கூறும் விஷயங்கள் எத்தகையவை என்பதை யுணர்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள்" என்பது அரபு முதுமொழி. இந் நியதியின்படி

இந் நூலின் விஷயங்களைக் கிரகித் தொழுகுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

தேச, அரசியல், சமூக, வாழ்க்கை சம்பந்தமான பல விஷயங்களை இந்நூலில் கூறியுள்ளேன். இதை யெல்லாம் யான் வரிசைக் கிரமப்படி தொகுத்துக் கூற வில்லை. ஞாபகத்துக்கு வந்த விஷயங்களைக் கொண்டு அவசரமாய் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, சில விஷயங்கள் கூறப்படாமல் விடப்பட்டிருக்கலாம்; அல்லது அநாவசியமான விஷயங்கள் கூறப்பட்டிருக்க லாம். அன்பர்கள் இத்தகைய மனுஷ்ய சுபாவக் குறை களைப் பொருட்படுத்தாமல், பொதுப்படையான விஷ யங்களை மட்டும் கிரகித்துக் கொண்டு, இந்நாட்டில் இந்துக்களும் முஸ்லிம்களும் இதர வகுப்பாரும் ஒரு மனப்பட்டு ஒத்து வாழ்ந்து, தேசமும் சமுதாயமும் அன்னிய ராதிக்கத்தை விட்டு விடுதலை பெற்று இனிது வாழ வழி கோலுவார்களாயின், அதுவே அன்பர்கள் எனக்குப் புரிந்த பேருபகார மாகும்.

# சில பொது நீதிகள்

பொதுவாய் ஜன சமுதாய சமாதான வாழ்வை வற்புறுத்திக் குர்ஆன் வேதத்திலிருந்து சில திருவாக்கியங்களை முஸ்லிம் ச கோதரர்களுடைய ஞாபகத்துக்காகவும் புனிதத்துக்காகவும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்:—

"இறைவனின் நல்லடியார்கள் பூமியில் அமைதிகரமாய் நடந்து கொள்வார்கள். அறிவிலிகளுடன் அவர்கள் எதிர்ப்பட்டாலும் (சமாதானத்தைக் கருதி) 'சலாம்' (சாந்தி) கூறுவார்கள்." —புர்கான் 8

"தெய்வ நம்பிக்கை (ஈமான்) கொண்டவர்களே! ஸமாதான வழியில் பிரவேசியுங்கள். (அமைதியைக் கெடுக்கும்) சைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற தீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்குக் கடும் பகைவனவான்." —பகரா 208

"ஜனங்களுக்கு நல்வார்த்தைகளையே கூறுங்கள்." —பகரா 10

"தான தருமஞ் செய்யவும், ஜனங்களுக்கிடையில் சமாதானத்தை நிலைநிறுத்தவும் ஒருவன் பிறருக்குப் போதனை செய்து, அதில் அவன் ஆண்டவனின் திருப்தியையே கருதியிருப்பானுனல், அல்லாஹ் அவனுக்கு மகத்தான நன்மைகளை யருளுகின்றான்." —புர்கான் 18

"தீமையை நன்மையைக் கொண்டு நிவர்த்தி செய்வீராக!" —மூமினூன்

"நன்மையும் தீமையும் சரிசம மாகா. தீமையை நன்மையான முறையில் நிவர்த்தியுங்கள். அதனுல் நன்மை பயக்கும். உமக்கும் உமது பகைவனுக்கு மிடையிலுள்ள பகைமையைப் போக்கி, நேசத்தை யளிக்கும்........."

—ஸஜ்தா

"நன்மைக்காகவும், சத் ஒழுக்கத்துக்காகவும் ஒருவருக் கோருவர் உதவி புரிந்துகொள்ளுங்கள். தீமைக்கும் அட்டுழியத்துக்கும் உதவிக் கோள்ளாதீர்கள்."

—மாயிதா 10

"இறைவனே! எங்களுக்கும் எங்கள் சமூகத்துக்கு மிடையே சத்தியத்தைக் கோண்டு வெற்றி யருள்வாயாக. வெற்றி யளிப்பவர்களில் சிரேஷ்டமானவன் நீயே."

—நஹல்

லோகபானு பிரஸ், கோமளீஸ்வரன்பேட்டை, சென்னை.

அரசியல் அறிவூட்டும் ஆண்மைக்கதிர் பரப்பும்

# லோகசக்தி பிரசுரங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை | 0 | 8 | 0 |
| வின்ஸ்டன் சர்ச்சில் | 0 | 6 | 0 |
| ஜவஹர்லால் கட்டுரைகள் | 0 | 3 | 0 |
| மௌலானா அபுல் கலாம் ஆஸாத் | 0 | 2 | 0 |
| படுகளத்தில் பாரததேவி ! | 0 | 4 | 0 |
| திரிபுரம் வழி காட்டுமா ? | 0 | 4 | 0 |
| சுதந்திர வீரன் சுபாஷ் சந்திர போஸ் | 0 | 4 | 0 |
| ரஷ்யாவைப் பார் ! | 0 | 4 | 0 |
| காதலின் வெற்றி | 0 | 3 | 0 |
| சமூகத்யாகி | 0 | 3 | 0 |
| வங்கப் புரட்சி | 0 | 2 | 0 |
| புரட்சி வீரன் எம். என். ராய் | 0 | 2 | 0 |
| அந்தமான் | 0 | 2 | 0 |
| விடுதலை முரசு | 0 | 2 | 0 |
| பாரத கோகிலம் சரோஜனிதேவி | 0 | 2 | 0 |
| சீன வீரன் மா-சி-யங் | 0 | 2 | 0 |
| வீரகேசரி கோவிந்த வல்லப பந்த் | 0 | 1 | 0 |
| பீஹார் வீரன் ஸ்ரீ கிருஷ்ண சின்ஹா | 0 | 1 | 0 |
| ஜெர்மனி தொழிலாளர் நரகம் | 0 | 1 | 0 |
| எத்தனை அடி நிலம் ? | 0 | 1 | 0 |
| லீலா விநோத ஹிட்லர் | 0 | 1 | 0 |

நான்கு ரூபாய் அனுப்பினால் எல்லா புத்தகங்களும் தபால் செலவின்றி அனுப்பப்படும்.

**லோகசக்தி பிரசுராலயம்,**

மௌண்ட் ரோட் போஸ்டு, சென்னை.